80—பக்கங்கள்.

ஓம் பரப்பிரம்மணே நம:

அமிர்தகுணபோதினி

பாடசாலை ஆசிரியர்கட்கும் மாணவர்கட்கும் மிகவும் ஏற்றதாய்,
அறிவை விளக்கி உற்சாகத்தைப் பெருக்கவல்லதான விகடமும்,
ஆநந்தகரமான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்களும்
நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள உயரிய மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு

“எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
புதுச் சுவை.] திண்ணிய ராகப் பெறின்.” (திருக்குறள்.) [மிகு அநுபவம்.

கமலம்-9.	சென்னை பவ௵ கார்த்திகை௴ 1௳	இதழ்-104.
Vol. 9.	1934-ம்௵ நவம்பர்௴ 17௳	No. 104.



“ஸர்வலோக நாயகனாகிய” ஸர்வேச்வரனை ஸதா பிரார்த்திக்கக் கடவோம். எவருடைய நாமஸ்மரணையானது ஸர்வ பாபங்களையும் போக்கடிக்குமோ, எவருடைய பாதபத்மங்கள் ஸம்ஸாரமாகிய ஸாகரத்தில் விழுந்து தவிக்கும் ஜனங்கட்குத் தெப்பக்கட்டை போலாகி, முக்தி யென்னும் கரையை யடைவிக்குமோ, எவருடைய ஸேவையானது நித்ய ஸந்தோஷத்தைத் தந்து கொண்டிருக்குமோ, அப்படிப்பட்ட கல்யாண குணங்களையுடைய பகவானை நாம் ஸதா தியானம் செய்யக்கடவோம்.

ஃ

“மனுஷ்யனுக்குக் கௌரவத்தைக் கொடுப்பது” பொருளல்ல, ராஜ்யமுமல்ல; அவன் அனுசரிக்கும் தர்மமும் செய்யும் நற்கருமங்களுமேயாம். ஸீதை தன் பிதாவாகிய ஜனகனிடம் சென்று சுகமாயிருப்பதை விட்டு, தன் பர்த்தாவே பாக்கியமென்று அவருடைய அடியைப் பின்தொடர்ந்து வனத்திற்குச் சென்றாள். இதைப்பற்றி அருணாசலக் கவிராயர் கூறியதை ஒவ்வொரு ஸ்திரீயும் கவனிக்கவேண்டும்.

“கூடி நாம் உகந்திருக்கும் காடு—துறைவில்லா என் மிதிலை நாடு”.
“காடு நீர் இல்லாத வீடு—கால் வைத்தேறியும் என் பாடு”

என்று ஜானகி சொல்லியிருக்கிறாள்.

ஃ

"கப்பலின் பாய்மரத்தில்" உட்கார்ந்துள்ள காக்கை ஸமுத்திர மத்தியில் பெருங்காற்றடிக்கையில் எப்பாடு படுமோ அதைப்போல் ஸம்ஸார மாகிய ஸாகரத்தில் வருந்தும் ஜீவனாகிய காக்கை தவித்து அழுகிறது. அதைக் காப்பாற்றுவது கடவுளின் கடமை. நிற்க, காக்கை தன்னுடைய புத்திஹீனத்தால் தென்னந்தோட்டத்திலிருந்து கப்பலின் பாய்மரத்தில் போய் ஏறிக்கொண்டது. கப்பல் அசையும் வரை—காற்று வீசத்தொடங்கும் வரை—காக்கைக்கு இருந்த ஸந்தோஷத்துக்குக் கணக்குண்டோ? இல்லை. அதுபோல, ஸம்ஸாரமாகிய ஸாகரத்தில் ஜீவன் அலைந்து திரியும்போது, மரணமாகிய பெருங்காற்று வருமளவும்—சிற்றின்பங்களெல்லாம் நிலை யென்றே தோன்றும். மரணம் ஸமீபிக்கத் தொடங்கினால், அப்போதுதான் ஜீவன் கடவுளை ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பிப்பான். இவ்விதமின்றி, எப் போதுமே ஸத்கருமங்களை ஈசுவரப்பிரீதியாகச் செய்துவரின் சிற்றின்பங்க ளில் சித்தம் செல்லுமோ? மனம் பாபவழியைப் பற்றுமோ? அந்தோ! ஜீவராசி களுக்கு—பின்னால் வரும் துக்கம் கண்ணுக்குத் தெரியவொட்டாமல் கடவுளே செய்துவிடுகிறார். ஏன்? அவரிடம் நன்றி பாராட்டாத மாந்தருக்கு அது ஒரு சிக்ஷையா யிருக்கட்டுமென்பது ஸ்வாமியின் சித்தம் போலும்.

ஃ

"பக்திவலையிற் படுவோன் காண்க" என்றார் மணிவாசகப் பெருமான். பக்தி, ச்ரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், பாதஸேவனம், அர்ச்சனம், ஸக்யம், ஆத்ம நிவேதனம், தாஸ்யம் என ஒன்பது வகைப்படும். இன்னும் ஸாத்வீக, ராஜஸ, தாமஸ குணங்கள் வாயிலானும் பக்தியைப் பிரித்து ஆராய்ந்திடலாம். சான்திரங்களில் கூறப்பட்டிருக்கும் வழியிலேயே கடவுளை வழிபடவேண்டும். அவ்வாறு வழிபட்டால் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்குவித புருஷார்த்தங்களும் கிட்டுவது மிகவும் சுலபம். பகவானைப் பரவசத்துடனும் பக்தி செய்கையில் தன்னையும் உல கத்தையுமே மறந்துவிடும்படியான நிலையில் சித்தத்தை முற்றிலும் பரந்தாம னிடத்தில் செலுத்தும்படியான பக்குவத்தைப் பெறவேண்டும். நாடக மேடையில் ஒருவர் அரசனாக நடிக்கிறார். கீழே உட்கார்ந்து காட்சி பார்ப்ப வர்களின் இடையே உள்ள அந்த நடிகரின் குழந்தை அழுது தொந்தரை செய்கின்றது. நாடகமேடையிலுள்ளவர் தன் குழந்தையின் கூச்சலை அறி யாதவர்போலவே நின்று தனது ராஜவேட நடிப்பைச் சரிவரச் செய்வதி லேயே கருத்தாக இருந்துவிடுகிறார். அவ்விதமே, பகவானைத் தியானிக்கை யில் என்ன தடைகளேற்பட்டபோதிலும் அதில் தன் மனதைச் சம்பந்தப் படுத்தாமல், தனது சித்தத்தைக் கடவுளிடமே செலுத்தி ஒரே உறுதியிலிருக் கப் பழகவேண்டும்.

ஃ

"தான் எனும் அகந்தை" 'தெயித்திரியோபனிஷத்'தில் பின்வரும் விஷயம் காணப்படுகிறது. அதாவது:—பரப்பிரம்மமானது, இந்திராதி

வீடுகட்டும் மேஸ்திரிகளிற் சிலர் சிற்றாள்களுக்கு எட்டணாவீதம் வீட்டுக் காரனிடம் கூலிபேசி வாங்கிக்கொண்டு, பிறகு சிற்றாள்களுக்கு ஐந்தணாவீதம் கொடுத்துவிட்டு, பாக்கியைத் தாங்கள் எடுத்துக்கொண்டு ஏமாற்றுகிறார்கள். சில மேஸ்திரிகளுக்குப் படிப்பு வாசனையே வெகு பூஜ்யம்.

தேவர்களுக்குத் தங்கள் சத்துருக்களை ஜெயிக்கப் போதுமான சக்தியைக் கொடுத்து அவர்களை ஜெயிப்பித்தது. ஆனால், அந்தத் தேவதைகளோ அவருடைய உதவியை முற்றும் மறந்துவிட்டார்கள். அது அவர்களுடைய வெற்றியேயென்றும், கீர்த்தி யென்றும் இறுமாந்தனர். அத்தேவதைகளெல்லாம் ஒன்றுகூடி யிருக்கையில், தேவேந்திரன் தனது வச்சிராயுதத்தைப்பற்றியும் தனது வெற்றியைப்பற்றியும் புகழ்ந்து பேசிக்கொண்டான். அக்கினியும் தனது வெற்றியைப்பற்றிப் பிரதாபம் வீசினான். வருணனும் அப்படியே செய்தான். அப்போது அவர்கள் கூட்டத்திற்கெதிரே ஒரு விசித்திரமான உருவம் தோன்றிற்று. ஆனால், அந்த உருவம் இன்னதென்று தெரியவில்லை. என்ன மாய உருவம் அது! தேவதைகளெல்லாரும் அந்த உருவம் என்னவென்பதை அறிந்து வரும்படி தூது போக்கினார்கள். அக்கினியும் அதன் அருகே சென்று "நீ யார்?" என்று கேட்டான். அந்த விசித்திர ரூபியும் பதிலுக்கு "நீ யார்?" என்று அந்த உருவம் வினவியது. "ஆகாயம் பூமி முழுவதையும் கொளுத்திவிட என்னாலாகும்" என்றான். அந்த அதிசயரூபி ஒரு வைக்கோலை எடுத்து அக்கினிக்குக் காட்டி, "எதோ இதைத் தஹித்துவிடு, பார்க்கலாம்" என்றது. அக்கினியோ தன் வலுவெல்லாம் கொண்டு தஹிக்கப் பார்த்தும் முடியாமற் போய்விட்டது. பிறகு வருணன் போய் "நான் எதையும் பூமியில் அழுத்திவிடுவேன்" என்றான். அதற்கு ஒரு பூண்டை எடுத்துக் காட்டி "இதை அழுத்திவிடு பார்க்கலாம்" என்றது. வருணன் தன்னாலானமட்டும் முக்கி முக்கிப் பார்த்தும் முடியாமல் வந்துவிட்டான். பிறகு வாயுவும் அங்கு தோன்றினான். "நான் யாவற்றையும் ஆகாயத்தில் பறக்கடிக்க வல்லேன்" என்றான். "எதோ இந்தப் பூண்டைப் பறக்கடி பார்க்கலாம்" என்றது அந்த மாயா ரூபியும். அவனாலும் அது முடியவில்லை. பிறகு எல்லாம் ஓடிவந்து இந்திரனிடத்தில் செய்தி சொல்ல, அவனும் வந்து பார்ப்பதற்குப் புறப்பட்டு சமீபம் வருகையில், அந்த மாய உருவம் மறைந்து, ஒன்றான 'ஞான உருவே' அங்கு வந்து நின்றுகொண்டு, "இந்திரா, இங்கு தோன்றியுள்ள உருவந்தான் உங்களுக்கு வெற்றி கொடுத்த பரப்பிரம்மம். ஆனால், அதை நீங்கள் மறந்துவிட்டீர்கள்" என்றது. ஸகலமும் பகவத் ஸங்கல்பமாக நடக்கையில், மனுஷ்யன் 'தான்' எனும் அகந்தையோடு தன்னால்தான் யாவும் கைகூடிற்றென்று கர்விக்கிறான். அதனால் அவன் மனதில் மாசு படிகிறது. அவ்விதமின்றி, கடவுளின் கருணையை யறிந்து கொண்டு அவரைப் புகழ்வானாகில், தன்னடக்கமுள்ளவனாய் உயரிய மனோபாவனையைப் பெற்றுப் பரிசுத்தனாகின்றான்.

ஃ

"எண்ணமும் அனுபவமும்" எண்ணத்துக்கும் அனுபவத்துக்கும் காரண சம்பந்தம் உண்டு. அந்த எண்ணமே அநுபவத்தில் உட்பட்டிருக்கிறது. அனுபவத்தில் உள்ள விஷயங்களின் அடியாக ஏற்பட்டதே எண்ணம். அது வெளியிலிருந்து வந்ததல்ல. ரோஜா புஷ்பம் என்ற எண்ணம் எதிலிருந்து உண்டாகிறது? தாமரைப் புஷ்பத்திலிருந்து அது உண்டாகுமா? இல்லை.

வேண்டிய காலத்தில் ஒருவரை வானமளாவப் புகழ்வதும், தேவையில்லாதபோது கெட்டிக்காரர்களையும் மட்டித்தனமுள்ளவர்களெனத் தூஷிப்பதும் சிலரது வழக்கம்.

அது ரோஜாவிலிருந்தே உண்டாகும். சின்னஞ்சிறுத்த ரோஜா மலரே பென்னம்பெருத்த ரோஜா மலரை நினைப்பூட்டுகிறது. அந்த எண்ணம் ரோஜாவிலே தங்கியிருக்கிறது. எண்ணத்தில் தோன்றும் ரோஜா வாஸ்தவத்திலுள்ள ரோஜாவிலிருந்தே உண்டானது. அவ்விதமே, பகவத்பக்தியினாலுண்டாகிற ஆநந்த அனுபவம் பரமாத்மாவைப்பற்றிய எண்ணங்களை நமது மனத்தில் தோற்றச் செய்து, பகவானுடைய கலியாண குணங்களைத் துதிக்கும்படி தூண்டுகின்றது. அனுபவம் நல்வினைத்தோடிருப்பின் எண்ணங்களும் நல்லனவாகவே நிலவி நலம் விளைவிக்கும்.

ஃ

"உலகமேன்பது பலசரக்குக்கடை போன்றது." அதனிடம் வெகு உயர்ந்த வஸ்துவும் காணப்படும்; மிகத் தாழ்ந்த பொருள்களும் மிகுத்துக் கிடக்கும். நல்லதும் அகப்படும்; பொல்லாததும் எதிர்படும். ஒவ்வொன்றினுடைய குணகுணங்களை யறிந்து தக்கதைக் கொள்ளவேண்டும். அவை யாவன:—உண்மையே பேசவேண்டும். நமது கடமைகளைச் செய்யவேண்டும். நன்றாய்ப் படிக்கவேண்டும். பெரியோர்களை மதிக்கவேண்டும். பெற்றோர்களுக்கு உட்படவேண்டும். வயது முதிர்ந்தோர்களைப் போற்ற வேண்டும். அதிதியைக் கௌரவப்படுத்தவேண்டும். நல்ல ஹிருதயத்தோடும் கருத்தோடும் கொடுக்கவேண்டும். நன்றாய் ஆலோசித்துக் கொடையளிக்கவேண்டும்; அதை மிக்க வணக்கத்துடனும் தரவேண்டும். மாசற்ற ஒழுக்கங்களையே அனுஷ்டிக்கவேண்டும். மற்றவர்களிடமுள்ள சிலாகிக்கத்தக்க நடைகளையே கொள்ளவேண்டும். தமக்குச் சந்தேகம் நேரிடும் விஷயங்களில் நிதானமான பகுத்தறிவுடன் ஆராயவேண்டும். எதையும் அறியவேண்டும் என்னும் ஆவல் பெருகவேண்டும். உண்மையை அலக்ஷியம் செய்யக்கூடாது. நமது கடமைகளை நிராகரிக்கலாகாது. நம் க்ஷேமத்தைக் கவனியாதிருத்தல் கூடாது. நமது செல்வத்தைப் பொருட்டாக எண்ணுமலிருத்தல் தகாது. நாம் படித்தவைகளையும், நாம் அடைந்த உபதேசங்களையும் கவனிக்கவேண்டும். வைதிகக் கடமைகளை அலக்ஷியம் செய்யவொண்ணுது. மற்றவர்களின் பொருள்களில் ஆசை வைக்கலாகாது. கடவுளை அன்புடனும் பூஜை செய்யவேண்டும். இரக்கத்துடன் பிச்சை யிடவேண்டும். எதிலும் தீர்க்காலோசனை செய்யவேண்டும். சாஸ்திரங்களைப் பின்பற்றவேண்டும். உன்னை ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய். உன் க்ஷேமம் அபிவிர்த்தியாகும்வண்ணம் கடவுளிடம் நம்பிக்கை வை. பிறரை உன்னைப்போல் நினை. எவருக்கு எது எது திருப்தியையும் நன்மையையும் அளிக்குமோ அவற்றைச் செய்து கடவுளை வணங்கு. பிரசங்கங்களின் மூலமாய் உண்மையை எங்கும் பரவச் செய். எல்லோரிடத்திலும் அன்பாயிரு. சுத்தனாயிரு. கோபம் கொள்ளாது மன்னிக்கும் தன்மையுடையவனாயிரு. உன் மனதையும் இந்திரியங்களையும் அடக்கு. குரூரமில்லாதவனாயும், கிடைத்தது போதுமென்ற திருப்தியுள்ளவனாயும், பெரியோர்களுக்குப் பணிசெய்யும் தன்மையுள்ளவனாயும் இரு. உன்னையே நன்கு அறிந்துகொள். எதையும் பிறருடன் பங்கிட்டு அனுபவி. கடவுளைப்பற்றிப் பிறரிடம் தெரிந்துகொள். மற்றவர்க்கு அவரைப்பற்றிப்

சகோதரர்களைக் காட்டிக்கொடுக்கவும் துன்புறுத்தவும் சுக்ரீவ-விபீஷணர்கள் அகப்படுவது சுலபம்;

பிரஸங்கம் செய். கடவுளை எப்போதும் நினைத்துக்கொள். அவருக்குப் பணி செய். வணக்கமாயிரு. உன்னுடைய உண்மையான நண்பர் கடவுளென்றே எண்ணு. இவ்விதம் நடந்து கீழ்ப்படியும் ஒவ்வொருவனும் பகவானை நெருங்கும் சாதகங்களைச் செய்தவனாகின்றான்.

ஃ

"யாவரும் யாவும் சிவமாய் விளங்குமேமக்கு." உலகமுழுவதும் ஹரியையே கண்டு களியா நிற்பர் ஞானிகள். எம்மதமும் சம்மதமெமக்கு. யாவரும் பெரியோரெமக்கு. அந்நியன் பத்நி தாயே யெமக்கு. வேசைத் தாசியும் சோதரியே யெமக்கு. யாங்கள் படிப்பன யாவும் பரமசிவ மந்திரம். யாங்கள் கருதுவன யாவும் நாராயண வடிவம். யாங்கள் காண்பன யாவும் எம்பெருமான் கண்ணன் திருக்கோலம். யாங்கள் சாம்பவமணிகளைக் காணில் அடியேம் சைவரென்போம். யாங்கள் ஸ்ரீ பாகவத சிரோமணிகளைக் காணில் யாங்கள் வைஷ்ணவ பாதநூளியேயென்று அன்புடன் கூறுவோம். யாங்கள் மகம்மதியப் பெரியர்குழாம் சேரும் பள்ளிவாசல்களைக் கண்டால் சிவ சிவ என்பம். கிறிஸ்துவ ஸ்திரீ புமான்கள் கூடியிருக்கிற கிறிஸ்துவ தேவாலயங்களைத் தெரிசிப்போமானால், ஹரி ஹரி என்பம். பிரஹ்மாகாரத்தை யாண்டும் எவரிடத்தும் தரிசியா நிற்பம். சர்வம் விஷ்ணுமயம் ஜகத். சர்வம் சிவமயம் ஜகத். ஏகமேவா த்விதீயம் பிரஹ்ம: சத்யமேவ ஜயதே!

ஒரு கண்ணில் வெண்ணெய்! ஒரு கண்ணில் சுண்ணாம்பு!

தனது மனைவி ஒரு குற்றம் செய்தால் அதற்கென்று ஒரு பேச்சும், தனது சகோதரியாவது மகளாவது அதே குற்றத்தைச் செய்தால் அதற்கென்று வேறே பிரத்தியேகமான பேச்சும் பேசுகிறான். தன் மனைவியினுடைய ஒரு அல்ப குற்றத்தைப் பிரமாண்டமாக்கித் தான் அவளைத் தள்ளிவிட்டு மறு விவாகம் செய்யப் போகிறேனென்று சொல்லிப் பல பல முறுக்குகள் செய்கிறான். அதே குற்றத்தின் பொருட்டுத் தன் மகளை விவாகம் செய்த மருமகன் தன் மகளைத் தள்ளிவிடப் போவதாய்ச் சொன்னால், உடனே மன வருத்தமடைந்து ஆத்திரப்படுகிறான். தன் குமார்த்தி அதிக வேலை செய்தால், அவ்வளவு வேலை அவளால் செய்ய முடியுமா? என்கிறான். தன் மனைவி எவ்வளவு வேலை செய்தாலும், தான் கேட்டதும் கூப்பிட்டதும் வராமற்போனால் சிடுசிடுத்துக் கோபத்தால் துள்ளுகிறான். என்னே மனிதனின் போக்கு! மனைவி என்றால் அடிமையா?

அமிர்தகுணபோதினி

பவ௵ கார்த்திகை௴ 1௳

மகா அலெக்சாந்தரது வெற்றிகளின் முடிவு.

முதலில் எங்கணும் நிகரிலா வெற்றிகள் படைத்து, முடிவிலே ஆசைகள் சிதறியவர்.

ஆதியில் இந்து தேசத்தின்மேல் முதல் முதல் படையெடுத்த போர்வீரன் யார்? மாஸிடன் நகரத்து அரசனும், ஆசியாக் கண்டத்தை ஜெயம்கொண்டவனுமாகிய மகா அலெக்சாந்தரைப்போல் அவ்வளவு அதிகமாய் உலகமெங்கும் பிரசித்தமான புகழ்பெற்று, அதை நெடுங்காலம் நிலைநிற்கச் செய்தவர் மற்றெவருமில்லை. அவன் கிரீஸ் தேசத்தில் பிறந்தவனும், அத்தேசம் மிக்க மேன்மை பெற்றிருந்த காலத்தில் இருந்தவனுமாகையால், அவனுடையபெயர் ஒருபோதும் மறந்துபோவதற்கிடமில்லை. அலெக்சாந்தர் ஒரு மகாராஜாவும், பல பெருங்குணங்கள் அமைந்த போர்வீரனுமாயிருந்தானாயினும், பல பொல்லாத குணங்களும் அவனிடத்தில் குடிகொண்டிருந்தன. ஒரு காரணமுமின்றிக் கேவலம் சுயநன்மைக்காகவே அவன் அநேகம் மன்னுயிர்களை வதைத்தான்; பல பட்டணங்களைப் பாழாக்கினான். அலெக்சாந்தர் தனது அந்தியகாலத்தில் எவ்வளவோ எண்ணங்களையும் ஆவல்களையும் மனதிற் கொண்டிருந்தானாயினும், மிகச் சிறுவயதில் மரித்துப்போனான். அவனுடன் அவன் கருத்திற் கொண்ட சூழ்ச்சிகள் அனைத்தும் அழிந்துபோயின. அலெக்சாந்தர் இறந்ததற்குப் பிறகு இந்தியாவின்மீது மகம்மதியர் ஜெயம் கொள்ளுமளவும், பதினைந்து நூற்றாண்டுவரை இந்தியா தேசத்துக்கும் இதன் மேற்கிலுள்ள மற்றத் தேசங்களுக்கும் சம்பந்தமில்லாமலேயிருந்தது. அலெக்சாந்தர் இறந்த இரண்டொரு வருஷங்களுக்

உற்றாரும் உறவினரும் சிநேகிதர்களும் மற்றோரும் ஒருவரிடம் பொருள் உள்ளவரையில்தான். பொருள் போனபிறகு கண்டாலும் பேசார், அழைத்தாலும் வாரார்.

கெல்லாம் அவனது பிள்ளை, மனைவி முதலிய குடும்பத்தார் அனைவரும் கொல்லப்பட்டனர். அவன் கீழிருந்த அதிகாரிகள் தம் தம் கைக்கெட்டிய வரையில் அவன் ராஜ்யத்தைப் பிடித்துக்கொண்டார்கள். அவன் பேரும் பிரசித்தியுமே யொழிய மற்றவை யெல்லாம் போய்விட்டன. பிற்காலத்தில் உடனே அவனுக்குச் சரியானவன் ஒருவனும் உண்டாகவில்லை யாதலால், அவன் பேர் பின்னும் அதிகமாய்ப் பிரகாசிக்கத் தொடங்கியது.

ஃ

அலெக்சாந்தர் என்பவன் மாஸிடன் தேசத்து அரசனாகிய பிலிப்பு என்பவருடைய குமாரன். அவன் கிறிஸ்து பிறக்க 354-வருஷத்தில் பிறந்தவன். கிரீஸ் தேசம் ஐரோப்பாக் கண்டத்தின் கீழண்டைக்கோடி; ஒரு சிறிய கடற்கிளையினால் ஆசியாவினின்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அரசராகிய பிலிப்பு வெகு திறமையுடன் ஆட்சிசெய்து, பிறகு ஆசியாவின்மீது படையெடுப்பதற்கு வேண்டிய முயற்சி செய்துகொண்டிருக்கும்போது ஒரு சதிகாரனால் கொல்லப்பட்டார். அப்பொழுது அவருடைய குமாரனாகிய அலெக்சாந்தர் இருபதுவயது பிள்ளையாயிருந்தாலும், உடனே தன் தந்தை நினைத்த காரியங்களை நிறைவேற்ற ஆரம்பித்தான். கிறிஸ்து பிறக்க 334-ம் வருஷத்தில் பிறதேசங்களின்மேல் படையெடுத்துச் செல்லத் தொடங்கினான். 34500-காலாள்களையும், 4500-குதிரை வீரர்களையும் கூட்டிக்கொண்டு புறப்பட்டுத் தன் மாஸிடோனியா தேசத்துக் கரையோரமாகவே சென்று, ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் மத்தியிலுள்ள ஹேல்லேஸ்பாண்டு என்னும் குறுகலான ஜலசந்தியைப் படவுகளைக்கொண்டு தாண்டினான். தாண்டினவுடனே அத்தேசத்து அதிகாரிகள் சிலர் இவனுடைய சேனையைப்போல மூன்று பங்கு அதிகமான சேனைகளோடு வந்து எதிர்க்க, அவர்களுடன் போர் தொடுத்து ஜெயித்து அநேகரைக் கொன்று பலரைச் சிறையாய்ப் பிடித்தான். பின்பு அவனை எதிர்ப்பார் ஒருவருமில்லை.

ஃ

நிர்ப்பயமாய்ச் சிற்றாசியாவில் புகுந்து வழியிலுள்ள நகரங்களை யெல்லாம் ஒவ்வொன்றாய் ஜெயித்து, ஜெயித்த இடமெல்லாம் புதிய அதிகாரி ஒருவனை ஸ்தாபித்துக்கொண்டே சென்று, சிற்றாசியாவின் தென்கிழக்கிலுள்ள ஸிரியாதேசத்துக் கோட்டைவாயி

பவுன் ரூ. 13-4-0-க்கு விற்றகாலமுமுண்டு, பவுனுக்கு ரூ. 15-என்று திட்டம் ஏற்படுத்தி நாணயமாக வழங்கப்பட்டதுமுண்டு. இப்போது ஒரு நகை செய்வதென்றால் ஒரு பவுனுக்கு ரூபாய் $22\frac{1}{2}$-கொடுக்கும்படியிருப்பதில் பெருந்திகைப்பாயிருக்கிறது. 13-ரூபாய்க்குப் பதில் 22-ரூபாய் தரவேண்டியிருக்கிறது.

லென்று சொல்லப்பட்ட ஒரு மலைத்தொடரைக் கடந்து ஸிரியா தேசத்தில் புகுந்தான். அங்கு இரண்டு லக்ஷம் சேனைகளோடும் எதிர்த்த டரையஸ் தோற்கடிக்கப்பட்டு, தன் பெண்ஜாதி பிள்ளைகளையும் பகையாளி கையில் ஒப்புவித்து ஓடும்படியானது. பின், பாதி ராஜ்யம் தருவதாகவும் ஸமாதானமாய்ப் போகலாமென்றும் டரையஸ் சொல்லியனுப்ப, அதற்கு அலெக்சாந்தர் இணங்காமல், வந்தால் முழுதும் வரட்டும், இல்லாவிட்டால் ஒன்றும் வேண்டாமென்றான். கடைசியில் ஸிரியா தேசம் முழுமையும் ஜெயிக்கப்பட்டது. டமாஸ்கஸ் என்னும் பெரிய பட்டணமும் பிடித்துக்கொள்ளப்பட்டது. அவ்விடத்திலுள்ள பிரஸித்தமான மற்றப் பட்டணங்களையும் பிடித்துக்கொண்டு யூதர்களுடைய நகரமாகிய எருசலேம் பட்டணத்திற்குச் சென்றான். அவனைக் கண்டவுடனே அந்நகரத்தார் தாமே ஓடிவந்து அடிபணிந்து அவனுக்கு அடைக்கலமானார்கள். ஏனெனில், வெகுநாளைக்கு முன்னமே, 'இனி ஒரு காலத்தில் கிரீஸ் தேசத்தரசன் ஒருவன் வந்து பாரசீக ராஜ்யம் அனைத்தையும் அழிக்கப்போகிறான்' என்பதாய் அவர்களுடைய ஸ்வாமி சொல்லியிருந்தாராம். அந்தப்படியே அவன் வந்துவிட்டானென்று அவர்கள் எதிர்கொண்டுபோய், அவனைப்பற்றித் தங்கள் புஸ்தகத்தில் எழுதியிருப்பதைக் காட்டினார்கள். அது கண்டு அவன், அந்தத் தெய்வத்தைக் கும்பிட்டு, அங்கிருந்த பிரஸித்தமான கோயிலையும் குடிகளையும் அழிக்காமல் அப்புறம் போய்விட்டான்.

ஃ

பின்பு, அவன் அங்கிருந்து தென்முகமாகத் திரும்பி எகிப்து தேசம் சென்று அதைக் கைப்பற்றினான். அத்தேசத்தார் பூனை முதலியவற்றையும் புசிக்கும் தன்மையர். அங்கே ஒரு வனாந்தரத்திலிருந்த பிரஹஸ்பதியின் ஆலயத்தைப் போய்த் தரிசித்து, மத்தியதரைக் கடலின் கரைக்குச் சமீபத்தில் நாளைக்கும் அலெக்சாந்திரியாவெனப் பேர் பெற்று வழங்குகின்ற ஓர் பெரிய பட்டணத்தையும் கட்டுவித்தான்.

ஃ

அதற்குப் பிறகு, கீழ்நாடுகளையும் ஜெயிக்கவேண்டுமெனக் கருதி அங்கிருந்து புறப்பட்டு, ஐபிராத்து, திகிரிஸ் என்னும் நதிகளைக் கடந்து செல்லும்போது அதற்கு அருகாமையில் டரையஸினுடைய சேனை மறுபடியும் எதிர்ப்பட, உடனே பெரும்போர் உண்டா

யிற்று. அந்தப் போரில் நேரிட்ட கொலைகளுக்கு அளவில்லை. கடைசியில் அலெக்சாந்தரே ஜெயங்கொண்டான். பாரசீகர்களுடைய சேனை முற்றிலும் நாசமாக்கப்பட்டது. அந்தச் சமயத்தில் டரையஸ் பயந்து பகைவர்களுக்குப் புறங்காட்டியோட, அவன் கீழ்உத்தியோகஸ்தன் ஒருவன் அவனைக் கொலை செய்துவிட்டான். ஐபிராத்து நதிக்கரையில் பாரசீகர்களுடைய ராஜதானியாகிய பாபிலன் நகரமானது பின்பு ஒரு வருத்தமுமின்றிப் பிடித்துக்கொள்ளப்பட்டது. இவ்வாறாகக் கிரீஸ் தேசத்தார் கடைசியிலே பாரசீகம் முழுமைக்கும் தாங்களே அதிகாரியானார்கள்.

ஃ

மிகவும் பராக்கிரமசாலியாகிய அவ்விளஞ் சிங்கத்திற்கு இவ்வளவு மாத்திரமே போதவில்லை. நினைத்த காரியம் நினைத்தபடி கைகூடக் கூட, அதனிடத்திலுள்ள ஆசை மேன்மேலும் விருத்தியாவதேயன்றித் தணிவதில்லையல்லவா? பின்னும், கிழக்கே ஆப்கானிஸ்தானம், இந்துதேசம் வரையில் சென்று ஜெயம்பெற்று வரவேண்டுமென்று அவன் அதற்கு வேண்டிய ஸன்னாகம் செய்தான். இவ்விதம் செல்லுகையில், வழியிலுள்ள சூசா, பேர்ஸிபோலிஸ் என்னும் இரண்டு பட்டணங்களையும் பிடித்துக்கொண்டான். முதற் பட்டணத்தில் மிகுந்த செல்வம் அகப்பட்டது. மற்றொன்றைத் தீயிட்டுக்கொளுத்தி அங்கிருந்த அழகான அரண்மனை முதலியவற்றை அழித்துவிட்டான். பிறகு, அங்கிருந்து பாரசீக தேசத்தின் வழியாய்ச் சென்று, மார்க்கத்திலுள்ள பல நகரங்களையும் பார்த்துக்கொண்டு பாக்திரியா தேசத்தின்மேலும், பக்காரா, சாமர்க்கந்து ராஜ்யங்களின் மேலும் படையெடுத்து அங்குள்ள ஜனங்களையெல்லாம் ஜெயித்தான். மொகலாய வமிசத்தை ஸ்தாபித்து டில்லிமா நகரில் நெடுநாள் அரசு செலுத்திய பேபர் சக்ரவர்த்தி பக்காரா தேசத்தினின்று வந்தவரேயாம். பலவாறு சொல்லியென்ன? அலெக்சாந்தர் எங்கெங்கே சென்றானோ, அங்கங்குள்ள ஜனங்களை ஜெயித்துப் பிரதான நகரங்களைப் பிடித்துக்கொண்டு, அவ்விடங்கள்தோறும் தன் பேர் விளங்கப் புதிய பட்டணங்களைக் கட்டுவித்துக்கொண்டே போயினான்.

ஃ

பிற்பாடு அவன் கபிலதேசத்திற் புகுந்து அங்கிருந்து இந்தியாவின்மேல் படையெடுக்க முயன்றான். அக்காலத்திற்கும் இக்காலத்திற்கும் இடங்களின் பெயர் முதலியனவெகுவாய் மாறுபட்டுப் போயிருப்பதால், அவன் இத்தேசத்துக்கு வந்தவழி இன்னதென்று

ஒரு கட்சியைச் சேர்ந்த பத்திரிகையின் அபிப்பிராயம் அந்தக் கட்சியைச் சேராதவர்களுக்குப் பிடிப்பதில்லை.

சரியாய்ச் சொல்லக்கூடவில்லை; ஜலலபாத்து மூலமாய் மலைகளைக் கடந்துகொண்டு பிஷாவர் வந்து சேர்ந்ததாய்த் தோன்றுகிறது. அம்மலை வழியில் இப்பொழுது இருப்பதுபோலவே முரட்டுக் காபில ஜனங்கள் பலர் வாஸம் செய்துகொண் டிருந்தார்களாகையால், அவர்களை எதிர்த்து ஜெயித்துக்கொண்டே அவன் அப்புறம் போகவேண்டியதாயிற்று. இத்தேசத்தில் புகுந்தவுடனே சிந்து நதிக்கரைமேலுள்ள பிரஸித்தமான பட்டணமொன்றைப் பிடித்துக்கொண்டு ஆட்டக் அல்லது ஆடங்கபுரியண்டை அவன் நதியைத் தாண்டி பாஞ்சால தேசத்திலுள்ள ராவல் பிண்டி மாகாணத்தில் பிரவேசித்தான். இரண்டாயிரம் வருஷங்கட்கு முன்னே நமது தேசத்தில் நடந்த இந்தச் சரித்திரத்தைக் கேட்க எவருக்கும் வெகு விநோதமா யிருக்குமன்றோ? ஸிந்து நதியைத் தாண்டி வருமாறு அவ்விடத் தரசனாகிய தாக்ஸிலிஸ் என்பவன் அலெக்ஸாந்தருடன் நேசம் செய்துகொண்டு வழிவிட்டானாயினும், அதற்கிப்பாலுள்ள நாட்டரசனாகிய போரஸ் அல்லது புருஷோத்தமராஜன் ஜீலம் நதியைத் தாண்டிச்செல்ல அவனுக்கு வழி விடக்கூடாதென்று அவனுடன் அமர் தொடுக்கச் சித்தமாயிருந்தான். (நமது தேசத்தார் முற்காலத்தில் ஜீலம் நதியை 'விதஸ்தை' என வழங்கினார்கள்.)

ஃ

அலெக்சாந்தர் புருஷோத்தமனுடைய சேனையைத் தோற்கடித்து அவனையே சிறையாய்ப் பிடித்தான். ஆயினும், பிடிபட்ட ராஜனைச் சந்தித்து மரியாதை செய்து, மறுபடி அவனை அத்தேசத்திலேயே ஸ்தாபித்து, கூர்ஜர தேசத்தின் வழியாக வந்து சீனுப் என்கிற சந்திரபாகா நதியைத் தாண்டி, அங்கிருந்து அப்பால் சென்று ரவியென வழங்குகிற ஐராவதிநதியையும் கடந்து வந்து, அங்கங்கே எதிர்த்த சிலரை ஜெயித்துக்கொண்டு, அமிர்தஸரசு நகரத்து வழியாக வந்தான். அவ்வளவு மாத்திரமேயல்ல; அதற்கு இப்பாலுள்ள விபாஸை, சதத்துரு நதிகளையும் கடந்து, அங்குள்ள தேசங்களையெல்லாம் ஜெயித்துக்கொண்டு, யமுநாநதியைத்தாண்டிக் கங்கையையும் கடந்து, பின்னர் கப்பலேறி ஆப்பிரிக்கா கண்டத்தைச் சுற்றிக்கொண்டு சுதேசம்போய்ச் சேரவேண்டுமெனக் கருதினான். அவ்வண்ணமே அவன் நமது தேசத்தின் மத்தியில் வந்து அயோத்தியை, மதுரை, மகதம், ஹஸ்தினாபுரம் முதலிய அக்காலத்திற் பிரசித்த

தேள்கடிக்கு மருந்து:—தேள் கொட்டியவுடன் எருக்கம்பாலைச் சந்தனக்கல்லில் விட்டுக் கருப்புப் பெருங்காயத்தை யரைத்துக் கொட்டிய இடத்தில் பூசிவிட்டு அனலில் கொஞ்சம் காட்டவும். கால்மணி நேரத்திற்குள் நெறி ஏறாமல் வலி உடனே நீங்கி விடுகிறது. இம்மாதிரி உபயோகித்துப் பார்க்கவும்.

மான ராஜ்யங்களைப் பார்த்திருந்தால் வெகு அதிசயமாயிருக்கும். அவ்வெண்ணம் மாத்திரம் அவனுக்குக் கைகூடி வராமற்போயிற்று. ஏனெனில், இன்னும் கிழக்கே போக ஒப்பாமல் அவன் சைனிகர்களெல்லாம் கலகம் செய்ய ஆரம்பித்தனர். அதனால், வேறு விதியின்றித் திரும்புகாலில், மூல்த்தான் எனவழங்கும் மூலஸ்தானம் முதலிய இரண்டோரிடங்களில் போர் செய்யும்பொழுது அலெக்சாந்தருக்குப் பிராணபாயமான சில துன்பங்கள் நேரிட்டன. ஆயினும், அவன் எப்படியோ தப்பித்துக்கொண்டு சென்றான். வழியில் அன்னம் தண்ணீர் கிடைக்காமல் அநேக படைகள் மாண்டுபோயின. போனதுபோக மிகுந்த சேனை கடைசியாக ஐபிராத்து நதியண்டை ஒன்றாய் வந்து கூடிற்று. அவ்வளவோடு அந்த மகா யுத்தம் அடங்கிற்று.

ஃ

இவ்வாறு, அலெக்சாந்தர் வெற்றி பெறும்படி தன் ராஜதானியை விட்டுப் புறப்பட்டு மறுபடி பாபிலன் நகரம் வந்து சேருமளவும் அவன் சென்ற தூரத்தை அளவிட்டுப் பார்த்து, 19,000 மைலுக்கு அதிகம் இருக்கின்றதெனக் கணக்கிட்டிருக்கிறார்கள். இவ்வளவு நேடிதாகப் படை யெடுத்தவர் எக்காலும் எவருமில்லை. இப்படையெழுச்சி மிகவும் ஆச்சரியகரமானது. இவ்வாறு சுதேசம் போய்ச் சேர்ந்தும் அலெக்சாந்தர் அவ்வளவோடு அடங்கியிருக்கவில்லை. இப்பூமண்டலத்துள்ள தேசங்களுள் சிறந்த தேசமான இந்தியாவை ஜெயிப்பதற்கு வேண்டிய உபாயங்களைச் செய்ய ஆரம்பித்தான். பூமண்டலத்தில் பல இடங்களிலும் புதிய பட்டணங்களைக் கட்டத்துவக்கினான். கப்பல்கள் சமைக்க ஆரம்பித்தான். அவன் செய்த முயற்சிகளுள் பல மிகச் சிறந்தவைகளும், ஒரு பெரிய சக்கரவர்த்திக்கு ஏற்றவைகளுமாகவே யிருந்தன. அப்பொழுது அவனுக்கு வயது முப்பத்தோன்றேயாயினும், அவன் எங்கும் எதிரி எவனும் இல்லாதவனாயினான். அவனது பராக்கிரமத்தினாலும், வெற்றிகளாலும், உலகத்தார் அனைவரும் பிரமித்து நின்றார்கள். அவனுடைய உபாயங்களெல்லாம் கைகூடி வருபவை போலவே யிருந்தன. ஆயினும், ஐயோ! அவற்றுள் ஒன்றேனும் நடந்தேறவில்லை. அவ்வளவு போர்களுக்கும் பெரும் துன்பங்களுக்கும் தப்பின அவ்வீரன் கடைசியில் சுரம் கண்டு பாபிலன் நகரத்தில் இறந்துபோனான். அவனுக்குப் பிறகு அவனுடைய சந்ததியார்கள் சிம்ஹாஸனம் ஏறி அரசாட்சி செய்தனரோ? இல்லவேயில்லை. அவன் இறந்த இரண்டொரு வருஷங்களுக்கெல்லாம் அவன்

தங்கள் கடையில் ஒன்றை வாங்க வந்தவர்களின் மனம் புண்பட்டுப் போகும்படி வெடுவெடுத்துச் சிடுசிடுத்துக் கடுகடுக்கிறார்கள். இது பிறரது சாபத்திற்கு உட்படவைக்குமேயன்றி நன்மை நல்காது.

மனைவி மக்கள் குடும்பத்தார் யாவருமே கொல்லப்பட்டுப் போயினர். அவனது தேசமும் ஆங்காங்கிருந்த அதிகாரிகளால் கைக்கொள்ளப்பட்டு ஸர்வ நாசமாயின. எருசலேம் நகரத்தில் யூதர்களுடைய வேத புஸ்தகத்திலே, அலெக்சாந்தர் படையெடுத்துப் பாரசீக ராஜ்யத்தை ஜெயிப்பான் என்று எழுதியிருந்ததாக மேலே சொன்னேமே; அதன்மேல் சில பக்கங்களுக்கு அப்பால், சில காலத்திற்குப் பிறகு அவன் ராஜ்யம் இப்படிச் சின்னபின்னமாகப் போய்விடுமென்றும் எழுதியிருந்ததாம். அலெக்சாந்தர் மகாவீரனாயினும் அவனால் அழிந்த குடும்பங்களும், அரசுகளும், நகரங்களும், ஜனங்கள் அடைந்த துன்பங்களும் அபரிமிதமாதலின், அந்த சாபம்தான் இவ்வாறு அலெக்சாந்தரின் பின் சந்ததியார்கூட இராஜ்யம் ஆளாதபடி செய்துவிட்டதோ யாதோ! முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும் என்பது பொய்யல்ல.

ஃ

அலெக்சாந்தர் அரசாண்ட தேசங்கள்யாவை என்பீர்களோ? அவனது பிதிரார்ச்சிதமான மாஸிடன் ராஜ்யமும், அவன் ஜெயித்த நாடுகளென மேலே நாம் சொன்ன தேசமனைத்தும் அவனாட்சிக்குள் இருந்தன. ஆயினும், அவன் யாவற்றையும், அவன்தான் நேராகவே ஆண்டுவரவில்லை. முற்றும் தன் வசமான சிலவற்றில் தனக்குப் பிரதிநிதிகளை ஏற்படுத்தி அத்தேசத்து வருமானங்களைக் கொண்டு சேனைகளைக் காப்பாற்றுவது முதலிய காரியங்களை நடத்திவந்தான். மற்றத் தேசங்களில் அவ்வவ்விடத்து அரசனையே நிலைக்கச் செய்து கப்பம் வாங்கிவந்தான். அவன் எவ்வளவு சுருக்காய்த் தலையெடுத்துப் படையெடுத்து அரசாளத்தொடங்கினானோ, அவ்வளவு சுருக்கில் அவனாட்சி அழிந்துபோனமையால், அவன் ராஜ்யத்துக் குடித்தொகை இவ்வளவென்றும், வருமானம் இவ்வளவென்றும் எவ்வகையினும் கண்டறியக்கூடவில்லை. ஆயினும், அது ரோம ராஜ்யத்தைவிட மிகவும் சிறியது என்பதற்குச் சந்தேகமில்லை. வாழ்நாளில் எத்துணைச் சிறப்புடனே வாழ்ந்தாலென்ன; எவ்வளவு வெற்றிகள் பெற்றாலென்ன; நினைத்த காரியங்களெல்லாம் நிறைவேறித் தலைமை ஸ்தானத்தை யடைந்தாலென்ன; தன் காலத்துக்குப் பிறகும் தான் அமைப்பித்தவைகளும், தேடிய சொத்துகளும் மேன்மேலும் விருத்தியடைந்து, தன் குடும்பத்தார் ஓங்கிச் செழித்துவாழக் காண்பதுதான் சிரேஷ்டதரமான நிலைமையாகும். அதுதான் கிடைத்தற்கரிய பாக்

ஒரு மதத்தில் சொல்லியிருக்கும் மூலக்கொள்கை ஒருவிதம். அந்த மதத்தினர்கள் நடப்பது வேறொரு விதம். இப்படி முறை பிசகிச் செய்யலாமா வென்றால், அது நெடுங்காலமாக அனுஷ்டானத்தில் வந்துவிட்டதென்று பளீர் எனக் கன்னத்தில் அறைந்து பதில் சொல்லப் புறப்பட்டுக்கொள்கிறார்கள்.


கியமுமாகும். அந்தப் பாக்கியத்தைப்பெற விரும்பினல், தர்ம புத்தியுடனும் தயாள சிந்தையுடனும் கடவுளுக்குப் பயந்து நன்னெறியில் நடந்துகொண்டால்தான் முடியும். அவ்விதமின்றி, இரக்கமற்ற சிந்தையுடன் கொடுமையில் நிற்போர் தேடும் செல்வங்கள் யாவும் பிற்காலத்தில், அலெக்சாந்தர் கைப்பற்றிய ஐசுவரியங்களும் ராஜ்யங்களும் அவனது சந்ததியாருக்கு இல்லாமல் சின்னபின்னமானது போலவே முடிந்து, பின்சந்ததியாருக்கு எதுவும் கிடைக்காமலே ஏமாற நேரும். இரக்கமற்றுக் கடின சித்தமாகச் சுயநலவுருவாய் நடப்பதின் பலன், இறைவனின் சாபத்துக்கு ஆளாகவைத்துத் தமக்கு இருப்பதையும் பிற்காலத்தில் இழக்கும்படி செய்துவிடுகிறது. எப்போதுமே தீமைக்குத் தீமை, நன்மைக்கு நன்மை. இதுவே உலக இயல்பு; இதுவே உலகம் கற்பிக்கும் பாடமுமாம்.

இல்வாழ்க்கையில் தன்னல மறப்பு.

மனைவி தனது ஸ்நானத்தின்போது, தன் கடியார கொலுசைக் கணவனின் கழுத்தில் இட்டுச் செல்கிருள். அந்தக் கொலுசு தனக்கு அழகாயிருக்கிறதெனக் கணவன் நினைப்பினும், தானே அதை அணிய விரும்பாமல் மனைவி வந்து கேட்கையில் சந்தோஷமாகவே கொடுத்துவிடுகிருன். கொடுத்துவிட்டோமே யென்ற கவலை தோன்றுவதில்லை. மனைவிக்கு அணிவித்து அழகு பார்க்கவே நெஞ்சம் விரும்புகின்றது. தன் பெண்ணைத் தன் குமாரனுக்கு விவாகம் செய்யாமல் எங்கோ வேறொருவருக்குத் தந்து, இன்னொரிடத்துள்ள ஒரு பெண்ணைத் தன் மகனுக்கு முடிப்பித்து, இவ்வாருகப் பரஸ்பரம் கொடுத்து வாங்குதல் என்பது—பிறருடனும் சேர்ந்து வாழவேண்டுமென்ற நற்பாடத்தைப் போதிப்பதாகின்றது. தன் சுகத்தைவிட, தன் குடும்பத்திலுள்ளவர்களின் சுகத்தையே வீட்டுத் தலைவன் நாடுதலானது தன்னலமறுப்பின் ஞானத்தைக் கற்பிக்கின்றது. ஞானத்துடன் நுட்பமாய் ஆராயின், இல்வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு வேதாந்த பாடமாய் விளங்கும்.

ஒரு வர்ணனை:—"நாகரீகங் கொழித்த தேசத்தில்,—புத்தர் பிறந்த பூமியில்,—ஆத்மஞான இல்லத்தில்,—காந்திஜீயின் ஜன்மஸ்தலத்தில்,—கவிச்சக்ரவர்த்தி ரவீந்திரர் பிறந்த நாட்டில்,—மற்றும் இன்று உலக வல்லரசுகளால் காதல் மூச்சோடும் ஒன்ருேடொன்று போட்டிபோடும் இந்தியாவில்,——"

"கேசரி"—(நகரதூதன்)



ஸ்ரீமதி சரோஜினி தேவி.

ஸ்ரீமதி சரோஜினி தேவியார் சென்னைக்கு வந்திருந்தார். அவர் பேச்சுவன்மையில் சிக்கிப்போய் அவருடனே சாப்பாடுகூட இல்லாமல் திரிந்தேன். அவரது பரந்த முகமும், அகன்ற கண்களும், விசாலமான நெற்றியும், கம்பீரமான பார்வையும், மிடுக்கான நடையும் பார்த்தால் பரவசப் படுத்தாமல் போகாது. சொற்கள் வீரம் செறிந்தவை. தொனி வெங்கலத் தொனியாகும். கேட்பவர் மனதைக் கரைத்து இதயத்தை இடித்து, ஆண்மையைப் புகுத்தி, வீரத்தை எழுப்பி, கிளர்ச்சி செய்கிறது.

ஃ

சரோஜினி தேவி சென்னையை விட்டுச் சென்று வாரமாயிற்று. ஆயினும், அவர் என் இதயத்துள் எழுப்பிவிட்ட கிளர்ச்சியும், வீரமும், ஆண்மையும், இன்னும் தணிந்தபாடில்லை. அவர் பேசிய வீர வார்த்தைகள் இன்னும் என் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. கழி ஊன்றிச் செல்லும் கிழவன்கூட ஆண்மைபெற்று, வீரம்கொண்டு சுதந்திரதாபம் பெற்றுத் தடியின்றி நடக்க வல்லவனாவன் என்பது மிகையாகாது.

ஃ

கூட்டத்தில் உட்காரவேண்டியதுதான். அவர் பேச ஆரம்பித்து முடியும்வரையில் நான் என்னை முற்றிலும் மறந்தேன். அவருடைய வீரம் செறிந்த வார்த்தைகள் ஒன்றின்பின் ஒன்றாக வந்து இதயத்தைத் தாக்கின. அவருடைய அவ்வார்த்தைகளின் உள் அர்த்தத்தை முற்றிலும் கிரகிப்பதற்குள் சுதந்திர தாகத்தோடு ஆண்மையுடன் கலந்து எழும் சொற்கள் என்னைக் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்துவிட்டன. என்னை நான் மறந்து நின்று வீடு திரும்பும்போதும் அவருடைய வார்த்தைகளின் ஓசையே காதில் ஒலித்துக்கொண்டிருந்தனவேயொழிய, என்ன பேசினார் என்பதை ஞாபகப்படுத்திக்கொள்ள முடியவில்லை. இவ்விதமே நான் மாத்திரமில்லை; மற்றவர்களும் பரவசம் எய்தினர் என்று கேள்வியுற்றேன்.

ஃ

ஒரு கூட்டத்தில் "என்னை எவ்வளவு நேரம் பேசவேண்டும் என்கிறீர்கள்" என்றார். கேட்டது ஸ்ரீமான் சத்தியமூர்த்தியை. அவர் 15-நிமிஷம் என்றார். மற்றவர்கள் ½-மணி நேரம் என்று கூச்சலிட்டனர்

மனைவிக்கு அடிக்கடி மயக்கம் வந்தால், அடிக்கடி இடையில் உண்டாகிற கலகம் மனஸ்தாபங்களும் அந்த மயக்கத்துடன் தீர்ந்துவிடுமாம். மனைவி உணர்ச்சியற்றுக் கிடக்கும்போது எல்லா ஆத்திர கோபமும் அடங்கிவிடுமாம்.

அவர் சரி என்று ஆரம்பித்தார். என் பக்கத்தில் இருந்தஒருவர் திடீரென்று ஒரு மணி நேரம் பேசவேண்டும் என்றார். தேவிக்கு உடனே கோபம் பொங்கிற்று. 'என்ன உளறுகிறீர், கண்டிப்பாக நடவுங்கள்' என்றார். இவ்வளவு தைர்யத்தோடு வேறு எவர் சொல்ல முடியும்? அவர் விஷயத்திற்கு வந்தபிறகு விளையாடுவது கூடாதெனும கண்டிப்பான வழக்கமும் கொண்டவர் என்பதும் அவ் வார்த்தைகள் மெய்ப்பிக்கவில்லையா?

ஃ

மற்றொரு இடத்தில் (நான் உள்பட) அவர் கையெழுத்துப் பெறுவதற்காக மாணவர்கள் சூழ்ந்துகொண்டனர். அவர் இருவருக்குக் கையெழுத்துப் போட்டுத் தந்தார். அதற்குள் மற்றவர்கள் ஒருவர்மேல் ஒருவர் விழுந்தடித்துக்கொண்டு புத்தகங்களை நீட்டினர். அம்மையார், உடனே, "உங்களுக்கு எவ்விதம் நடக்கவேண்டுமென்று தெரியவில்லை. ஒவ்வொருவராக வாருங்கள், கையெழுத்திடுகிறேன்" என்றார். பிள்ளைகள் கேட்கவில்லை. கோபம் பொங்கிற்று. "சரி, யாருக்கும் போடமாட்டேன்" என்று போய்விட்டார். பிள்ளைகள் வழி விடாது மேலே விழுந்தனர். பக்கத்திலிருந்த ஸ்ரீமான் A. P. பாத்ரோ—"உங்களைக் காக்க நான் இருக்கிறேன்" என்றார். (சொன்னது விளையாட்டாக என்று கொள்ளலாம்.) அம்மையார் தயங்கவில்லை. நிமிர்ந்து ஸ்ரீமான் பாத்ரோவைப் பார்த்து, "என்னைக் காப்பாற்ற யாரும் வேண்டாம். நான் ஒண்டியாகவே சமாளிப்பேன்"—என்றார். பாத்ரோ, சிரித்தார். இந்த சம்பவம் விளையாட்டாக இருந்தபோதிலும், விளையாட்டுக்குக்கூட அவர் கோழையில்லை என்பதைக் காட்டவில்லையா? வேறொருவராக இருந்தால் ஸ்ரீ பாத்ரோவைத் திருப்திபடுத்தச் சிரித்துவிட்டு, 'மிக்க வந்தனங்கள்' என்று வந்தனம் செலுத்துவார்களல்லவா?

ஃ

அவருடைய சொற்பொழிவுகளில் India(இந்தியா) எனும் வார்த்தையை அவர் வாயால் கேட்கவேண்டும். 'இந்' (In) என்பதை உரக்கக் கூவி அழுத்தி, 'தீயா' (dia) என்று அதிர்ச்சியோடு நிறுத்துவார். அது அதிர் வெடி போடுவதுபோல் ஒரு இன்பமும் கூடி இந்தியாவையே நிமிர்த்தி நடுநாயகமாக வைக்கும் போலும்! 'காங்கிரஸ் ஒருபோதும் சாகாது' என்பதற்குக் காரணங்கள் அவர் எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. அவர் சொல்லும் வார்த்தையைக் கேட்டாலே உண்மையில் காங்கிரஸ் செத்திருந்தால்கூட உயிர்பெற்று எழுந்துவிடும்போலிருக்கிறது. ஒவ்வொரு வார்த்தையிலும் வீரம், ஓசை, இனிமை, அன்பு, சுதந்திரம், தியாகம், அனுபவம், ஆண்மை, சக்தி, உணர்ச்சி, கிளர்ச்சி, சாந்தம்,—முதலிய எல்லாம் பொருந்தி இருக்கின்றன. இவ்வளவும் பொருந்திய வார்த்தையைக் கேட்கும் பாக்கியம் பெறுவது கடினம். மகாத்மாவை, "சிறிய மனிதர்" "மெலிந்த மனிதர்" என்று கூவி

ஒரு மனிதனுடைய குணத்தை நட்பு முறையில் அறிகிற சந்தர்ப்பமுமிருக்கிறது. ஒருவனை விரோதித்து விலக்கி அவனுடைய குணத்தை யறிகிற வேளையும் இருக்கிறது. தன்னால் வெறுக்கப்பட்ட ஒருவன் தன்னைக் கண்டும் பேசாதபோது, தான் அதற்கு அதிகமாகவே சந்தோஷிக்கவேண்டி யிருக்கிறது. தன்னுடன் அவன் பேசவில்லையே என்று ஆத்திரப்படாமல், அவ்விதம் அவன் பேசாததைத் தனக்கு ஒரு லாபமாகவும் கருதவேண்டும்.

யழைப்பது, அவருடைய ஆழ்ந்த பக்தியை விளக்கிக் காட்டுகின்றது. மாதர்திலகம் என்று அவரைச் சொல்வதும் மகாத்மாவே. இவர்பால் மகாத்மா அன்புகொண்டு நிற்கிறார் என்பது எதற்கு என்பதை, நேரில் இவருடைய சொற் பொழிவைக் கேட்ட பின்பு, தாமாகவே தெரிந்து கொள்வர். P. G. தலசேகரம்.
24-8-34.

[சென்ற ஸஞ்சிகையிலேயே பிரசுரிக்கப்படவேண்டிய இக்கடிதம் இடமின்மையால் தாமதமாயிற்று. ப—ர்.]

மனிதனுடைய உடம்பின் புண்களிலிருந்து வடிந்தொழுகும் சீழ் இரத்தங்களை விரும்பி ஈக்களும் கொசுகுகளும் அப்புண்களில் மொய்த்து அவனுக்குக் கஷ்டத்தை யுண்டாக்குவதுபோல, பணக்காரனுடைய தனத்தை யபகரிக்கவேண்டி துராத்மாக்கள் அவனைச் சுற்றி மொய்க்கிறார்களாம். பணம் என்னும் சீழினால் அவன் படும் பிரயாஸம் கொஞ்சமல்லவாம்.

புது இன்ஷூரன்ஸ் கம்பெனிகள்.

1900-வருஷத்தில் மரணபண்டு என்றும், கல்யாண பண்டு என்றும் பல பல கிளம்பி, மாதந்தோறும் ஒரு ரூபா செலுத்திவரின் மரணத்திற்குப் பிறகு 500-ரூபாய் வரையில் பெறலாமென்றும், வைத்திய பரிசோதனை யில்லையென்றும், 60-வயதுவரை சேரலாமென்றும் கூறி மயக்கி ஜனங்களிடமிருந்து பணம் பெற்று ஏமாற்றிவிட்டன. இப்பொழுது பண்டு என்ற பெயரை நீக்கி "இன்ஷூரன்ஸ் கம்பெனி" என்ற புதுப்பெயருடன் சில தோன்றியிருக்கின்றன. வைத்திய பரிசோதனை கிடையாதாம். ஜனங்கள் இவற்றை நம்பித் தங்களின் பணத்தை இழக்கவேண்டாம். டாக்டரின் வைத்திய பரிசோதனையில்லாத இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் பல ஒழுங்குடன் நடப்பதற்குரியனவாகாது. வைத்திய பரிசோதனை நடந்து டாக்டர் சம்மதம் கொடுத்தால்தான் சேர்ப்போமென்ற இன்ஷூரன்ஸ் கம்பெனிதான் நம்பிக்கையுள்ளது. ஏமாறாமல் எச்சரிக்கையுடனிருங்கள்.

பத்திரிகையின் அபிப்பிராயமானது சில சமயங்களில் பொதுஜன அபிப்பிராயமாகவும். சில சமயங்களில் பொது ஜனங்களைத் தமது அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ளுமாறு பத்திராசிரியர் செய்யும் சூழ்ச்சியாகவும் இருக்கலாம். சில சமயங்களில் பத்திரிகையின் அபிப்பிராயம் ஒரு தினுசாயும், அதைப் படிப்பவர்களின் அபிப்பிராயம் வேறொரு மாதிரியாகவும் பேதப்படலாம்.

ஜாதிக்காயின் பூர்வ சரித்திரம்.



எல்லோருக்கும் தெரிந்த ஜாதிக்காய்க்கு ஒரு பூர்வ சரித்திரம் உண்டெனில், அதை வியப்புடன் எவரும் கவனிப்பர். வெனிஸ் வர்த்தகர்கள் மிகப் பிரசித்தராயிருந்த காலத்தில், அவர்கள் கப்பலேறி நெடுந்தூரம் யாத்திரை செய்து, கீழ்த் தேசங்களினின்றும் ஜாதிக்காய் முதலிய வாசனைப் பொருள்களைக்கொண்டு போய்ப் பல இடங்களிலும் அதிக லாபமான விலைக்கு விற்கலானார்கள். அந்தக் காலத்தில் கிழக்கு சமுத்திரத்திலுள்ள வாசனைத் தீவுகள் என்று வழங்கும் திட்டுகளில் ஜாதிக்காய் இயற்கையாய்ப் பயிராகி வந்தது. அத்தீவுகளுள் மிகப் பெரியது முப்பது மைலுக்கு அதிக நீளமில்லை. அத்தீவுகளைக் கைக்கொண்டிருந்த வெனிஸ் தேசத்தார் காலபேதத்தால் விட்டுவிடும்படியாகி, அதன்பின் போர்ச்சுகல் தேசத்தாருக்குச் சுவாதீனமாயின. அதன் மூலமாய் அவர்கள் மிகுந்த செல்வம் தேடிக் கொண்டனர்.

ஃ

அக்காலத்திலே நியூகினி என்னும் தீவினின்றும், அதையடுத்த சில தீவுகளினின்றும் போர்ச்சுகல் தேசத்தார் ஜாதிக்காய்களைச் சேகரித்துக்கொண்டு சென்றனர். ஐரோப்பாவில் ஜாதிக்காய்க்கு அதிக விலை கிடைத்து வந்தது. போர்ச்சுகல் தேசத்தாரும் அந்த லாபத்தை நெடுநாள் அனுபவித்து வரவில்லை. உலாந்தக்காரர் தலையெடுக்க ஆரம்பித்து இந்து மகா சமுத்திரத்தையெல்லாம் தங்கள் சுவாதீனம் செய்துகொண்டனர். காலவளவிலே வாசனைத் தீவுகளெல்லாம் உலாந்தக்காரருக்கு வசமாய்ப் போயின. இது நடந்து 20-வருஷத்திற்கெல்லாம் இலங்கைத் தீவும் உலாந்தக்காரருக்குச் சுவாதீனமாயிற்று.

ஃ

உலாந்தக்காரர் வாசனைத் திரவிய வர்த்தகம் முழுமையும் பிறருடைய சம்பந்தமில்லாமல் தாங்களே கைக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்து, அதற்காக அந்தச் சரக்கு விசேஷமாய் விளைவதைத் தடுக்க வேண்டுமென நிச்சயித்தனர். அவ்வாறு செய்யின், சரக்குக்குக் கேள்வியும் அதிகம் பிறக்கும்; விலையும் அதிகம் ஏறும் என்பது அவர்கள் கொண்ட கருத்து. அதன் பொருட்டு அவர்கள் செய்த உபாயம் என்னவெனில், காட்டிலுள்ள ஜாதிக்காய் மரங்களை யெல்லாம் வெட்டி நிர்மூலமாக்கத் தொடங்கினார்கள். நிர்மூலமாக்கிய பிறகு பழயபடி அந்த மரம் எங்கும் காடுகளில் தானாய் முளைக்கக் கூடாதென்றும், அத்தீவுகளில் ஒன்றான 'பாந்தா' தீவிலேயே அதைப் பயிரிட்டு வளர்க்கவேண்டுமென்றும் ஏற்பாடு செய்தனர். இவர்கள் எவ்வளவு தூரயோசனை செய்தாலும், அம்மரங்கள் மாத்திரம் காடுகளில் தப்பித் தவறி முளைத்துக்கொண்டே

தமிழ்ப் புஸ்தகத்திற்கு ஆங்கிலத்தில் முகவுரை எதற்காக? ஆங்கிலேயர் அந்த முகவுரையைப் படித்துப் பார்த்து மெச்சுவார்களென்றா?

யிருந்தன. இதன்மேல் அவர்கள் செய்யவேண்டிய உபாயமென்ன? தானாய்ப் பழுத்து உதிர்ந்த பழங்களை யெல்லாம் பொறுக்கிக் கும்பலாய்ச் சேர்த்து நெருப்பில் கொட்டி எரித்து விட்டார்கள்; கடலிலும் அநேகமாய் வாரிக்கொட்டினார்கள். இது ஜாதிக் காய் வியாபாரத்தின் பூர்வ சரித் திரம்.

ஃ

இப்போதோ ஜாதிக்காய்ச் செடி களுக்குத் தூக்குத்தண்டனை விதிப் பவர்கள் யாருமில்லை. ஜாதிக்காய்ச் செடிகளுக்குப் பண்படுத்திப் பாடுபட வேண்டியதில்லை. செடிகளை நட்டு விட்டால் தானே வளர்ந்து பயிராகி மாறிமாறிப் பூப்பதும், காய்ப்பது மாகவே இருக்கும். ஜாதிக்காய்களை ஓட்டோடு வெயிலில் உலரப் போட்டு அதற்குள் இருக்கிற பருப்பு நன் றாய்ச் சுருங்கி ஆடும்படி செய்து அதன் பின்பு சுலபமாய் மேலோட் டை எடுத்து விடுவர். பச்சையா யிருக்கும்போது உடைப்பின் ஓட்டுக் குள்ளிருக்கும் பருப்பு உடைந்து விடு மானதால், அதற்காகவே வெயிலில் உலரப்போட்டுப் பிறகு பருப்பு எடுக் கின்றனர். அப்படி எடுத்த பருப்பு களை அதாவது கொட்டைகளைக் கடல் தண்ணீரிலும் சுண்ணாம்பிலும் ஊறவைத்து, மறுபடியும் கும்பலாய் வெயிலில் கொட்டிக் கொஞ்ச நஞ்சம் மிகுந்திருக்கிற ஈரமும் போய் விடும் படி செய்கிறார்கள். அதனால் அந்தக் கொட்டைக்கு மறுபடியும் முளைக்கும் படியான தன்மைபோய் விடுகின்றது.

ஃ

ஜாதிக்காய்களில் இரண்டு வகை யுண்டு. அவற்றுள் ஒன்று மிகவும் பெரியது. அந்தக் கொட்டையைக் காட்டிலும் அதன்மேல் மூடிக்கொண் டிருக்கிற ஜாதிபத்திரி மிகவும் நீள மாயிருக்கும். மற்றொன்றிலே ஜாதி பத்திரி கொட்டையில் பாதி நீளம் தான் இருக்கும். ஜாதிக்காயின் தைலம் மஞ்சள் நிறமானது; நல்ல வாஸனையும் உடையது. ஒரு ராத் தல் ஜாதிக்காயைப் பிழிந்தால் மூன்று ஔன்ஸ் தைலம் காணும். ஜாதிக்காயின் மேல்தோல் முதலிய குப்பைகூட வீணாய்ப்போவதில்லை. அதை எங்கேயாவது ஓரிடத்தில் குப்பலாய்க் கொட்டி மக்கவைத்தால், அதைச் சுற்றிலும் ஒருவகைக் கறுப் பான காளான் அபரிமிதமாக முளைக் கின்றது. அதை ஜாதிக்காய் விளை யும் தீவார் வெகு இன்பமாகப் புசிக் கின்றனர். ஜாதிக்காய்ப் பருப்பு எப் படியோ, அப்படியேதான் அதன் ஓட்டின்மேல் ஒட்டிக் கொண்டிருக் கிற ஜாதிபத்திரியும் சிறந்த பரிமள முள்ளதாயிருக்கின்றதென்பது மட் டும் எல்லோருக்கும் தெரிந்த விஷயமே.

மூன்றுநாள் விவாகம் இப்போது பல இடங்களில் ஒருநாள் விவாகமாக முடிந்திருப்பது நல்ல சிக்கனந்தான். விவாகப் பத்திரிகையுடன் வெற்றிலைப் பாக்கு தருவதும் நிறுத்தப்பட்டுப் பத்திரிகைமட்டும் தரப்படுகிறது. விவாக முகூர்த்தத்தில் தாம்பூலம் தரப்படுகிறது. இத்துடன் விவாகதினத்தில் புளி யோதரையும் தயிர் சாதமும் இரண்டு துவையலும் வைத்துவிடும் வழக்கம் தோன்றினால், வடை, பாயசம், நெய், குழம்பு ரஸம் யாவும் நின்றுபோய் செலவும் சுலபமாய் முடியும். இப்படியும் சில விவாகங்கள் நடந்திருக்கின் றன. கோயில்களிலும் விவாகத்தை நடத்துகிறார்கள். ஸமூகத்திற்கு அவசிய மான விவாகம் சுலபமான செலவில் முடியக்கூடியதாகத் திருத்தப்படுவது அவசியமாகும்.



இன்று கூடிய நமது கடையில், பெண்களின் வாக்கு சமத்காரத்தைப்பற்றி பொன்னுச்சிகிட்டு பேசினார். "சில பெண்கள் படிப்பு வாசனையற்றவர்களா யிருப்பினும், கடுமையான வார்த்தைகளையும் அவற்றிற்குத் தகுந்த பழமொழிகளையும் வாழைப் பழத்தில் ஊசி சொருகியதுபோல் வெகு பொருத்தமாய் சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி நுழைத்துப் பேச நன்கு கற்றுக்கொண்டிருக்கிறார்கள். இவர்களின் வாக்கு சமத்காரம் நன்கு படித்தவர்களுக்குக்கூட வருவதில்லை. ஒரு பெண் தனது மூத்தாளின் குமாரன் வீட்டுக்குச் சென்று ஒரு மாதத்துக்கு மேலாகவே தங்கியிருந்தாள். மூத்தாளின் குமாரனோ தனது மாற்றாந்தாயின் குண வைபவங்களை நன்கறிந்தவன். எத்தனையோ வருடகாலமாகப் பட்டுணர்ந்து அனுபவித்தவன். எந்தப் பேச்சிலாவது குற்றங்கண்டு பிடிப்பதும், கடைசியில் ஒரு சண்டை யிட்டுக்கொண்டு புறப்பட்டுக் கோபத்துடன் சென்று விடுவதும் இந்த மாற்றாந்தாயின் முக்கிய குணம். ஆகவே, மூத்தாளின் குமாரன் எந்த வார்த்தையில் என்ன பிழை நேரிடுமோவென்று அஞ்சி மாற்றாந்தாயுடன் ஒரு வார்த்தையும் பேசாமல் எப்போதுமே மௌனமாக இருந்து விடுவது வழக்கம். அன்னம் பரிமாறுதல் முதலியவற்றிற்குக்கூட தன் மாற்றாந்தாயைக் கேட்பதில்லை. அந்த அம்மையும் பரிமாற வருவதில்லை. இவ்வளவு ஜாக்கிரதையான தன்மையில் மூத்தாள் குமாரன் நடந்து கொண்டிருந்தான். ஒருநாள் அவன் மனைவிக்கும் இந்த மாற்றாந்தாய்க்கும் ஏதோ சிறுபேச்சு நடந்து, அது வளர்ந்து தடித்து, அதில் மாற்றாந்தாய் கோபித்துக்கொண்டு இன்னொரு தெருவுக்குச் சென்று விட்டாள். அங்கு சென்று அழைத்து வருமாறு சிலரை யனுப்ப, அதற்கு மாற்றாந்தாய் "சுடுகாடு போன பிணம் திரும்புமா? நான் இனி அங்குத் திரும்பி வருவது கிடையாது" என மறுத்து விட்டாள். இதில் "பிணம் திரும்புமா" என்ற பழமொழியானது எவ்வளவு பக்குவமான அர்த்தத்துடன் உபயோகிக்கப்பட்டிருக்கிறது பாருங்கள்! இந்த மாற்றாந்தாய்க்கு எழுத்து வாசனையே கிடையாதாயினும், வார்த்தைகளின் கூர்மையோ அம்பு போன்று துளைக்கக் கூடியதாயிருக்கிறது. பேதப்பட்ட மனத்தினர்கள் எத்தனை நாள் தங்கி யிருந்து குலாவிய போதிலும், பிறகு ஒரு அற்ப விஷயத்தில் பெருஞ் சண்டை யிட்டுக்கொண்டு பிரிந்துபோய் விடுகிறார்கள்! அதுகாறும் இவர்களை உபசரித்த அவ்வளவும் வீண் செலவாகவே முடிகிறது" என்றார். ஃ

மனிதனுடைய பேராசையால் வித்தையும், கலையும், புத்தியும், அறிவும், தேகபலமும், யுக்தியும் எதற்காக உபயோகப்படுகின்றன? அவைகள் மனிதனுடைய பேராசை, காமக்குரோதாதிகள், வீண்பெருமை முதலியவற்றிற்கு அடிமைப் படுத்தப்படுகின்றன.

உப்புச்செட்டியார் :—"வித்தியாசப்பட்ட மனமுள்ளவர்களுக்கு எந்த சங்கதியும் பேதமாகவே படுகிறது. அந்த வேற்றுமைக்கேற்ப அவர்களின் வார்த்தைகளும் சகித்தற்கரிய சொல்லம்புகளாயிருக்கின்றன. சிலர் எவ்வளவு வைதாலும் தூஷித்தாலும் கோபமே யுண்டாவதில்லை. வேறொருவர் ஒருவார்த்தை கூறிவிடின் மனதுக்கு எவ்வளவோ வேதனையாகிறது. காரணமென்ன? மனத்தில் அன்புடனும் துவேஷமற்றும் இருக்கிற ஒருவர் என்ன பேசினும் அது ஒரு தூஷணையாக நெஞ்சுக்குப் படுவதில்லை. மேலும், அவ்விதம் பேசுகிறவர்கள் மறுகணத்திலேயே புன்னகை முகத்துடன் விளங்குவதால், அவர்களுடைய திட்டுகளையோ கோபத்தையோ கவனியாது சாதாரணமாயிருந்து விடுகிறோம். ஒருவர் தமது நண்பரின்மீது ஆத்திரமும் சினமும் உணர்த்திப் பேசியபோது, அந்த நண்பர் சிரித்தபடியே யிருக்க, இதைக்கண்ட அவர், நான் இவ்வளவு பேசியும் உமக்குத் கோபம் என் வரவில்லை யென்றார். அதற்கு அந்த நண்பர் "உங்களின் திட்டுகளை சகித்துக்கொண்டு வேலை செய்வதென்று கங்கணம் கட்டி நீண்ட காலமாயிற்று; நீங்கள் எவ்வளவு தூஷிப்பினும், அது உண்மையான தூஷணையாக என் மனதிற் படுவதில்லை" என்றார். அன்பினர்களின் மொழிக்கும், அன்பற்றவர்களின் சுடு சொல்லுக்கும் எப்பொழுதும் பேதம் இருந்துகொண்டே தான் வருகிறது" என்றார்.

ஃ

அல்லாபிச்சை:—"நானும் என் நண்பருமாக இரவு 12 மணிக்கு ரயில்வேஸ்டேஷனிலிருந்தும் வந்துகொண்டிருந்தோம். வழியில் எவரையுங் காணவில்லை. என் மடியில் பணத்தின் கனமும் இருந்ததால் அச்சம் விளைத்தது. என் பயத்தை என் நண்பருக்குத் தெரிவியாமல் கடவுள் நமது பக்கத்தில் துணையாக வருகிறாரென்று நினைத்தவனாய், எனது நடுங்கிய மனத்தைக் கடவுளைத் தியானிப்பதில் திருப்பி தெய்வஸ்துதிகளை உரக்கக் கூறிக்கொண்டு நடந்தேன். சற்று தூரத்தில் எதிர்ப்பட்ட ஒருவர் "பைத்தியக்காரன் கத்துகிறான்" என்றார். அதைச் செவியுற்ற என் நண்பர் "கேட்டீரா அவர் சொன்னதை; வாயை மூடிக்கொண்டுவாரும்" என்றார். உடனே எனக்கு ஆத்திரம் எழுந்தது. "கடவுளின் நாமத்தைக் கூறுகையில் என்னை ஒருவன் பைத்தியக்காரன் என்றால், அதை நான் கவனியேன். எந்தக் காரியத்தைச் செய்யினும் அது ஒழுங்காகவும் கிரமமாகவும் இருக்கிறதாவென்று மட்டும் நான் சிந்தித்துப் பார்த்துக் கொள்ளுகிறதே தவிர, அதனால் ஏற்படுகிற புகழ்ச்சியையோ இகழ்ச்சியையோ நான் பொருட்படுத்துவதேயில்லை. நான் நேராக நடக்கிறேனா என்பதை மட்டும் கவனித்துக் கொள்வதே எனது வழக்கம். நான் தனித்திருக்கையில் கடவுளும் அருகில் துணைக்கு இருக்கிறார் என்று நம்புவதே என் இயல்பு. அப்பொழுது அச்சம் பறந்து விடுகிறது. எவர் எது கூறினாலும், நான் கொண்ட கொள்கையே என் உறுதிப்பாடு" "என்றேன். என் நண்பரும் பதில் பேசாது மௌனமானார்" என்றார்.

ஃ

ஆமவடைப் பண்டாரம்:—"சிலர் தாங்கள் ஒரு விஷயத்தை இன்

னின்னவிதமாக முடிப்பதென்று போட்ட திட்டத்தையே கடைசி வரையிலும் சாதிக்கிறார்கள். இடையில் எவர் என்ன சொல்லினும் அதைக் கவனிப்பதேயில்லை. ஒரே பிடிவாதமாயிருந்து தங்களின் திட்டத்தின்படி வேலையைச் செய்து முடிக்கிறார்கள். ஆலோசனை கூற வருவோர் உத்தம குணத்தினராயின் அப்போது மட்டும் அவர்களின் யோசனைக்குச் செவி கொடுக்கிறார்கள். பொறுமையும் கபடமுமுள்ள ஒரு மனிதன் இடையே தோன்றிப் பேச வருகையில், அவனை அலக்ஷியமாக ஒதுக்கிவிட்டுத் தங்களின் வேலையிலேயே கண்ணு யிருப்பதே வழக்கம்'' என்றார்.

ஃ

புளியோதரைப் பெருமாள் :— "சொந்தக்காரர்களுக்கும் தன் மனைவிமக்களுக்குமே துரோகமாய் நடந்த விஸ்வாசகாதகர்கள் அன்னியரான பிறரிடத்தில் வெகு பாந்தவ்வியமும் சொந்தமும் உள்ளவர்கள் போல் அபிநயித்து அவர்களின் வேலைகளுக்கு வெகு ஒத்தாசையாக இருப்பதாய்க் காண்பித்துக் கொள்கிறார்கள். அந்த அன்னியர் புது வீடு வாங்கினால், அந்த வீட்டுக் கிணறு நல்ல ஜலமுள்ளதென்றும், உப்பு ஜலமல்லவென்றும் அந்த அன்னியரின் செவியில் படும் வண்ணமாக அங்கு வந்தவர்களுக்கு உயர்த்தி உரக்கக் கூறுகிறார்கள், கிணற்று ஜலம் உப்பாகவே இருப்பினும் அதை வெளியில் சொல்லாத அவ்வளவு பக்குவமாக நடந்துகொண்டு அந்த அந்நியரை ஆகாசத்திலே தூக்கி வைத்துப் பேசுகிறார்கள். இத்தகையோர் பெரும்பாலும் வஞ்சகராகவே முடிகிறார்கள். தங்களின் குடும்பத்தையும் தங்களுக்கு உழைத்து ஆதரித்தவர்களையும் வஞ்சித்துத் துரோகிகளானோர், பிறரிடத்து அன்பினராகவேனும், உண்மையுள்ளவர்களாகவேனும் இருப்பது முடியாத சங்கதி. அவர்கள் நன்றியறிதலுள்ளோராய் இந்த ஜன்மத்திலிருந்தவுமாட்டார்கள். ஆதலின், அவர்களின் மயக்குப் பேச்சில் நம்பிக்கை வைத்துவிடக் கூடாது'' என்றார். இத்துடன் நமது கடையும் பூர்த்தி பெற்றது.

பகதூர்-பொன்வண்டு செட்டியார்.

"என் மகனே! நீ குயவனுக்குப் பிறந்திருந்தால் சட்டி குடங்கள் செய்யத் தெரிந்திருக்கவேண்டும். நீ ஒரு நாவிதனுக்குப் பிறந்திருந்தால், தோலில் எப்படிக் கத்தியைத் தீட்டுகிறதென்றும், எவ்விதம் க்ஷவரம் செய்கிறதென்றும் அறிந்திருக்கவேண்டும். நீ ஒரு வைதீகப் பிராமணருக்குப் பிறந்திருந்தால் புரோகிதம் செய்வதற்கு வேண்டிய சுலோகங்கள் முதலியன கற்றிருக்க வேண்டும். நீ ஒரு பத்திராசிரியருக்குப் பிறந்திருந்தால் நாற்காலியில் உட்கார்ந்து எழுத்து வேலைகள் செய்யப் பழகியிருக்க வேண்டும். எப்படியோ வேலை செய்தபடி யிருக்கவேண்டுமேயன்றி சோம்பியிருக்கவொண்ணாது. வேலையற்றவன் வீணனாவான்'' என ஒரு தந்தை தன் குமாரனுக்குக் கூறினார்.

ஒரு காசு விட்டுக் கொடுக்கமாட்டாமல் ஒருமணி நேரம் வாதாடுகிறவர்களும் சில சமயங்களில் ஒரு ரூபாயை மறந்துபோய்க் கொடுத்துவிடுகிறார்கள். அத்துடனில்லை, தன் உயிர்க்குயிரானவர்களையும் எமனிடம் கொடுக்கவேண்டியதாய் விடுகிற காலமும் உண்டு.

கவிதா  விலாஸம்

விகடக் கொன்றை வேந்தன்.

(433-ம் பக்கத் தொடர்ச்சி.)

நீரும் நெருப்பும் மீறிடில் சாவே.
நுண்ணிய சமுசயம் எண்ணிடப் பெரிதாம்.
நூல்பல தெரிந்தவர் சீலத் தவரோ ?
நெஞ்சில் வஞ்சகம்; கொஞ்சுதல் உதட்டில்.
நேராய் நடப்பவர் யாரோ ஒருவர்.

நைபவர் பிறரால் நையாண்டி யாவர்.
நொய்கோ துமையுடன் நெய்சே ரிலட்டாம்.
நோன்பென் பதெல்லாம் நன்குதின் பதுவே.
பண்ணிய விவாகம் எண்ணுகில் துன்பமே.
பாலோ டுண்டவர் பழையது முண்பர்.

பிழையிலான் கடவுளே ! பின்பெவர் உளரே ?
பீரும் பிராந்தியும் பிரசித்தி தருமே.
புலையனும் பிரபுவே பணமிருந் திடினே.
பூரிப் படைவர் புதுப்பெண் வருங்கால்.
பெற்றோர் வெறும் பொற்றொடி வந்தபின்.

பேதமை என்பது பிறரை நம்புதல்.
பைநிறைத் திருந்தா லையமில் தைரியம்.
பொல்லா ராவது இல்லா திருந்தால்.
போன வேலை ஆனதென் பதிலையே.
மருந்தோ காலணா ! விற்பதோ நாலணா !

மாரி ஆத்தாள் விரும்புவாள் உயிர்ப்பலி.
மின்னுவ தெல்லாம் பொன்னும் புடவையும்.
மீகா மனழிவு மரக்கலத் தோடே.
முற்பகல் விவாகம்; பிற்பகல் கலகம்.
மூத்திரம் அடக்கினால் ஆத்திரம் பெருகும்.

"நீ என்னைப் படுத்துகிற பாட்டில் நான் விடுகிற கண்ணீர் என் காலத்திற்குப் பிறகு உன்னைக் குத்திச் சோதிக்காமற் போகாது. நீ நல்ல வாழ்வு பின்னால் வாழவேண்டுமென்றால், என்னை வேதனைப்படுத்தாமல் பிரியமும் மரியாதையுமாக நடத்து" என்று ஒருவர் தன் மனைவிக்குக் கூறினாராம்.

மெத்தையிற் படுப்பது அத்தை மகளோடு.
மேழிச் செல்வம் வழக்கில் ஒழிவதோ?
மைவிழி மாதர் மயக்குவர் யாரையும்.
மொழிவது பொய்யே; வஞ்சகப் பேச்சே.
மோகமும் ஆசையும் வேகமாய் மறையும்.

வளவள வென்றே வேலையில் பேசுவர்.
வானம் மாற போனகம் இல்லை.
விருந்தாய் வந்தவர் அருந்துயர்க் காகார்.
வீரம் பேசுதல் யாருமில் போதே.
உரவோர் என்கை உருவினில் தெரியும்.

ஊக்கம் கொண்டால் நாக்கைப் பிதுக்குவர்.
வெள்ளை முற்றிடில் வெட்டை மேகமே.
வேந்தனய் நடிப்பது வேஷநா டகத்திலே.
வையகந் தோறும் வயிற்றுல் விசனமே.
ஒத்த இடத்தில் மோத்துதல் இலையே.
ஓதி யுணர்ந்தார்க் காதியில் மதிப்பே.

(முற்றிற்று.) மு. துரைப்பிள்ளை.

உடைந்த சிமிளும் கற்பழிந்தவளும்.

உடைந்த சிமிளையே ஒட்டுபோட்டு உபயோகிக்கும் போது விளக்கை இன்னும் அதிகமாகத் தூண்டி எரிய விட்டாலும், சிமிள் உடைந்து போகுமே யென்ற கவலையில்லை. முந்தியே உடைந்து விட்டதில் இன்னும் உடைந்தாலும் உடையட்டுமென்ற அலக்ஷியமே அதிகமாகிறது. அவ்விதமே கற்பு கெட்ட பெண் இன்னும் கெடுவாளானுல் அதைப் பற்றிக் கவலைப்படுவாரில்லை. ஒருவர் தனக்கு மனைவியிருந்தும், வேறொரு கற்பு கெட்ட ஸ்திரீயையும் உபநாயகி யாகக் கொள்ள, அந்த கெட்டுவிட்ட மங்கை எதற்கு என்று ஒருவர் வினவ, வருகிற போகிற நண்பர்களைத் தாராளமாய் உபசரிக்க, பேச அவள் உதவுவாளென்றும், ஒரு சமயம் தன் நண்பர்களால் அவள் மயக்கப்பட்டாலும் நேசிக்கப்பட்டாலும் தான் அதைப்பற்றிக் கவலைப் படாமலிருக்க முடியும் என்றும் பதில் கூறினராம்.

அபிமான மிகுதியால் குற்றம் குற்றமாகத் தோன்றுமற் போவதுண்டு.

சிறுமணித்திரள்

"நாலாம்படி தாண்ட நாலு வருஷம் அவசியமா?" சாதாரண எலிமெண்டரி பாடசாலைகளில் நான்காவது வகுப்புவரையில் படிக்கிற எல்லாப் பாடங்களையும் இரண்டு வருஷங்களுக்குள் கற்றுத் தேர்ச்சியடையச்செய்து ஐந்தாவது வகுப்பில் சேர்வதற்குத் தகுதியுள்ளவர்களாக்கலாமென்று ஸ்ரீமான் எஸ். ஜி. டேனியல் பி. ஏ. தெரிவிக்கிறார்.

ஃ

அழகாக எழுதத் தெரிவதும், பிறரைத் தூஷிப்பதில் தேர்ந்திருப்பதும் பத்திரிகைத் தொழிலுக்குப் போதிய யோக்கியதைகளாகுமென்று கருதப்பட்டு வந்த காலமுமுண்டு. இன்னும் சிலர் பிறரைத் தீர்க்கமாகத் தூஷித்தெழுதத் தெரிவதே பத்திரிகாசிரியருக்கு முக்கியமாக இருக்க வேண்டிய யோக்கியதையென்று கருதியிருக்கிறார்கள். ஆனால், அந்தக் காலம் மலையேறிவிட்டது. பத்திரிகைத் தொழிலானது மிகவும் பொறுப்புவாய்ந்ததாகிவிட்டது. அதில் ஈடுபடுகிறவர்கள் பல விஷயங்களையும் அறிந்தவர்களாகவும், எந்த விஷயத்தையும் தீர்க்கமாக ஆராய்வதற்குச் சக்தியுடையவர்களாகவும் இருக்கவேண்டியிருக்கிறது. கலாசாலைக் கல்வி இதற்குப் போதியதில்லை. (சுதேசமித்திரன்.)

ஃ

பிரான்ஸில் 1932-ம் வருஷத்தைக் காட்டிலும் 1933-ல் ஜனன விகிதம் 40000-த்துக் குறைந்துவிட்டதாம். ஜனத்தொகை குறையின் விவசாயம், கைத்தொழில், வியாபாரம் யாவும் க்ஷீணித்துவிடும். எனெனில், அவற்றை உற்பத்தி செய்யவோ, அவற்றால் ஏற்படும் பலன்களை அனுபவிக்கவோ ஒருவரும் இரார்கள். ஜனத்தொகை குறைந்த நாட்டில் பணம் இல்லாததால் தேசம் இன்சால்வெண்டாகிவிடும். வரி கொடுத்தால்தானே பணம் வரும். ஜனங்கள் இருந்தால்தானே வரி வரும். அன்னியர் படைஎடுத்தால் எல்லைப்புறங்களைப் பாதுகாக்க சிப்பாய்கள் இருக்கமாட்டார்கள். இளைஞர்கள் இருந்தால்தானே யுத்தவீரர்களாக முடியும்?

ஃ

நேபாளத்தில் நீவார் ஜாதியைச் சேர்ந்த ஒரு நங்கை தன் பர்த்தாவின் தலையணையின்கீழ் வெற்றிலைப் பாக்கு வைத்துவிட்டுச் சென்றுவிட்டால், அது அந்தக் கணவனுடன் விவாகத்தை ரத்து செய்துகொண்டதற்கு அடையாளமாம். பிறகு அந்தப் பெண் வேறொருவனை மணந்துகொள்ளலாமாம்.

ஃ

ப்ளூமென்பீல்ட் எனும் ஆங்கிலப் பத்திராதிபரொருவர் கூறுகிறார்:— "* * பத்திரிகையினால் பணம் வந்தால் அதிகமாய் வருகிறது. போனாலும் அதிகமாய்ப் போய்விடுகிறது. * * சரியாகவோ தப்பாகவோ பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் விஷயங்களுக்கெல்லாம் பத்திராசிரியர்தான் பொறுப்பாளியாகக் கொள்ளப்படுகிறார். பத்திரிகையின் சொந்தக்காரர்களின் இஷ்டப்பிரகாரம் நடந்து

கொள்ளாவிடில் உடனே பத்திராசிரியருக்கு முடிவில்லாத விடுமுறை தினம் கிடைத்துவிடும்" என்கிறார்.

ஃ

ஜப்பானில் ஸ்திரீகளை வேலையாட்கள் போலவும், புருஷர்களுடைய இன்பத்துக்கெனவே பிறந்திருப்பவர்கள்போலவும் கருதப்படுகின்றனர். ஜப்பானிய நங்கைகள் விவாகத்திற்கு முன்னால் சாதாரணமாகத் தங்களின் தேகத்தை விற்றுப் பிழைத்து, கல்யாணமானதும் கணவனுக்கடங்கி உழைப்பவராகின்றனராம். கற்பு என்பதைப்பற்றி ஜப்பானிய மாதர்களுக்கு அதிகமாய்த் தெரியாதாம். கெட்ட நடத்தைக்கு ஜப்பான் ஐரோப்பாவுக்கு சமம்தானாம்.

ஃ

சென்னை நகரிலுள்ள பாடசாலைகளில் 75000-மாணவ, மாணவிகள் படித்து வருகையில், அவர்களில் 324-பேர்களுக்குக் குஷ்டரோக சின்னங்கள் இருந்து வருகின்றனவாம்.

ஃ

கடலைக்கொட்டை யெண்ணெயே அதிகம் கலந்த நல்லெண்ணெயைத் தலைக்குத் தேய்த்துக்கொண்டு கண்கள் பொங்கும்படி செய்துகொள்வதைக் காட்டிலும் எண்ணெய் ஸ்நானம் செய்யாமலிருப்பதே மேல்.

ஃ

தனிப்பட்ட லாபம் அதிகமாகச் சம்பாதிக்கவேண்டுமென்ற ஆசையால் கூட்டுறவு உணர்ச்சி குறைந்து விடுகிறது என்று கவி தாகூர் கூறுகிறார்.

ஃ

கம்பரையும் வள்ளுவரையும் போல் கவிகளும், நச்சினார்க்கினியரைப்போல உரை ஆசிரியர்களும் இந்நாளில் அரிதானதற்கு, நம்முடைய பழய மனோபாவங்களைக் கைவிட்டதே காரணம் என்று மகாமகோபாத்யாயர் ஸ்ரீமான் குப்புசாமி சாஸ்திரிகள் கூறுகிறார்.

ஃ

19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவில் சுமார் 994-விதமான நாணயங்கள் ஜனங்களினிடையில் வழங்கப்பட்டு வந்தனவாம். ஒரேவிதமான நாணயம் எங்கும் வழங்கப்படுவதற்கான முறையை 1818, 1835-இவ்வருஷங்களில் கையாளப்பட்டதாம். 1861-ம் வருஷத்தில் இந்தியாவில் முதன்முதலாகக் கரன்ஸி நோட்டுகள் வெளியிடப்பட்டன.

ஃ

தெய்வத்தின் குழந்தைகளாகிய நமக்கு உயர்வு தாழ்வு ஏது? வேதங்களில் நான்கு வர்ணங்களைப்பற்றிச் சொல்லும்போது, தேகத்திலுள்ள நான்கு முக்கியமான உறுப்புகளை உதாரணமாகக் கூறப்பட்டிருக்கின்றது. தலை, புஜம், வயிறு, பாதம்—இவைகளில் எது உயர்ந்தது?—எது தாழ்ந்தது? இந்த அவயவங்கள் ஒன்றுடன் ஒன்று உயர்வு தாழ்வைப் பற்றிச் சண்டையிட ஆரம்பித்தால் கதி என்னவாகும்?—என்று மகாத்மாஜி கூறுகிறார்.

அவர் அவ்வளவு மோசக்காரரா? என்று ஒருவர் கேட்டுவிட்டு, உங்களையும் என்னையும்விட அவர் அவ்வளவு மோசக்காரரல்ல என்று பதில் கூறினாராம்!

பெரியோர்களை அவமதிப்பதின் தீங்கு

ஏவராயினும் பெரியோர் சிறியோர் என்ற தாரதம்மியம் அறிந்து அதற்கேற்றபடி நடப்பார்களாயின், அப்பொழுது அவர்கள் புத்திமான்களென்று யாவராலும் கொண்டாடப்படுவதுடன், அதற்குத் தகுந்த பயனையும் பெறுவார்கள். அதை விட்டுச் செல்வத்தினால் மிக்க செருக்கடைந்து, நாம் மிகுந்த பொருள் படைத்திருக்கிறோம்; மற்றவர்களெல்லோரும் நமக்குக் கீழ்ப்பட்டவர்களே; நாம் எது செய்தாலும் செல்லும்; நம்மை ஏனென்று கேட்பவர் எவருமில்லை யென்று எண்ணிக் கண் தெரியாமல் தம் மனம் போனபடி நடப்பார்களாயின், தேவேந்திரனைப் போன்றவர்களானாலும், அவர்களுக்குக் கெடுதி வராமல் தப்பாது. ஆதலின், ஒருவர்க்கொருவர் இருக்கின்ற தாரதம்மியமறிந்து அவரவரைத் தக்கபடி கௌரவப்படுத்தித் தாமும் அவர்களால் சன்மானிக்கப்படுவது யாவர்க்கும் நன்மையாகும். இதற்குத் திருஷ்டாந்தமான கதையொன்று உண்டு.

ஃ

பாண்டவர்களுடைய வனவாசத்தில் பீமசேனன் ஒருநாள் ஒரு காட்டில் ஒரு பெரிய மலைப்பாம்பினிடம் சிக்கிக் கொண்டான். பீமன் தனது பலம் யாவும் போய்விட்டது கண்டு திகைத்து நிற்க, பாம்பும் அவனை விழுங்க முயன்றது. அத்தருணத்தில் தருமபுத்திரர் தமது தம்பியைத் தேடிக்கொண்டு அங்கு வந்து தம்பியின் நிலைமையைக் கண்டு கலங்கி, பாம்பை வேண்டிக்கொண்டு அதற்கு வேறு மாமிஸ ஆகாராதிகள் கொடுப்பதாயும், தமது தம்பியை விட்டுவிடுமாறும் பிரார்த்தித்தார்.

ஃ

அந்தப் பாம்பு தருமபுத்திரரை நோக்கிக் கூறியதாவது :—"நான் உன் பூர்வீகர்களுக்கெல்லாம் முற்பட்டவனான ஒரு ராஜன்; நஹுஷன் என்னும் பெயருடையவன். நான் என் தபோ மகிமையினால் தேவலோகத்திற்குச் சென்று தேவேந்திர பதத்தை யடைந்து செல்வச் செருக்கினால் கண் தெரியாமல் பெரியோர் சிறியோர் என்ற விசாசமழிந்தவனாய் அகஸ்தியர் முதலான பிரம்மரிஷிகளை அவமானம் பண்ணினேன். அப்போது அகஸ்திய மகாமுனி சினந்து பூலோகத்தில் மலைப்பாம்பாகுமாறு சபித்துவிட்டார். எப்படிப்பட்டவராயினும் விதிப்பயனுக்குத் தப்பித்துக் கொள்ள முடியுமா? எல்லா வேதங்களையும் ஓதினேன்; சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிற வேள்விகள் எல்லாவற்றையும் செய்து முடித்தேன்; நீதி நெறி தவறாமல் ராஜ்யபரிபாலனம் செய்தேன்; கடைசியாய்த் தேவேந்திர பட்டமும் பெற்று ஆண்டேன். இவ்வளவிருந்தும், அகங்காரமாகிய இருள் என்னைச் சூழ்ந்து கொண்டதனால் நான் இந்த ஜென்மம் எடுத்து வருந்தும்படியாக நேரிட்டது. ஆயினும், நான் அகஸ்தியரை மிகவும் பணிந்து வேண்டிக் கொண்டதின்பேரில், என்

உலகத்தில் எதுவும் யாசகமாகக் கிடைத்துவிடப்போகிறதில்லை. போராடி ஜெயித்தே ஒவ்வொன்றையும் பெறவேண்டும்—ஹர் ஹிட்லர்.

னிடம் சிக்கியவர்களின் பலம் அழிந்து போகும்படியும், நான் கேட்கும் கேள்விகளுக்குத் தக்க விடை சொல்பவர் தோன்றும்போது என் சாபம் விமோசனமாகும்படியும் வரமளித்தனர். ஆதலின், என் வினுக்களுக்கு விடை தந்து உன் தம்பியை விடுவித்துக் கொள்" என்றது. தருமபுத்திரர் அதற்கு இணங்கவே, சர்ப்பரூபமுடையவனுன நஹுஷன் வினவலாயினுன்.

ஃ

வினு:—எப்படிப்பட்ட குணமுள்ளவர் பிராமணர்கள்; அந்தப் பிராமணர் எவற்றை அறிந்து கொள்ள வேண்டும்?

விடை:—ஸத்தியம், பொறுமை, தானம், தருமம், தயை முதலிய நற்குணங்களுள்ளவர்களாய், இந்திரியங்களை வென்று, நல்வழியில் நடப்பவர்கள் எவர்களோ அவர்களே பிராமணர்கள். அவர்கள் அறிந்துகொள்ள வேண்டியது என்னவெனில், சுகதுக்கங்களில் புத்தி தவருமல் என்றும் ஒரே சீராயிருக்க வேண்டும் என்பதேயாம்.

வினு:—இக்குணங்களும், செய்கைகளும் சூத்திரனிடத்தி லிருக்குமாயின், அவன் பிராமணனுவானு? அப்படியாயின். பிராமணர், க்ஷத்திரியர், என்கிற வர்ணப் பிரிவு உண்டாவதற்கு நிமித்தமென்ன? இவன் உயர் குலத்தோன், இவன் இழிகுலத்தோன் என்ற வழக்கச் சொல் வீணேயல்லவா?

விடை:—ஏதோ ஒரு பிரமாதத்தால் எல்லா வர்ணங்களும் கலந்துவிடும்படியாக நேரும்பொழுது அந்தந்த வர்ணத்தாரைப் பகுத்தறியும்படி ஸ்வாயம்புவ மனுவானவர் பிராமணர் முதலியவர்களுக்குத் தொழில் வெவ்வேருக ஏற்பாடு செய்திருக்கிருர். மேலே சொன்ன ஸத்தியம் முதலிய குணங்கள் சூத்திரனிடத்திலிருக்குமாயின், அவன் சூத்திரர்களில் சிறந்தவனேயொழிய பிராமணனுகமாட்டான். தேவலோகத்திலுள்ள கேட்டதைக் கொடுக்கின்ற காமதேனுவாயினும், அது பசுவேயன்றி வேறல்ல. அந்தக் குணங்கள் பிராமணனிடத்தில் இல்லாமற் போமாயின், அவன் சூத்திரனுக்கு ஒப்பானவனும். ஆதலின், எல்லா வர்ணத்தாரும் தங்கள் தங்கள் தருமங்கள் தப்பாமல் நடப்பதே சிறந்ததாம். செல்வம் மிகுந்தவனுயினும் தனக்கு உசிதமான செய்கைகளைச் செய்யாதவன் நீசனேயாவான். உசிதமான செய்கைகளைச் செய்துகொண்டு வருபவன் எவ்வளவு தரித்திரனுனுலும் உத்தம புருஷனுக நினைக்கப்படுவான். ஆதலின், செல்வத்தைக் காத்துக்கொள்ளுவதிலும் செய்கையைக் காத்துக்கொள்வதே முக்கியமாம்.

வினு:—உலகத்திற்கெல்லாம் பிரியமில்லாத காரியம் செய்தவனுயினும் ஜீவஹிம்ஸை செய்யாதவனுயின், அப்படிப்பட்டவன் நற்கதியடைவான் என்கிருர்களே; ஜீவவதை செய்யாமை அவ்வளவு சிறந்ததானதற்கு நிமித்தமென்ன?

விடை:—உலகத்திற்குப் பிரியமான காரியம் செய்தல், உண்மை பேசுதல், தானம் செய்தல், ஜீவ

அநேகமான பேர்கள் கடன் வாங்குமட்டும் கெஞ்சிப் பஞ்சைப் பாட்டுப் பாடுவதும், பிறகு பித்தலாட்டப்பேரத்தி லிறங்குவதும், அதற்கும் மிஞ்சிக் கடன்காரன் வந்தால் 'ஜெயிலுக்குப் போகச் சித்தமாயிருக்கிறேன், உன்னுலானதைப் பார்' என்று சொல்லிவிடவுந் துணிகிருர்கள்.

ஹிம்ஸை செய்யாமை ஆகிய இந் நான்கு நற்குணமும் ஸமமானவைகளே. ஆயினும், அவைகளில் ஹிம்சை செய்யாமை மிக மேம்பட்டதாம். எப்படியெனில், ஜீவன் தேவ ஜன்மம், மானிட ஜன்மம், மிருக ஜன்மம், என்னும் மூன்று விதமான ஜன்மங்களில் மானிட ஜன்மமெடுத்துத் தானம் முதலிய நற்குணங்களுள்ளவனுயிருந்தும் ஜீவஹிம்ஸை செய்பவனுயின் மறுபடியும் விலங்கு ஜாதியிற் போய்ப் பிறப்பான். ஹிம்ஸை செய்யாதிருப்பனுயின் தேவ ஜன்மம் பொருந்துவான். ஆதலின், அஹிம்ஸை எல்லாவற்றிலும் சிறந்ததாயிற்று.

ஃ

என்று இப்படி தருமபுத்திரன் நஹுஷன் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சரியான ஸமாதானம் சொல்லவே, அவன் ஸந்தோஷமும் தருமபுத்திரனிடத்தில் பிரீதியும் உடையவனுகிப் பீமனை விட்டுவிட்டு, சாபம் நீங்கிப்போகவே, திவ்யரூபமுடையவனுகித் தருமபுத்திரனுக்குப் பலவிதமான வேதாந்த ரகசியங்களைத் தெரியச் சொல்லிவிட்டுத் தான் சுவர்க்கலோகம் போய்ச் சேர்ந்தான். தருமபுத்திரரும் மிக்க மகிழ்ச்சி கொண்டவராய்த் தமது தம்பியை அழைத்துக்கொண்டு தம்முடன் வந்த முனிவர்களோடு கூட ஆசிரமம் போய்ச் சேர்ந்தார்.

ஃ

ஆதலின், யுக்தாயுக்தங்களை நன்கு ஆராய்ந்து, பெரியோர் சிறியோர் என்ற வேற்றுமையை நன்ருய் உணர்ந்து, அதற்கேற்றபடி நடப்பவர்களுக்கு மேன்மையும், அப்படி நடக்காதவர்களுக்குக் கீழ்மையும் தவருமல் உண்டாகுமென்பது நிச்சயம். பெரியோர் எளியராயினும், இவன் என்ன நம்மை யடுத்துப் பிழைத்துச் செல்லுகிற பிச்சாண்டி தானே, நமது செல்வத்திற்கு இவன் எம்மாத்திரம் என்று எண்ணிக் கேவலம் செய்யலாகாது. பெரியோர்கள் மனம் நொந்தால், அது தங்களுக்கு நன்மையாக ஆகாதென்பதை யுணர்ந்து, எப்பொழுதும் அவர்களை வணங்கி மேன்மைப்படுத்துவதே தாங்கள் மேன்மைப்படுவதற்கு வழியாகும்.

வீட்டுக்காரன் விருந்தினர்களைப் பிரியத்துடனேயே வரவேற்கிருன்; அது உண்மை. அத்துடன் இனி செய்யவேண்டிய செலவுகளின் பாரத்தையும் நினைத்துப் பார்த்துக்கொள்கிருன். தன் கையிலுள்ள பணத்தின் மொத்தத்தையும் மனதில் எண்ணிக்கொள்கிருன். செலவுக்குப் போதாத நிலையிலிருக்கும்போது விருந்து வந்ததையும் சிந்திக்கிருன். வந்த விருந்தினர்கள் பல நாள் இருக்கவேண்டுமென்ற ஆவலாதியும் ஒருபக்கம் இருக்கிறது. கையிலோ பணம் மிகக் குறைவு. தன் தத்தளிப்பை வெளியில் சொல்லவும் முடிகிறதில்லை. கடன் வாங்க நேருகிறது. பழய கடனே இன்னும் தீர்க்காதிருப்பதையும் நினைத்துப் பெருமூச்சு விடுகிருன். எப்படியோ காரியம் நடந்து விடுகிறது.

கவலையாகிய விசனங்கொண்டவன், ஆயுளைக் குறைக்கும் பெருநோய் பிடித்தவனென்றே சொல்லவேண்டும். கவலை யில்லாதவன் உலகத்தில் ஒருவருமில்லை. அது தெய்வ ஆசீர்வாதத்துக்குக் கீழாசீர்வாதமாய் நியமித்து வைக்கப்பட்டிருக்கிறது.

17—ஸம்ஸ்கிருத மகா கவிகள்

—அவர்களின் ஜீவிய வரலாறு—

(444-ம் பக்கத் தொடர்ச்சி.)

3. வராகமிகிரன்.

இவர் நமது தேசத்தில் சோதிஷ சாஸ்திர வித்வான்களுக்குள் சிரோன்மணியாய் விளங்கி பிரஹத்சாதகம், லகுசாதகம், பிரஹத் ஸம்ஹிதை முதலான பிரசித்த கிரந்தங்களை எழுதினவர். இவரையும் நவரத்னங்களில் ஒன்றாய் ஜனங்கள் கூறுகிறார்கள். ஆனால், இவர் அமரஸிம்மனுக்கு 200-வருஷம் முந்தி யிருந்தவர். வான சாஸ்திரமானது இதர தேசங்களைவிட நமது இந்து தேசத்தில் 1500-வருஷங்களுக்கு முன்பே ஓங்கி வளர்ந்திருந்தது. இந்த வான சாஸ்திரத்தைக் கற்றறிந்தவர்கள் ரோமாபுரி, யவனதேசம் முதலான இடங்களிலிருந்து இவ்விடம் வந்து அந்த சாஸ்திரத்தை நன்றாய்க் கற்றுக் கொண்டு போனார்கள். அவர்கள் எழுதிவைத்திருக்கிற ஆதாரங்களால் வராகமிகிரர் கி. பி. 504-ம் வருஷத்திற் பிறந்து 587-வது வருஷம் வரையில் ஜீவித்திருந்ததாகத் தெரியவருகிறது. இவர் நெடுநாள் இருந்தபடியால், வான சாஸ்திரத்திலும், ஜோஷ்யத்திலும் அநேக புஸ்தகங்கள் எழுதினார். ஜோதிஷம் என்பதைத் தப்பாய் அர்த்தங்கொண்டு, கிரகணம் என்றால் பாம்பு ஒன்று கிரகங்களை விழுங்குகிறதென்று ஜனங்கள் கொண்டிருந்த அபிப்பிராயத்தை முதலில் மாற்ற முயன்றவர் இவரே. இவரது கிரந்தங்களில் சிலவற்றை நாம் எடுத்துக் கூறுவோமாகில், இப்பொழுது ஆங்கிலேயரது வானசாஸ்திரத்திலிருந்து நாம் சற்று அதிகமாய்க் கற்றுக்கொண்டதாக எண்ணியிருக்கிறார்களே, அந்தச் செருக்கை இறக்கிவிடுவோம். சந்திர பிம்பம் சூரியனுக்கும் பூமிக்கும் மத்தியில் இருக்கிறதென்றும், ஒரே காலத்தில் சூரிய தேஜஸானது சந்திர பிம்பத்தின் ஒரு பாதியில்தான் விழுகிறதென்றும், மற்றொரு பாதி இருட்டாயிருக்கிறதென்றும், கிரகணமென்பது கிரகங்கள் ஒன்றையொன்று மறைக்கும் பொழுது உண்டாகிறதென்றும், அந்த நிழலையே ராகு கேதுக்கள் என்று கூறி அவை கிரகங்களைக் கிரசிப்பதாக ரிஷிகள் வர்ணித்துக் கூறியிருக்கின்றனரென்றும், நமது முன்னோர்களுக்கு முதன்முதலில் தெளிவாய் எடுத்துக் கூறினவர் வராகமிகிரரே. அன்றியும், சந்திர கிரகணம் மேற்கிலிருந்து தொடுகிறதில்லையென்றும், சூரிய கிரகணம் கிழக்கிலிருந்து தொடுகிறதில்லையென்றும்

காசுமாலையிலிருந்து ஒருகாசைத் திருகினால் சுலபத்தில் ஒடிந்து வந்துவிடும். திருடுவது சுலபமே. ஆதலின், காசுமாலையை இரவல் கொடுக்கும்பொழுது இத்தனை காசுகள் இருப்பதாக எண்ணிப் பார்த்துக்கொள்ளும்படி சொல்லிக்கொடுத்து, இரவலிற் சென்று திரும்பியதும் காசுகள் சரியாக இருக்கிறதா என்று எண்ணியும் பார்க்கவேண்டும். கல் நகைகளை இரவல் தருவதில் நல்ல கல்லுகளை எடுத்துவிடுவோருமுண்டு. எல்லாம் உறவினரென்போரும், நண்பரென்போரும் செய்கிற படுமோசங்கள் தான்.

முதல்முதல் உலகத்துக்குப் போதித்தவரும் இவரே. சற்றேறக்குறைய காளிதாஸன் காலத்தில் இவர் ஜீவித்ததாகச் சொல்லலாம்.

ஃ

4. தன்வந்திரி.

இவர் வசித்த காலத்திற்குச் சாஸனம் முதலிய உறுதியாய்ச் சொல்லக்கூடிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆனால், இவர் எழுதியிருக்கும் வாக்கிய நடை வராகமிஹிரர் நடையைப் பல இடங்களிலும் ஒத்திருக்கிறபடியால் இவரும் அவர் காலத்திலேயே ஜீவித்திருக்கலாமென்று தோன்றுகிறது, வராகமிஹிரர் கி. பி. 504-முதல் 587-வது வருஷம் வரையில் ஜீவித்திருந்ததாக மேலே சொல்லியிருக்கிறோம். இவரும் சற்றேறக்குறைய அந்தக் காலத்திலேயே வாழ்ந்திருக்கலாமென்று அனுமானிக்க வேண்டியதா யிருக்கிறது. இவர் வைத்திய சாஸ்திரத்தில் அநேக கிரந்தங்கள் எழுதியிருக்கிறார்.

ஃ

5. க்ஷபணகன்.

6. சங்கு.

7. வேதாளபட்டன்.

8. வரருசி.

இந்நால்வர்களும் நவரத்நங்களில் சேர்ந்தவர்கள்தாம். ஆனால், இவர்களை ஜனங்கள் நவரத்நங்களாகச் சொல்வதையும் இவர்கள் பெயரையும் தவிர அவர்களைப்பற்றி மற்ற வரலாறுகள் ஒன்றும்கிடைக்கவில்லை.

ஃ

9. கடகர்ப்பரன்.

இவரும் நவரத்நங்களில் ஒருவர். இவர் கடகர்ப்பரம் என்றொரு புஸ்தகம் மழைக்காலத்தைப்பற்றி வர்ணித்து எழுதியிருக்கிறார். இது தவிர, இவர் இருந்த காலம் முதலியன ஒன்றும் தெரியாது.

ஃ

மேலே கூறிய ஒன்பது பேர்களும் நவரத்நங்கள் எனப்படுவர். இவர்களைப் போலவே சிறந்தவர்களாகி மிகப் பிரசித்தரா யிருக்கிற வேறு எட்டு மகா கவிகளுண்டு. அவர்களைப்பற்றியும் இங்கு ஒருவாறு எழுதுவோம்.

ஃ

10. பவபூதி மகாகவி.

இக்காலத்தில் பேரார் (Berar) என்று வழங்குகிற விதர்ப்ப தேசத்தில் பத்மபுரம் என்று ஓர் பிரதான நகரம் இருந்தது. அந்த நகரத்தில் உதும்பர ஜாதி பிராமணர்கள் சிலர் வசித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுள் பட்டகோபாலன் என்று ஒரு பெரியவர் இருந்தார். இவர் தாம் பவபூதி மகாகவியின் பாட்டனார். இவர்களுடைய கோத்திரம் காச்யபகோத்திரம். யஜுர் வேதத்தின் தைத்திரீய சாகையை இவர்கள் அத்தியயனம் பண்ணி வந்தார்கள்.

தற்போது பல விசேஷங்களுக்குப் பந்துக்களை யழைக்காமல் தங்கள் வீட்டோடு செய்துகொண்டு செலவைச் சுருக்குவதே வழக்கமாகிக் கொண்டிருக்கிறது. தாங்கள் அவ்விதம் செலவுகளைச் சுருக்கி நடத்தி யிருப்பதால், அவ்விதம் நடத்தும் மற்றவர்களைத் தாழ்வாகப் பழிப்பதற்கும் இடமில்லாமல் தங்களின் வாயை மூடிக்கொள்ளவேண்டியும் வருகிறது.

இந்தப் பட்டகோபாலருக்கு ஓர் குமாருருண்டு; அவர் பெயர் நீலகண்டர். இவர் ஜாதுகரணி என்னும் பெண்ணை மணம் புரிந்துகொண்டார். இவ்விருவர்களுக்கும் உண்டானவர் பவபூதி. பவபூதிக்கு 5-ம் தலைமுறையில் மகாகவி என்று ஒருவர் இருந்தார். அவர் வைதிக கருமங்களில் மிகுந்த ஆஸ்தையுடையவரென்றும் வாஜபேய யாகம் செய்தவரென்றும் தெரிய வருகிறது. வேதம், உபநிஷத்து, சாங்கியபாதம், யோகம் முதலியவைகளைத் தான் நன்ருய்ப் படித்திருப்பதாகத் தன் நாடகங்களில் காட்டிக்கொள்கிருர். அன்றியும் பவபூதி "ஞானநிதி" என்ருெரு பெரிய சந்நியாசியிடம் வேதாந்தத்தைச் செவ்வையாய் அப்பியசித்ததாகத் தெரியவருகிறது.

ஃ

பவபூதி செய்த முக்கிய கிரந்தங்கள் மூன்று நாடகங்களாகும், அவைகளாவன: மகாவீர சரித்திரம், உத்தர ராமசரித்திரம், * மாலதீ மாதவம். இவைகளில் மகாவீர சரித்திரம், அவர் முதல் முதலில் செய்தபடியால் அவர் பெயருக்குத் தகுந்த அவ்வளவு அழகாயில்லை. மற்ற இரண்டு நாடகங்களும் மிகவும் நேர்த்தியானவைகள். அபிப்பிராயங்களை எடுத்துக்காட்டுவதில் காளிதாஸனைவிட பவபூதியை உயர்ந்தவராகச் சொல்லலாம். பதங்களால் பவபூதி படிக்கிறவர்களை மயக்கி விடுவதில் அதிக சமர்த்தர். நதி, அருவி, மலை, காடு, இவைகளைப் பவபூதி வர்ணித்ததுபோல ஒரு ஸம்ஸ்கிருத கவியும் வர்ணிக்கவேயில்லை.

ஃ

இந்த மகாகவி வசித்த காலத்தை நிச்சயப்படுத்த நல்ல ஆதாரங்கள் இருக்கின்றன, கநோஜா (Kanouja) தேசத்து அரசனுன யசோவர்மன் பவபூதியைத் தனது ஸம்ரக்ஷணையில் வைத்துக்கொண்டிருந்தான் என்று "ராஜதரங்கிணி" என்னும் புஸ்தகத்தில் கண்டிருக்கிறது. இந்த யசோவர்மராஜன் காச்மீர தேசாதிபதியான லளிதாதித்யன் என்பவனுல் ஜயிக்கப்பட்டான். லளிதாதித்யன் ஆண்டகாலம் கி. பி. 693-முதல் 729-ம் வருஷம் வரையில் என்று அநேக சிலாசாஸனங்களினுல் ஏற்படுகிறது. இதைக்கொண்டு பவபூதி கி. பி. 700-வருஷத்திக்குச் சரியாய் வஸித்ததாகச் சொல்லலாம். அதாவது, காளிதாஸனுக்கு 200-வருஷங்களுக்குப் பிறகாகிறது. காளிதாஸனின் கிரந்தங்களைப் படித்துத் தன் நாடகங்களை எழுதினதாக பவபூதியும் அநேக இடங்களில் காட்டியிருக்கிருர். அவரது மாலதீமாதவத்தில் ஒன்பதாவது அங்கத்தில் மாதவன் என்னும் கதாநாயகன் தன் நாயகிக்கு ஒரு மேகத்தைத் தூதனுப்புகிருன். அதானது, காளிதாஸனுடைய "மேகதூதம்" என்னும் காவியத்திலிருந்து எடுத்திருக்கக்கூடும். மேலும், இரண்டாவது அங்கத்தில் காமந்தகி என்னும் கிழவி சாகுந்தலத்தை எடுத்துப் பேசுகிருள். இதுவும் காளிதாஸனுடைய புஸ்தகங்களைப் படித்திருப்பதாக பவபூதி தான் காட்டிக்கொண்டதுபோலும்.

ஃ

சில ஜனங்கள் காளிதாஸனும் பவபூதியும் ஒரே காலத்தில் வசித்

* "மாலதீ மாதவம்" தமிழில் "ஆநந்த கதா கல்பகம்" ஆரும் வால்யத்தில் வெளிவந்திருக்கிறது. தனியாக அகப்படாது. மேற்படி வால்யம் ரூபாய் மூன்றுக்கு "அமிர்த குணபோதினி" ஆபீஸில் பெறலாம். தபாற் செலவு அணு 8.

தார்களென்றும், பவபூதி உத்தர ராமசரித்திரத்தை எழுதிக் காளிதாஸனிடம் கொண்டுபோய்ப் பிழை திருத்தச் சொன்னாரென்றும், அப்பொழுது காளிதாஸன் ஒரு தாஸியிடம் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தானென்றும், அச்சமயத்தில் பவபூதி ஒரு சுலோகம் படிக்க, அதுகேட்டு சுன்னம் அதிகமாய்ப்போச்சுதென்று காளிதாஸன் சொன்னானென்றும், அதைக் கொண்டு பவபூதி தன் சுலோகத்தைத் திருத்திக்கொண்டாரென்றும் சொல்வார்கள். "ராத்ரி ரேவம் வ்யாம் ஸீத்" என்று பவபூதி ஒரு சுலோகத்தை முடித்திருந்தாராம். அதன் அர்த்தம் "இரவு இம்மாதிரி கழிந்தது* என்பது. ஸம்ஸ்கிருதத்தில் ம் என்பது சுன்னம் என்று சொல்லப்படும். வெற்றிலை போட்டுக் கொள்ளும்பொழுது சுன்னம் (சுண்ணம்பு) அதிகம் என்று இரண்டு பொருள்படக் கூறியது கேட்டு "ராத்ரி ரேவம் வ்யாம் ஸீத்" என்பதில் சுன்னமாகிற மகர ஒற்று அதிகமென்ற கருத்து உணர்ந்து பவபூதியானவர் "ராத்திரி ரேவ வ்யாம் ஸீத்" என்று திருத்திக்கொண்டார். இதன் அர்த்தம் "ராத்ரி மாத்திரமே கழிந்தது" என்பதாகையால் முன் சொன்னதைவிட இது ரஸமாகவிருக்கிறது. ஆயினும், முதலில் "ஏவம் வ்யாம் ஸீத்" என்று பவபூதி எழுதிப் பிறகு, "ஏவ வ்யாம் ஸீத்" என்று காளிதாஸனின் நடையைக் கண்டு திருத்திக்கொண்டிருக்கலாம். ஆதலின், அதனாலேயே இவ்விருவர்களும் ஒரே காலத்தில் வசித்ததாக உத்தேசித்துக் கூறுவது உசிதமாய்த் தோன்றவில்லை. இன்னும் வேறு ஆதாரங்கள் இருக்குமாயின், அவைகளைக்கொண்டு அவ்விருவரும் ஒரே காலத்தில் வசித்தவரென்று கூறினாலும் கூறத்தகும்.

ஃ

11. தனஞ்சேயர்.

ஸம்ஸ்கிருத நாடகங்களுக்குரிய லட்சணங்கள் முதல் முதல் பரதர் என்கிற மகரிஷியால் கூறப்பட்டதாக ஜனங்கள் சொல்லுகிறார்கள். ஆனாலும், பெரும்பாலும் ஸம்ஸ்கிருதத்தைக் கற்றுணர்ந்து நாடகங்களைப் படித்து ஆநந்திக்கிறவர்கள் "தச ரூபகம்" என்கிற கிரந்தத்தையே நாடுவார்கள். பரத மகரிஷியால் செய்யப்பட்ட நாட்டிய சாஸ்திரத்தைப் போல "தச ரூபகம்" அவ்வளவு பழைமையானது அல்லாவிடினும், இதில் சொற்சுவை மிகவும் அதிகம். இக்கிரந்தத்தைச் செய்தவர் தனஞ்சேயர் என்ற மகாகவி. அவரது சரித்திரத்தைப்பற்றி அடுத்த ஸஞ்சிகையில் எழுதுவோம்.

(இனி 'இரண்டில்' முடிவு.)

ஹிந்து ஜாதியில் பெண் என்றால், பணச்செலவுதான். ஒரு பெண்ணுக்குப் புருஷனைத் தேடும் கஷ்டத்தால் பெண் குழந்தை பிறந்ததென்றால் அதைக் கேட்கத் துக்கந்தான் வருகிறது. பெண்ணைப் பெற்றோர்கள் எல்லோரும் தாங்கள் ஒருநாள் தங்களின் பெண்ணைக் கொடுத்த ஒருவனின் முன்பு கைகட்டி நிற்கத்தான் வேண்டும் என்று கவலையுடன் எண்ணுகிறார்கள். தாங்கள் தாழ்மையுடன் வணங்கி நடந்துகொண்டால்தான் தங்களின் பெண் கணவனின் வீட்டில் க்ஷேமப்பட முடியுமென்று எண்ணுவதிலும் உண்மையில்லாது போகவில்லை. மாமியின் கொடுமை பழய கதையல்ல. நாளைக்கும் அது பல இடங்களில் நர்த்தனம் செய்தே வருகிறது,

காதலும் பக்தியும்.

பக்தியாவது இடைவிடாதபிரேமம். அப்பக்தி புதல்வனுக்குத் தந்தையிட மிருக்கலாம்; அன்னையினிடத்திலிருக்கலாம்; ஓர் பெண்மணியின் பக்தி கணவனிடமிருக்கலாம். ஆனால் கடவுளையே தந்தையாகவும் தாயாகவும், பெண்டீராகவும், கணவனாகவும் நினைத்துச் செய்யும் பக்தி ஒப்புயர்வற்றது.

ஃ

பக்தியின் வழியும் காதலின் வழியும் ஒன்றே. காதலனைப் பிரிந்த காதலிக்கு ஒரு நிமிஷமும் ஒரு யுகமாகத் தோன்றும்; அப்படியே பகவானைப் பிரிந்த ஒவ்வொரு கணமும் பக்தனுக்கு ஒரு யுகம்போல் தோன்றும். காதலர்கள் தாங்கள் ஒருவரோடொருவர் சேர்வதற்கு முன்பு நீண்ட இரவைத் தூக்கமின்றிக் கழிப்பது போலவே, பக்தர்களும் "இனிமேல் நெடுங் கண்கள் இமை பொருந்தாப் பல நாளும்" என்றபடியே, பொருகயற்கண்ணினைத் துஞ்சாதுஇரவைக் கழிப்பர்! காதலாகிய கடலில் அமிழ்ந்துள்ள காதலர்க்கும், காதலையொத்த பக்தியாகிய கடலின் அமிழ்ந்த பக்தர்களுக்கும் இரவும் பகலும் ஒன்றாயிருக்கும். இருவரும் சேர்ந்த பின்பு காதலர்கள் இரவைத் தூக்கமின்றியே இன்பத்துடன் கழிப்பர்; பக்தர்களும் பகவானை யடைந்த பின்பு அவரைச் சேவித்த வண்ணம் துயிலின்றியே அந்தமில் பேரின்பத்துடன் இரவைக் கழிப்பர். அப்பொழுதும் இருவருக்கும் இரவும் பகலு மொன்றாயிருக்கும். "காதல், காதல், காதல்— இல்லையேல்' சாதல், சாதல், சாதல்" என்னும் வாக்கியம் பக்திக்கும் பொருந்தும்.

ஃ

காதலுக்கும் பக்திக்கும் மேற்கூறிய தருமங்களில் ஒற்றுமையுண்டெனினும், பரிணாமத்தில் இரண்டுக்கும் வேற்றுமையுண்டு. "எட்டு மட்டும் துன்பம், எட்டினால் பேரின்பம்" என்று ஒரு பெரியவர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இவ்வாக்கியத்தை ஒரு சதிபதிக்கிடையே யுள்ள காதல் விஷயத்திலும், ஒரு பக்தனுக்கும் பகவானுக்கு மிடையேயுள்ள பக்தி விஷயத்திலும் உவமானிக்கலாம். ஆனால், காதல் விஷயத்தில் இவ்வாக்கியம் பொருந்தாது. ஏனெனில், காதலர்க்கும் பக்தர்க்கும் எட்டுமட்டுமுள்ள துன்பம் சமானமானதெனினும், பின்பு காதலர்கள் அனுபவிக்கு மின்பம் பக்தர்களனுபவிக்கும்

ஒரு மாமி தன் குமாரனிடத்தில் தன் மருகி தனக்கு இடும் சாதத்துக்குள் தெரியாமல் நெய் ஊற்றி வைத்துவிடுவதாய்ப் புகார் செய்தனளாம். அதைக்கேட்ட குமாரன் புன்னகையுடன் தன் மனைவியை என் அப்படிச் செய்தாய் என்று கேட்க, "என் இலையில்மட்டும் நெய்யை அப்படியே கொட்ட மாமிக்குத் தெரிகிறது; தன் இலையில் ஒரு சொட்டு நெய் ஊற்றிக்கொள்வதற்கும் வருத்தப்படுவதால் அப்படிச் செய்தேன்; அதற்கு அடித்தாலும் பட்டுக்கொள்கிறேன்" என்றாளாம்.

பேரின்பத்தைவிடப் பன்மடங்கு சிறியது. ஆகவேதான் அதைப் பெரியோர் சிற்றின்ப மென்றனர் போலும்! ஆகவே, உற்றுநோக்கில் காதலும், பக்தியும் வேற்றுமையுடன் விளங்குகின்றன. தர்மத்தில் மாத்திரம் இரண்டுக்கும் ஒற்றுமையுண்டு. இவ்வாறு காதலுக்கும் பக்திக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விவரிக்கின் பெருகும்.

ஃ

பக்திக்கு காலம், இடம், சாதி முதலியவைகளின் நியமம் இல்லை. எச்சாதியினரும் எக்காலத்திலும் எவ்விடத்திலும் எத்தசையிலும் எம்பிரானுடைய எந்த ரூபத்திலும் பக்தி செய்யலாம். ஆனால், பக்தி என்பது பலாத்காரத்தினு லுண்டாக்கப்படுவதன்று. காதலனுக்கும் காதலிக்குமுண்டாகும் அன்பு போலவே அது இயற்கையா யுண்டாகவேண்டும். இராமபிரானிடத்துச் சபரிக்கும், கிருஷ்ண பகவானிடத்து கோபிகைகளுக்கும், நரசிம்ம பகவானிடத்துப் பிரஹ்லாதனுக்கும், பகவானிடத்து நாரதருக்கும் உள்ள பக்தியே பக்திக்கு உதாரணமாகும். நிதியைப் பெற விரும்புவோர், புதையல்களிருக்கு மிடங்களைக் காட்டும் சித்தாஞ்சனத்தைக் கண்களிலிட்டுக் கொள்ளுவதுபோல, பகவானுடைய ஸ்வரூபாதிகளை யறிய விரும்புவோர் பக்தியாகிய சித்தாஞ்சனத்தைத் தங்களுடைய அகக்கண்களிலிட்டு மகிழ்வர்.

K. S. ஸ்ரீநிவாசாசாரியார்.

முஞ்சியிலே முன்கோபம்!

சிலர், முகத்தில் முன்கோபம் காட்டி நின்றால்தான் வேலையாட்கள் சரிவர வேலையைச் செய்வரென நினைக்கிறார்கள். முகத்திற் கோபம் கொண்டாலும் அகம்குளிர்ந்து அன்பாயிருக்கவேண்டியது அவசியம். சிலர் அன்புடனே முகமலர்ந்து ஏவினால், வேலையாட்கள் அந்த அன்பிலே சிக்கி நன்றாக வேலைசெய்வரென்பர். இது பிறப்பிலேயே பெருந்தன்மை பூண்டோர்க்குமட்டுமே சாத்தியம். சிலர் வெளிக்குப் பிரியமாய் நடித்து உள்ளுக்குக் குளிர்ந்த கொள்ளிகளாய்க் கேடு விளைவிப்பர். சிரித்தபடியே யிருந்து வேலையைவிட்டு நீக்குவர். இன்னோர் நஞ்சினுங் கொடியர். சிலர் சிடுசிடுத்தபடியே வேலை வாங்குவர். சிலருக்கு உள்ளும் வெளியிலும் கோபத்தீ பற்றி எரியும். பேசுவதில் வாடா போடா என்று இழிந்த சொற்களும் உபயோகிப்பர். இத்தகையோரிடம் மானஸ்தர்கள் வேலைசெய்வது கடினம்.

ஹிந்துக்களில் எவராயினும் இறந்துவிட்டால், தீண்டத்தக்கவராயினும், தகாதவராயினும் மயானத்தை உபயோகித்துக்கொள்ளத் தடை இடையாது.

சரித்திரம் கற்பிக்கும் பாடம்.

(ஸ்ரீமான் புலாபாய் தேசாயின் வாக்கு.)

இந்தியா என் இக்கதிக்கு வந்தது? இக்கேள்விக்குப் பதில் எப்படி யளிப்பது? இக்கேள்விக்கு அளிக்கும் பதிலில் தான் சாரமிருக்கிறது. அதைக் கொண்டுதான் இந்தியாவின் பிற்கால வாழ்வு தீர்மானிக்கப்படவேண்டும்.

ஃ

தேச சரித்திரம் என்பது பெயர்களும், வருஷம் மாதம் தேதியும் நிறைந்ததானதோர் பாடமில்லை. அப்படிப்பட்டதாயின் தேச சரித்திரப் படிப்பு பிரயோஜனமே படாது. தேச சரித்திரத்தால் ஏற்பட்ட பாடத்தைக்கொண்டு தேசவாழ்வை மேன்மேலும் விருத்தி செய்யவேண்டும். இதுதான் தேச சரித்திரத்தின் பிரயோஜனம்.

ஃ

வாழ்க்கைக்கு உபயோகமானதோர் கொள்கையை நீங்கள் தேச சரித்திரப் படிப்பிலிருந்து அறியாவிட்டால் படிப்பின் பிரயோஜனம் என்ன?

ஃ

உங்கள் தேசத்தின் நிலையை ஆராய்ந்து பார்த்தீர்களா? அதற்கு உங்களால் செய்யக்கூடிய ஊழியம் யாது? ஊழியம் எவ்வாறு இருக்க வேண்டுமென்பது தேச சரித்திர ஆராய்ச்சியினாலல்லவா ஏற்பட வேண்டும்?

ஃ

இந்தியா மூன்றுவிதமான அடிமைத்தனத்திலிருக்கிறது. அவைகளில் இரண்டு நம்மவர்களால் ஆன அடிமைத்தனமே. (1) சமூக அடிமை, (2) மத அடிமை, (3) அன்னிய அடிமை. இம்மூன்று அடிமைத்தனங்களில் இந்தியர் சிக்கியிருக்கின்றனர். இதனால்தான் நாம் இக்கதியிலிருக்கிறோம்.

ஃ

எல்லோரும் பி. ஏ; எம். ஏ; ஆகிவிட்டு உத்தியோகங்களில் அமருவதில் என்ன பிரயோசனம்? கல்வியின் பயன்தான் என்ன? மூளையை விஷயங்களால் நிரப்பவா? அல்லது வாழும் வழியை அறியவா? அடிமை வாழ்வால் ஏற்பட்ட அசௌகரியத்தைக் கவனித்தீர்களா? நடக்கிறது நடக்கட்டும் என்ற அடிமைப்புத்தி வந்துவிட்டதல்லவா? இத்தனைக்கும் சுதந்திரமே வாழ்வு என்று மேல்நாட்டார் அளித்த படிப்பிற்குப் பிறகுங்கூட அடிமைப்புத்தி மாறவில்லை.

ஃ

நம் புத்தி நம் ஸமூகத்திற்கு அடிமைப்பட்டிருக்கிறது. நாம் இப்படி ஓர் குறுகிய நோக்கத்தையுடைய

"அமிர்த குணபோதினி" எதையும் அனுபவரீதியாகவே ஆராய்ந்து வெளியிடும் பத்திரிகையாகும். அனுஷ்டான ஞானத்திற் கண்டவைகளையே அது விவரிக்கின்றது.

ஒரு ஸமூகப்போக்கு ஆளாய் இருப்பதா? எல்லோரும் சமம் என்று அறியப்படுவதே சுதந்திரத்தின் முதல் தத்துவம். அப்படிப்பட்ட சமத்துவமில்லாத ஸமூகம் விருத்தியடைய மாட்டாது.

ஃ

சாதாரணமாக மதவிஷயங்களில் கருத்தைவிட்டு அனுஷ்டானம் மாத்திரம் நிற்பதாலும் அடிமைப்புத்தி விருத்தியாகிறது. குணமில்லாத குரு ஆடையினால் மரியாதையடைகிறார். ஆத்ம அறிவு விளக்கமே மதமாகும். இவ்வித அறிவு அர்த்தமில்லாத அனுஷ்டானங்களினால் ஏற்படாது. உள்ளே ஓங்கி நிற்கும் அறிவு வெளிப்படவே ஹரிஜன இயக்கம். மிக்க சுத்தமான ஈசுவர நம்பிக்கையை நமக்கு ஊட்டுவதற்கே கோவில்கள் ஏற்பட்டன. நாம் இப்பேர்ப்பட்ட ஸ்தலங்களை லௌகிக ஆசைகளுக்காகப் பயன் படுத்தக் கூடாது.

ஃ

வெறும் தர்க்கத்துடன் நாம் நிற்கவேண்டாம். வேண்டிய அளவு பேசியாயிற்று. இனி, செய்கைதான் வேண்டும். குணங்களில் மிகச் சிறந்தது மனோ தைரியம், மனோ வலிமை, சத்தியத்திற்காக அஞ்சா நெஞ்சத்துடனும் கலங்கா உறுதியுடனும் பாடுபடுவது!

ஃ

எதனால் உருவத்தில் மிகச் சிறந்து இருப்பவருக்கு உலகத்தில் எல்லாவரைக்காட்டிலும் விசேஷ மரியாதை? மேற்கூறிய குணங்களினாலன்றோ? உங்களிடம் நல்ல சக்தியிருக்கிறது. நீங்கள் எவ்வாறு இருந்தீர்கள் என்பதைச் சற்று யோசித்தால் இவ்வாறு நடக்க மாட்டீர்கள்.

உனக்கு எது வேண்டும்?

சிறந்த படிப்பும், பிரஸங்க வன்மையும், நூல் இயற்ற வல்ல திறனும் வாய்ந்த வனப்பு மிக்க வனிதாரத்நம் வேண்டுமானால் தருகிறேன். ஆனால், அவளிடத்திலிருந்து எந்த மகவையும் நீ எதிர்பார்க்க முடியாது. அவளுக்குக் குழந்தைகளே யிராது. அபூர்வமாய் ஒன்று உண்டானாலும் ஒரு வருஷத்திற்குள் மறைந்துவிடும். நீங்கள் இருவருமே குழந்தைகள்போன்று தான் சந்ததியற்று வாழவேண்டும். இது பிரியமா? வேண்டுமா?

அல்லது, படியாத பெண்ணும், சண்டையிடும் துஷ்டையுமான மனைவி வேண்டுமா? அவளிடம் பல குழந்தைகளை நீ பெற்றுக்கொள்ளலாம். மனைவிக்குப் படிப்பு வேண்டுமானால் குழந்தைகளிராது. குழந்தை வேண்டுமானால் மனைவிக்குப் படிப்பு இராது. எது வேண்டுமென்று கடவுள் கேட்கிறார். இதற்கு விடை எப்படி?

துரௌபதி கூந்தல் முடித்தல்.

—மஹா பாரதப் போரின் சுருக்கம்.—

(518-ம் பக்கத் தொடர்ச்சி)

III

இவ்வாறு கர்ணனும் அசுவத்தாமாவும் ஒருவரையொருவர் எதிர்த்து நிற்கையில், இவர்களின் செவிக்கு ஒரு சப்தம் கேட்டது. "துரௌபதையின் கூந்தலைக் கைப்பற்றி இழுத்த கொடும் பாவியே! மானிடப் பதரே! நல்ல சமயத்தில் சிக்கிக்கொண்டாய்! போர் வீரர்களே! கர்ணன், துரியோதனன் முதலியவர்களே! எந்த மானிடப்பதர் பாஞ்சாலதேசத்துப் பெண்மணியைக் கொண்டையில் கைபோட்டுப் பெரியவர்கள் கூடியிருக்கும் சபைக்கு இழுத்துவந்ததோ அந்தப் பதரின் மார்பைப்பிளந்து இரத்தத்தை உங்கள் கண் முன்பாக இதோ நான் பானம் பண்ணப்போகிறேன். உங்களால் கூடுமானால் என் கையிலிருந்து அப்பதரை மீட்டுக்கொள்ளுங்கள்" என்ற சத்தம் இவர்கள் காதில் விழுந்தது. பீமசேனன் துச்சாதனனை மடக்கிக்கொண்டு போர் செய்யத் தொடங்கினானென்று போர்க்களத்தினின்று மேற்கண்டவாறு பெருங் கூச்சல் ஒன்று கேட்கவே, உடனே கர்ணன் எழுந்து துச்சாதனனுக்குத் துணையாயிருந்து பீமசேனனை வதைக்க வேண்டுமென்று சொல்லிப் போய்விட்டான். அவனுக்குத் துணையாகத் துரியோதனனும் சென்றான். அசுவத்தாமா தனது ஆயுதங்களைக் கர்ணன் சாகுந்தனையும் தொடுகிறதில்லையென்று உறுதி செய்துகொண்டதைப் பற்றித் துரியோதனன் கனவருத்த முற்றவனாய், "ஐயோ! பீமனும் அருச்சுனனும் மதம்பிடித்த யானைகள்போல் சண்டைசெய்கையில், கர்ணனும் யானுமா அவர்களுக்கு நிகராக நிற்கப்போகிறோம்" என்று நினைத்துத் துக்கித்தான்.

ஃ

முன் சென்ற கர்ணன் துச்சாதனனுக்குச் சார்பாய்ப் பீமனுடன் அமர்புரிய, அர்ச்சுனன் துரியோதனனை மடக்கிக்கொண்டு அடித்து மூர்ச்சிக்கச் செய்துவிட்டுக் கர்ணனை எதிர்த்துச் சண்டை செய்யச் சென்றான். இவ்வாறிருக்கப் பீமன் துச்சாதனனின் உதிரத்தைக் குடிக்கப்போகிறதாகவும் அதற்குத் துரியோதனனையே ஸாக்ஷியாக்குகிறதாகவும் பெருங் கூச்சலிட, அதுகேட்டுக் கவுரவ சேனையிலுள்ளோர் அனைவரும் நடுங்கி நின்றார்கள். அந்த சத்தத்தைக்கேட்ட அசுவத்தாமா, "ஐயோ! நான் கர்ணன்மீது கோபத்தால் ஆயுதத்தைப் போட்டுவிட்டேன்; இத்தருணத்தில் அரசனுக்கு யாதும் உதவி செய்யக்கூடாமற் போய்விட்டதே" என்று பச்சாத்தாபங்

அழகாயுள்ள ஸ்திரீகளின் முகம், எப்படிப்பட்ட தன்மையுடையவர்களையும் பட்சமாய்ப் பேசவைக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை.

கொள்ள, கிருபாசாரியர் தான் அரசனுக்கு உதவி செய்வதாய்ப் போர்க்களத்துக்கு விரைந்தோடினார். அசுவத்தாமா எழுந்து கூடாரம் போய்ச் சேர்ந்தான்.

ஃ

பீமசேனன் முன்னே சபை நடுவில் பிரஞ்ஞை செய்தபடி துச்சாதனன் உதிரத்தைக் குடிக்கவேண்டுமல்லவா? அவ்வாறு மனித ருதிரத்தைப் பருகுதல் பிசாசங்களின் செய்கையேயன்றி மனிதர்க்குத் தருமமல்லவே எனத் தேர்ந்து, அவனிடத்தில் அனுப்பிரவேசித்து இந்தச் செயலைச் செய்யும்படி இடும்பி (பீமசேனன் மனையாட்டியான ஒரு ராக்ஷஸி) தன் வேலைக்காரனாகிய உதிரப்பிரியனென்னும் பிசாசத்தைத் தன் கணவன் பின்னே அனுப்பிவைத்திருந்தாள். அவ்வண்ணமே அதன் அனுப்பிரவேசத்தினாலே பீமன் துச்சாதனன் மார்பைக் கதையால் பிளந்து தான் முன் பண்ணின பிரதிஞ்ஞைப்படி ஒரு கை உதிரத்தைக் குடித்துவிட்டு மற்றதை உடம்பு நிறையப் பூசிக்கொண்டு நின்றான். இதைக்கண்டு மூர்ச்சை போன துரியோதனன் நெடுநேரம் மூர்ச்சை தெளிந்து எழுந்திராமற் போகவே, ஸாரதி அவனை ரதத்துடனே வேறு வழியால் போர்க்களத்தைவிட்டு வெகுதூரம் அப்பால் கொண்டுபோய் விட்டான்.

ஃ

சிறிது நேரம் கழித்து அரசன் மூர்ச்சை தெளிந்து, "அடா, தம்பி! பயப்படாதே இதோ நான் உன்னைப் பாதுகாக்கின்றேன்" என்று சொல்லி ஸாரதி, என் தேரைப் பீமன் சமீபத்திற் செலுத்து என, சாரதி, பீமன் பிரதிஞ்ஞையை நிறைவேற்றி விட்ட சங்கதியை விளங்கச் சொன்னான். துரியோதனன் அது கேட்டவுடனே சிறிதுநேரம் ஞாபகமே யில்லாமல் மூர்ச்சையாய்க் கிடந்து, ஞாபகம் வந்த பின்பு, தன் தம்பி பகைவன் கையிற் சிக்கி ஆபத்தையடைந்த சமயத்தில் தேரை அங்கிருந்து அப்பால் ஓட்டிக்கொண்டு வந்ததற்காகச் சாரதியின்மீது கோபம்கொள்ள, சாரதி, வேந்தே! தாம் மூர்ச்சையடைந்துவிடவே சாரதி தருமப்படி நான் தேரை இப்பால் நடத்தி வந்துவிட்டேன் என்று கூறினான். அரசன் அடடா! பகைவர் அம்பினால் நான் மூர்ச்சையடைந்தது போலவே, அவைகளினாலேயே நான் மூர்ச்சை தெளிந்திருந்தால் நன்றாயிருக்குமே; என் பந்துக்களெல்லாம் இறந்து போனபின்பு, எனக்கு ராச்சியமேன், சுகமேன், நானும் அவர்களுடன் மரித்துவிடுவதே நலம்! ஆனால், பீமன் கையினால் மாத்திரம் சாகக் கூடாது என்று சொல்லித் துக்கித்துக்கொண்டிருந்தான்.

ஃ

இவன் இப்படி யிருக்கையில் கர்ணன் சேவகனாகிய சுந்தரகன் என்பவனொருவன் துரியோதனனைத் தேடிக்கொண்டு கடைசியில் அவன் இருக்குமிடம் வந்து சேர்ந்தான். யுத்த பூமியிலிருந்து சுந்தரகன் வந்திருப்பதாகச் சாரதி அரசனுக்கு அறிவிக்க, துரியோதனன் சுந்தரகா, கர்ணன் க்ஷேமமாயிருக்கிறானா என்று கேட்டான். சுந்தரகன், இதுவரையில் தேகம்மட்டில் க்ஷேமம்தான்

ஒருத்தி தன் கற்புக்குத்தானே ஹானியைத் தேடிக்கொண்டால் அது அவள்மீது சுமரவேண்டிய பழி. அப்படியின்றி அகஸ்மாத்தாய் அவள் கற்புக்கு ஹானியுண்டாக நேரிமோனால் அது தெய்வ சங்கல்பம்.

என்று உரைக்க, அங்கு நடந்தவைகளை விவரமாய்ச் சொல்லும்படி அரசன் கட்டளையிட, சுந்தரகன் சொல்லத் தொடங்கினான்.

ஃ

துச்சாதனனைக் கொன்றதற்காகப் பீமன்மீது கர்ணன் கோபம் கொண்டு பெரும்போர் புரியத் துவக்க, அர்ச்சுனன் பீமனுக்குச் சகாயமாய் வந்து சேர்ந்தான். அதைக் கண்ட விருஷசேனன் (கர்ணன் புதல்வன்) கர்ணனுக்குச் சார்பாக வந்து அர்ச்சுனனுடன் யுத்தம் செய்யத் தொடங்கினான். அவனை அர்ச்சுனன் கண்டு, "குழந்தாய், விருஷசேனா, உன் தகப்பன்கூட என்னெதிர் நின்று போர்புரியச் சக்தியற்றவனாயிருக்க, நீ உனக்குத் தக்க சிறு பயல்களுடன் போர் செய்யாமல் என்னிடம் வந்து சேர்ந்தாயே! அய்யோ! சிறுவனே! வீணே மடிந்துபோகாதே" என்று இகழ்ந்துபேச, விருஷசேனன் கடுஞ்சினங்கொண்டு பெரும் போர்செய்து அர்ச்சுனன் சேனைகளில் பலரை மடித்து அர்ச்சுனன் சரீரமுழுதும் அம்புகளால் அடித்துப் புண்படுத்தினான். அர்ச்சுனன் வெகு கோபத்துடன் விருஷசேனின் ரதத்தை முறித்து வில்லை அறுத்து அவன்மேல் பகழிகளைப் பொழிய, விருஷசேனன் ஆயுதமொன்று மில்லாதிருந்தும் கிறுகிறென்று சுழன்றுகொண்டே யிருந்து அர்ச்சுனன் பாணங்கள் ஒன்றுகூடத் தன்மேல் பட ஒட்டாமல் தப்பித்துக் கொண்டிருந்தான். அதுகண்டு கர்ணன் பீமனுடன் சண்டை செய்வதை விட்டு அர்ச்சுனன்மீது பாணப்பிரயோகம் செய்யலானான். அதற்குள் வேறு ரதம் சித்தமாய் வந்துவிடவே விருஷசேனன் அதில் ஏறிக்கொண்டு முன்போலவே அர்ச்சுனனுடன் யுத்தம் செய்யத் தொடங்கினான். இருவரும் ஒருவர்க்கொருவர் உயர்வு தாழ்வு இன்றி வெகு விசித்திரமாக யுத்தம் செய்ய, அதைப் பார்க்க வேண்டுமென்று பீமன் கர்ணன் இருவரும் தாங்கள் யுத்தம் செய்வதை விட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். அர்ச்சுனன் தன் இரு கைகளாலும் அநேகம் அம்புகளெறிந்து விருஷசேனனின் ரதமே தெரியாதிருக்கும்படி மறைத்துவிட்டுக் கர்ணனைக் கூவி, "அடா கர்ணா! நான் இல்லாத காலத்தில் நீங்கள் பலர் ஒன்றுகூடி என் குமாரன் அபிமன்னியுவைக் கொன்றீர்களல்லவா? இப்பொழுது உன் முன்னேயே நான் ஒருவனாய் உன் மகனைக் கொல்லுகிறேன் பார். இப்பொழுது இவன் உயிரைப் பாதுகாக்க உன்னாலாகுமா என்று சொல்லிக்கொண்டே விருஷசேனன்மீது சரமாறி பொழிந்து கூரியதோர் அம்பினால் மார்பில் அடித்தான். ஐயோ! அந்த வேதனையைப் பொறுக்கமாட்டாமல் விருஷசேனன் ரதத்தின்மேல் விழுந்து சுவர்க்கம்போய்ச் சேர்ந்துவிட்டான் என்று சுந்தரகன் சொல்லி அழுதான். அதைக்கேட்ட துரியோதனன் விருஷசேனன் மடிந்துவிட்டதற்காக வெகுநேரம் துயரப்பட்டு, சுந்தரகா, பிறகு கர்ணன் என்ன செய்தான் என்று கேட்க, சுந்தரகன் சொல்லுகிறான்.

ஃ

மனிதர்களில் ஒவ்வொருவருக்கும் மிகுந்த படிப்பு, பெரிய அறிவு, உயர்ந்தகுலம், திரண்ட செல்வம், பாரிய உத்தியோகம் எல்லாமிருந்தும் அவரவர்களுடைய சுபாவம் மாத்திரம் இவைகளெல்லாவற்றிற்கும் வேறாயிருக்கிறது.

கர்ணன் தன் குமாரன் இறந்த துக்கத்தால் மதிமயங்கிக் கடுஞ்சினம் கொண்டு அர்ச்சுனன்மீது ஓயாமல் சரமாரிபொழியத் தொடங்கினன். பீமன் நகுலன் சஹாதேவன் முதலியவர்கள் அர்ச்சுனனுக்குத் துணையாக வந்து சூழ்ந்துகொண்டார்கள். சாரதியாகிய சல்யன் கர்ணனை நோக்கி, தமது ரதம் சிதைந்துவிட்டமையால் இப்போது பீமார்ச்சுனர்களுடன் இதிலிருந்து யுத்தம் செய்வது உசிதமல்ல என்று சொல்ல, கர்ணன் ரதத்தைவிட்டுக் கீழே இறங்கி, வேறொரு ரதம் கொண்டுவரச் செய்து அதன்மேல் ஏறி யுத்தத்துக்குப் புறப்பட்டார். அப்போது அருகேயிருந்த என்னை அழைத்து, தன் உடம்பில் பெருகும் உதிரத்தாலே எழுதி உங்களிடம் கொடுக்கும்படி இதை என் கையில் கொடுத்தார் என்று சொல்லித் தன் கையிலிருந்த காகிதத்தை அரசனிடம் கொடுத்தான்.

(இனி, 'இரண்டில்' முடிவு.)

எந்த சோப் கையிருப்பிலிருக்கும்?

சோப் என்பதில் குளிப்பதற்கு உதவும் சோப்பு எப்பொழுதும் வீட்டில் தயாராக இருக்கும். ஒரு சோப் கட்டி பல நாளைக்கு வரும். ஆனால், துணிகளைத் துவைப்பதற்குப்போடும் சோப்போ, புளி, மிளகாயைப் போலவோ, ஸ்நான சோப்பைப் போலவோ எப்போதும் வீட்டிலிருப்பதல்ல: மொத்தமாய் வாங்குவதுமல்ல. அவ்வப்போது வேண்டிய சமயம் சில்லரையில் விலக்கு வாங்குவதும், அன்றே மறுதினமோ அது தீர்ந்துபோவதுமாகும். இது ஸ்நான சோப்புக்கும் துணி வெளுக்கும் சோப்புக்குமுள்ள பேதமாகும்.

கூலி கொடுப்பவனை எதிர்ப்பதின் பலன்.

தான் அன்றாடக் கூலியாக ஓரிடத்தில் வேலை செய்கையில், தன் வேலையில் சிரத்தையில்லாமலோ, தனக்குக் கூலி கொடுப்பவனை எதிர்த்தோ நடந்துகொள்ளுகையில் அதன் பலன் மாலையில் தெரிந்துவிடுகிறது. மறுதினத்துக்கு அவன் வேலைசெய்ய வேண்டாமென்று கூலிதரும் எஜமானன் கூறிவிடுகிறான். பிறகு இந்தக் கூலி அந்த இடத்தைவிட்டு நீங்கிவிடவேண்டியதே. அப்பால் எதிர்க்கவோ மீறிப் பேசவோ இடமின்றி அத்துடன் அவ்விடத்திய தொடர்பு விட்டுப்போகின்றது. இவ்வாறு தன்னை நீக்கி வெளியில் போய்விடும்படி செய்யக்கூடிய சக்தியுள்ள எஜமானனை எதிர்த்துக்கொள்வோர் பட்டேயறியும் முட்டாள்களின் வகுப்பைச் சேர்ந்தவராவார்.

பெண்ணைத் தொடப் பாத்தியதை.

ஒரு பெண்ணைத் தொடுவதற்குப் பாத்தியதை யுள்ளவர்கள்தான் தொடுவார்கள். அன்னியர் தொட்டால் கலகமாய் முடியும். ஒரு பெண்ணுருவம் எந்தப் பெண்ணையும் தொட்டுப் பேசுவதைக் காணும்போது, அதைப் பார்க்கும் ஆடவருக்கு அது ஒரு அதிசயக் காட்சியாய்த் தோன்றும். எத்தனை அழகிய யுவதியாக இருப்பினும் உடன் பிறந்த சகோதரனுக்கு அவளைத் தொடுவது ஒரு குற்றமாகத் தோன்றுவதில்லை. அக்கா என்றழைத்துத் தம்பி ஓடி வந்து கட்டிக்கொள்ளுகிறான். ஒரு கைக் குழந்தை தன் தாயின் இடுப்பிலேறிக் கொள்வதுடன் அவளுடைய மார்பகத்தின்மீதும் கை வைத்துக் கொள்ளுகிற சொந்தம் பெற்றிருக்கிறது. தந்தைக்குத் தன் குமார்த்தி ஒரு பெண் என்றே படுவதில்லை. அவளைச் சிறு குழந்தையாகவே நினைத்துத் தொட்டுப்பேசிக் கொஞ்சுகிறார். அத்தை மகளிடத்தில் அதிக சொந்தமாய்ப்பேச நெருங்குகிறார்கள். வைத்தியரும், வளையற்காரரும், நாவிதரும் தங்களின் தொழில் முறையில் பெண்களைத் தொடுகிறார்கள். ஆற்றில் தவறி விழுந்த பெண்ணை எவரும் நதியில் குதித்துத் தொட்டுத் தூக்கப் பாத்தியதை பெறுகிறார்கள். மாங்கல்யம் சூட்டியதும் அப்பெண்ணைக் கணவன் தொட முடிகிறது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாத்தியதை இருந்தே பெண்ணைத் தொடுகிறார்கள். தொடாமலே தூர நின்று பேசுவது, அவ்விதம் தொடக்கூடாத உறவின்முறையிலும், அன்னிய இடத்திலும் தான்.

நீ யாரடா தடியா?

தனது குமார்த்தியின் ஒன்பதாவது பிராயத்தில் தன் மனைவியிடம் கோபித்துக்கொண்டு வெளிநாடு சென்ற ஒருவர் பத்து வருஷங்களுக்குப் பிறகு தன் ஊர் திரும்பி, தன் குமார்த்தியைக் காண அவளது கணவனின் வீட்டிற்குச் சென்றார். அப்பொழுதுதான் தலைக்கு எண்ணெயிட்டுக்கொண்டிருந்த அவரது குமாத்தி ஓடி வந்து தன் தந்தையை அடையாளம் கண்டு கொண்டு ஆநந்த பரிதையாயினள். வீட்டில் வேறு பெண் துணை காணாமையால், தந்தையே தன் குமார்த்திக்கு சீயக்காயிட்டுத் தலை தேய்த்து விடலானார். அத்தருணத்தில் அப்பெண்ணின் கணவன் அங்கு வந்து, தன் மனைவியைப் பாதி உடையுடன் இருக்கும் போது எவனோ ஒருவன் தொட்டு நீராட்டுவதைக் கண்டு ஆத்திரம் பொங்கி, "நீ யாரடா தடியா?" என்று சினத்துடன் வினவினான். தந்தை புன்னகையுடன் "இவர் தான் மருமகப்பிள்ளையா?" என்று தன் பெண்ணைக் கேட்க, அவளும் 'ஆம்' என்றாள். கணவனும் விவரம் கேட்டுத் தெரிந்துகொண்டு, தான் தூஷித்ததற்கு மன்னிக்கும்படி வேண்டி, தன் மாமனாரை நோக்கியவாறு அதிசயித்து நின்றான். "சிறு குழந்தையில் நான்தான் தலைக்கு ஊற்றுவேன்! அந்தப்பழகிய கை இப்போதும் இங்கு வந்து விட்டது. தொடப் பாத்தியமில்லாவிடில் நான் இங்கு நிற்பேனா?" என்று மாமனார் மருமகனை நோக்கிக் கூறினார். ஒரு பெண்ணைத் தொடுகிற பாத்தியதை ஒரு பெரிய கனத்த விஷயமாகும்.

நமது முஸ்லிம் ஸகோதரர்கள்.

—இஸ்லாமியரின் பக்தி வைராக்கியம்—

நமது முஸ்லிம் ஸகோதரர்கள் நம்மினின்றும் வேறுபட்ட மதஸ்தர் தான். அவர் தம் ஆசார வழக்கங்கள் வேறு; நம்முடையன வேறு; இருவகுப்பாரும் கூடி உண்டு உறவாடுவதற்கில்லை யென்பதும் உண்மையே யெனினும்; இவ்விருதிறத்தாரும் தத்தமக்கே யுரிய ஆசார அனுஷ்டானங்களுக்காக, ஒருவரை யொருவர் தூஷணை புரியாமல் மிகுந்த மதிப்புடன் கூடி வாழ்வதற்கு எவ்வளவோ இடமிருக்கிறது. நன்றாய்க் கூடி ஆலோசனை புரிந்து, இவ்விருதிறத்தாருக்குமிடையே விரிந்திருக்கும் மனவேறுபாட்டை உடனே நீக்குதற்குரிய ஏதுக்களைத் தேடல் வேண்டியது ஆவசியம்.

ஹிந்துக்களிலே, யோகிகளும், வைராக்கியர்களும் ஹிந்து மதத்தைச் சிறப்பித்து நிற்கும் வண்ணமாகவே "இஸ்லாம்" மதத்திலும் அதன் ஸ்தாபகர்களும், ஆசாரியர்களும், ஆழ்வாராதியர் போன்ற ஞானிகளும், மிகுந்த யோக வைராக்கியம் கொண்டமர்ந்தோர் என்ற உண்மையை அறிவீர்களா? மஹா வைராக்கியராகிய ஜனகராஜனைப்பற்றி நன்கு அறிவீர்கள். அவர் ராஜாதி ராஜ பதவி யுற்றிருந்தபோதிலும், உலகப்பற்றை அறவே யொழித்து விடவில்லையா?

அது போலவே இஸ்லாம் மதஸ்தாபனம் செய்தோரின் பெருமையையும், அவருடைய வைராக்கியச் சிறப்பையும் நோக்குமிடத்து, அவ்வளவு அருமையும் உயர்வும் வாய்ந்தோர் உலகத்தில் காண்பது மிகவும் அரிதேயாகும். இஸ்லாம் ராஜ்ஜியஸ்தாபனார்த்தமாக, அநேக சண்டைகள் புரிந்து பற்பல ஜாதியாரை வென்று எவ்வளவோ பொருள் திரட்டியவர், தனது அந்திமதிசையில் தனக்குப் பின் வைத்துவிட்டுப்போனது என்னவென்பது தெரியுமா? ஓர் கிழிந்த பாயலும் பட்டியுமே. இஸ்லாம் ராஜ்ஜீய ஸ்தாபகராகிய மகம்மது நபியவர்களின் கடைசி சம்பத்து மேற் குறித்தவையே.

மகம்மது நபியவர்களின் பெண்ணைப்பற்றியும், அப்பெண்ணின் கணவரான "ஆலி" என்பவரைப் பற்றியும் ஓர் இனிய கதையுண்டு. ஒரு நாள் ஆலி யுத்தத்தில் வெற்றி பெற்று சேனைக்குக் கொடுத்ததெல்லாம் போக தன் பங்குக்கு அநேக மோஹராக்கள் கிடைத்தது. அன்றையதினம் மகம்மது நபியவர்களுக்கு

சிலர் எவ்வளவோ படித்தும் கேட்டும் தம் ஜீவியத்தை நடத்திக்கொள்ளுவதில் சுத்த முட்டாள்களாயிருக்கிறார்கள். சிலர் பகிரங்கத்தில் பெரிய மனிதர்களாகவும் பெருமை பெற்றவர்களாகவும் காணப்பட்டு, அந்தரங்கத்தில் வெகு அற்பமான மனுஷராயிருக்கிறார்கள்.

சாப்பிடுவதற்குக்கூட ஒன்றுமில்லை. யுத்தத்தில் வெற்றுபெற்று வேண்டிய பொருள் தனது மருமகனுகிய ஆலி கொண்டு வந்தாரென்று கேட்டுத் தானும் தன் தோழர்களும் சிஷ்யருமாக ஆலி வீட்டுக்கு விருந்தினராய்ப் போய் விடலாமென்று அவர் வீட்டில் வந்து 'ஆலி' என்று கதவைத் தட்டிக் கூப்பிட்டார்.

ஃ

அப்போது 'ஆலி' வீட்டிற்கு வந்து சேரவில்லை. ஆனுல், வீட்டில் 'ஆலி'யினுடைய பத்தினியாகிய மகம்மது நபியவர்களின் புத்திரி குழந்தையுடன் தனித்திருந்தாள். கூப்பிடுவது தகப்பனுர் என்று அறிந்தவுடனே, 'ஆலி' வெளியிலே போயிருப்பதாயும் தான் மட்டிலுமிருப்பதாயும், உள்ளே யிருந்தே பதில் கூறினுள். மகம்மது நபியவர் தமது புத்திரியை வெளியிலே வர வேண்டினுர். அதற்கிணங்க அம்மாது "அப்பா, நீ தனிமையாக வந்திருக்கிருயோ, அல்லது வேறே யாரோடு மிருக்கிருயோ?" என்று கேட்டாள். அதற்கு மகம்மது நபியவர்கள் தனது நண்பருடன் வந்திருப்பதாகச் சொல்வதைக் கேட்டு, அந்த ஸ்திரீரத்தினம் "அப்படியானுல், தனக்குத் தக்க ஆடையில்லாமைபற்றி, மகம்மது நபியவர்களைத் தனித்து, மற்ருேர்க்கு முன் வெளிப்படல் கூடாது" என்ருள். மகம்மது நபியவர்கள் இதைக் கேட்டார். "நாங்கள் உன் வீட்டில் போஜனத்துக்கு வந்திருக்கிருேம்; பின் 'ஆலி' எங்கே போயிருக்கிருர்" என்று வினவ, அதற்கு அந்நங்கை "எங்கேயோ போனவர் இன்னும் திரும்பி வரவில்லை" என்றனள். அதற்குத் தந்தை "எங்களுக்கு நல்ல சாப்பாடு போடு" என்ருர். "அண்ணு, இன்றையதினம் என் குழந்தை பாலில்லாமல் பட்டினியாய்க் கிடக்கிறது" என்ருள். "குழந்தைக்குப் பாலில்லையா? அதென்னம்மா?" என்ருர் தந்தை. அதற்கு அவரது குமாரி, "சண்டையில் வெற்றிபெற்றுக் கையிலகப்பட்ட சொத்துகளனைத்தையும் அந்த இடத்திலேயே ஏழைகளுக்குத் தர்மம் பண்ணி விட்டார்" என்றனள். இது வைராக்கியத்தின் செய்கையல்லவா?

ஃ

ஹிந்துக்கள் யோகத்தைப் பற்றியும் ஏகாக்கிர சித்தத்தைப் பற்றியும் பேசுகிருர்கள். முஸ்லிம்களிலும் பலர் ஸமாதி நிலைமையை யடைந்திருந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. 'ஆலி' சண்டையில் காயம்பட்டு ஈட்டியானது அவரது தொடையில் அழுந்திப்போய் விட்டது. அது அதிக உபத்திரவப்படுத்திய படியால், அதைத் தொட்டிழுப்பதற்கு அஸாத்தியமாயிருந்தது. அவருடைய சிஷ்யனெருவன் மகம்மது நபியவர்களிடத்திற்கு ஓடி, "எங்களுக்கு ஒன்றும் தோன்றவில்லை, ஆலியின் தொடையில் ஒடிந்துபோன ஈட்டி யொன்று போய் மாட்டிக்கொண்டது, அதைப் பிடுங்கி விடுவோமென்ருல் முடியாதென்று தடுக்கிருர், அதை எப்படி எடுக்கிறது?" என்று கேட்டான். அதற்கு மகம்மதுநபியவர்கள் சொன்னதாவது :— "இப்பொழுது ஒன்றும் செய்யாதீர்கள்; அவன் அல்

நாடகக் கம்பெனிகளை வைத்து நடத்திப் பழயநாளில் நாடகங் காட்டுவதாயிருந்தது ஒரு கம்பெனி ஒரு ஊருக்கு வரின் மூன்று நான்கு மாதங்கள் இருப்பதுண்டு. இப்பொழுதோ பல ஆக்டர்கள் ஒன்றுகூடித் திடீரென ஒரு ஊரில் நாடகம் இரண்டொன்று நடத்தி அங்கு வந்த பணத்தைப் பங்கிட்டுக்கொண்டு மறு நிமிஷமே மறைவதாயிருக்கிருர்கள்.

லாவைக் குறித்துத் தியானஞ் செய்து உட்கார்ந்திருக்கும்போது பிடுங்கினீர்களானால் அவன் அதை உணரவே மாட்டான்" என்ருர். அப்படியே 'ஆலி' தியானத்திலிருக்கும்போது அதைப் பிடுங்கினர்கள். அதனால் 'ஆலி'க்கு யாதொரு உணர்ச்சியும் உண்டானதாகக் காணப்படவில்லை. கடவுளினிடத்தில் கொண்ட தியான வைராக்கியத்தைக் கண்டீர்களா?

ஃ

யோகத்தையும் ஸமாதியையும் பற்றிப் பேசும்போது மகம்மது நபியவர்களைப் பற்றியும் எவ்வளவோ கூறலாம். "அயிஷா" என்ற பெண்மணி அவரது மனைவி. அவர் தனது மனைவியுடனிருந்து உல்லாஸமாய்ப் பேசிக்கொண்டிருக்கும்போதெல்லாம் உலகத்தையே மறந்து, தங்கள் ஸம்பாஷணையாகிற இன்பக்கடலி லாழ்ந்திருப்பது வழக்கம். அப்படிப்பட்ட ஸமயத்தில் ஜபத்திற்கு வேளை வந்துவிட்டதெனத் தெரிந்தால் அந்த க்ஷணமே தன் பக்கத்திலிருக்கும் தனது அருமை மனைவியையும் அனைத்தையும் மறந்து விடுவார். அல்லாவைத் தியானம் செய்யும் வேளை வந்துவிட்ட வுடனே இவருடைய ஹிருதயமானது அந்தக் கடவுளிடத்தில் போய்ச் சேர்ந்து விடுகிறது, உலகத்தை முற்றும் மறந்து விடுகிருர். ஆருயிரும், தனதன்புக் கிடமும், அதிரூபவதியுமான மனைவி தன்னருகிலிருப்பதைக்கூடச் சிறிதும் உணரார்.

ஃ

இஸ்லாமிய வேதமாகிய கொரானை வாசித்துப் பார்க்கும் பட்சத்தில், இஸ்லாமிய ஸம்பிரதாயங்களைப் படித்துணருவோமானல், மகம்மதியத் துறவிகளைப்பற்றி வாசித்தறிவோமானல், மேற்கூறிய தர்ம நெறிகளும், கிரியா விசேஷங்களும், கோட்பாடுகளும், ஜாதி முறைமைகளும் சிறப்பாக எழுதப்பட்டுள்ளதைக் காணலாம். தெய்வபக்தி நன்ருயமைந்துள்ளது. கடவுளிடத்தில் மனதை ஒரு முகமாகச் செலுத்தித் தியானஞ் செய்யும் முறைபாடுகள் வியக்கத்தக்கவாறு கூறப்பட்டுள்ளன. ஹிந்து மார்க்கங்களில் உலகம் பொய், சரீரம் பொய், ஆத்மா அனாதியானது என்னும் உண்மைகளை எவ்வளவு உறுதியாய் விளக்கியுளதோ, அவ்வளவு உறுதியாய்க் கொரானிலும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. ஹிந்துக்கள் கொரான் வேதத்தையும், இஸ்லாமியர்கள் பகவத் கீதையையும் வாசித்துப் பார்த்து ஒருவரைக் காக்க மற்றவர் துணையாக முன் வரவேண்டும்.

ஃ

முஸ்லிம் ஸகோதரர்களே! நீங்கள் ஹிந்துக்களுடன் கூடி ஐக்கியமாகவேண்டும். நம்மிரு பிரி

பந்துக்களைப் பார்த்துவர வேண்டுமென்று ஆவலோடும் அவர்கள் இருக்கும் ஊருக்குப்போன இடத்தில் தன்னை விருப்பத்தோடும் அழைத்து உபசரிப்பவர்கள் இருந்தால்தான், தான் செலவு செய்துகொண்டு சென்றதற்கு ஒரு திருப்தியும் இருக்கும். அப்படிப் போன இடத்தில் தன்னை ஒரு பாரமாக நினைக்காதிருந்தால்தான் மற்ருெருமுறை அங்குவரவும் முடியும். அவ்விதமின்றி அங்கு கலகமும் சண்டையுமாய் அவமானப்பட்டால் பிறகு எந்த நாளிலும் அந்த இடத்துக்குப் போகப்போவதுமில்லை; அந்த உறவைப் பின்னர் மதிக்கப்போவதுமில்லை.

வோர்க்குமுள்ள பொது நன்மைகள் பிரிக்கப்படக் கூடாதவாறு சடவுளால் ஒன்றாய் அமைக்கப்பட்டிருப்பதை நாம் உணரவேண்டும். முஸ்லிம் ஸகோதரர்களே! நீங்கள் இந்த தேசத்தில் பிறந்தீர்கள்; ஹிந்துக்களாகிய நாங்களும் இப்பாரத தேசத்தையே ஜன்ம பூமியாகக் கொண்டவர்கள். எங்கள் வாழ்வும் செல்வமும் உங்களுடையது; எங்கள் கெடுதி உங்களுடையது; அதாவது, எங்களுக்குத் தீங்கு நேர்ந்தால் உங்களுக்கும் நேர்ந்தது போலாம். நாங்கள் பலமில்லாமலிருப்பது நீங்கள் பலமில்லாதிருப்பதாகும். எங்களுக்குப் பலமிருந்தால் நீங்களும் பலசாலிகளாயிருப்பீர்கள். நீங்கள் பலமாயிருந்தால் நாங்களும் பலமாயிருப்போம். நம்மிருவருக்குள்ளே ஒரு கட்டுப்பாடும் வலிமையும் ஏற்பட்டிருந்தால்தான் நாம் எதிர்நோக்கி நிற்கும் சிறப்பு வாய்ந்த வாழ்க்கையும், இராஜரீகங்களும் இப்போது அமைந்திருக்கும் ஒழுங்குபாடுகளுக்கு யாதொரு கலக்கமுமின்றி அதி சுலபமாய்க் கைகூடும்.

இழப்பதற்கு முதல் ஆரம்பம்.

ஒரு வீட்டையோ நகையையோ அடகு வைப்பதென்பதும், வட்டியில்லாமல் ஒரு பெரிய தொகையைக் கடனாகப் பெற்று அதற்குப் பதிலாக ஒருவரிடம் 'ஒத்தி'க்கு வீட்டை விட்டுவிடுவதென்பதும் அவற்றை இழந்து போவதற்குச் செய்கிற முதல் ஆரம்பமாதும். பாங்கியில் அடகு வைத்த நகைகளும் வீடும் திருப்பப்படாமலே ஏலத்திற் போனதுமுண்டு. ஒத்திக்கு வைத்துப் பணம் பெற்ற இடத்தில், திரும்பவும் பணம் செலுத்த முடியாது வீட்டை இழந்ததுமுண்டு. ஆதலின், சீக்கிரம் திருப்பிக்கொள்ளக் கண்ணாயிருக்க வேண்டும். ஏமாறி இழந்துவிடக்கூடாது

வேலைக்காரனும், எஜமானனும்.

எஜமான் இட்ட கட்டளையின்படி வேலையாள் தனது வேலையைச் செய்யவேண்டுமேயன்றி, வேலையாள் தனக்கு ஆலோசனை கூறும்படி எஜமானன் வைத்துக்கொள்ளக் கூடாது. அது எஜமானத்துவத்திற்குத் தாழ்வு. ஆனால், யோசனை சொல்லக்கூடிய வேலையாளுமுண்டு. அத்தகையோரிடத்தில் எஜமானனுக்கு எப்போதும் தனித்த ஒரு மதிப்பு இருந்துகொண்டேயிருக்கும். எஜமானனே வலியச் சென்று அத்தகைய நுட்ப புத்தியுள்ள வேலைக்காரனை யோசனை கேட்கவும் முற்படுவான். இதில் கேவலமில்லை. ஆனால், தகுந்த யோக்கியதையோ புத்தியோ யில்லாத ஒரு அல்ப வேலையாள் தனக்கு யோசனை சொல்லும்படி வைத்துக் கொள்ளக் கூடாது. அது ஒரு சொட்டு.

மூத்த மனைவியின் அருமை.

முதலாவது நெப்போலியன் தன் மூத்த மனைவியுடன் வாழ்ந்தவரையில் ஏகசக்ராதிபதியாகி ஐரோப்பாக் கண்டத்தையே நடுங்கச் செய்தான். பின் அவளை விலக்கி வேறு பெண்ணை மணம்புரிந்த பின்னரோ தோல்வி கண்டு கைதியாகிச் சிறைச்சாலையிலேயே காலமானான். பெரும்பாலும் மூத்த மனைவியின் நல்ல அதிர்ஷ்டத்தாலேயே அவள் கணவனுக்கு எல்லாச் சம்பத்துகளும் சிறப்புங் கூடுகின்றன. குடும்பச் செழிப்பும் உண்டாகின்றது. உண்மையிலேயே வெற்று வீடாகக் கிடந்த இடத்துக்கு முதன்முதலாகத் தான் வந்து ஸம்ஸார விளக்கை ஏற்றி வைத்தவளும் அந்த முதல் மனைவியாகிய லக்ஷ்மீ தேவதைதான். அவள் காலமாய்விடில் அத்துடன் கணவனின் பாக்கியங்களும் பறந்து சிதறிவிடுகின்றன. அல்லது அந்த முதல் மனைவி உயிருடன் இருக்கையிலேயே அவளை வெறுத்து மறுமணம் புரிந்தாலுங்கூட அப்போதும் கணவனுடைய வாழ்வு விருத்தி குன்றித் தமோறிவிடுகிறது. தன்னைக் கணவன் விலக்கியதில் அந்த மூத்த மனைவி கொள்ளும் வருத்தமும் கண்ணீரும் கணவனுக்குப் பெரும் சாபமாக முடிகின்றது. மூத்தவளைத் தவிக்கவிட்டு இளையவளோடு வாழ்ந்தவர்கள் அநேகமாய் உருப்பட்டதில்லை. எவ்வளவோ பெரிய வாழ்விலிருந்தும் தொப்பென்று கீழே விழுந்துவிடுகிறார்கள். மூத்த மனைவியைக் கொன்றுவிட்டு இளையவளோடு வாழ முயன்று பிறகு அகப்பட்டுக்கொண்டு தூக்குத் தண்டனை யடைந்து குட்டிச்சுவராய்ப் போனவர்களுமுண்டு. மூத்தவளே தாரம், இளையவள் பாரம், மூன்றுவது கோரம், நாலாவது நாசம்.

அன்பு தோன்றும் விதங்கள்.

ஏழைகளிடத்து உண்டாகும் அன்பிற்கு இரக்கமும் பரோபகாரமும் காரணம். ஜந்துக்களிடத்து உதிக்கும் அன்பிற்கு தயையும் ஜீவகாருண்ணியமும் காரணம். நோயாளிகளிடம் அன்புண்டாவதற்கு அவர்களின் பரிதாப நிலைமையும், அவர்கள் படும் கஷ்டங்களைப் பார்த்துச் சகியாத தர்ம குணமும் காரணம். விரோதிகளிடம் அன்புண்டாவதற்கு, விரோதத்திற்குமுன் அன்புடனிருந்த பழக்கம்காரணமாகிறது. அத்துடன், அபகாரிகளுக்கும் உபகாரம் செய்ய வேண்டுமென்ற பெருந்தன்மையாலும், இவ்வுலகில் நன்மை செய்தார்க்கும் தீமை செய்வோருக்கும் நடுநிலையாய் இருக்கவேண்டுமென்ற எண்ணத்தாலும், எவரையும் விரோதிக்கக் கூடாதென்கிற சித்தாந்தத்தாலும், பகைவரிடத்தும் இரக்கம் காட்ட நேரிடுகிறது. தாய் தந்தையரிடத்தும், சகோதரர்களிடத்தும் கொள்ளும் அன்பிற்கு கடவுளால் நியமிக்கப்பட்ட ரத்தபாசம் என்பது காரணமாகிறது. ஒருக்கால் கோபாவேசங்களால் அன்பு குறைந்ததாகப் பாவிக்கப்படினும், அது நீடித்து நில்லாது. ஒரு வியாதி, ஆபத்து நேரின் பழய அன்பு மறுபடியும் கூடிக்கொள்ளும். மனைவியினிடத்து உண்டாகும் அன்பு தனது வாழ்க்கையில் அருந்துணைவி என்பதாலும், விவாக காலத்திற் செய்த பிரமாணிக்கங்களாலும் உண்டாகின்றது. குழந்தைகளிடத்து உண்டாகும் அன்பு பெற்றெடுத்த பாசத்தால் தோன்றுவது. உறவினரிடத்துக் கொள்ளும் அன்பு தனது கடமையால் ஏற்படுகின்றது. நண்பர்களிடத்துக் கொள்ளும் அன்பு நட்பாலும் பிறவிக்குணத்தாலும் தானாகவே உதிப்பதாகும்.



ஹாஸ்ய சஞ்சீவினி



பத்மன்:—ராமன் என்னைப்பற்றி என்னென்ன உண்மையாக அறிந்து கொண்டானோ, அதை யெல்லாம் 'அல்ல' வென்று மறுத்து வெகு சாமர்த்தியமாய் ஒரு கடிதம் எழுதி அனுப்பிவிட்டேன். அதில் அவன் தந்த அன்பு(!)ப் பரிசுகளையும் கேவலப்படுத்தி எழுதித் தீர்த்தேன். ரொம்ப ரொம்ப பேஷான கடிதம்.

ரங்கன்:—நீ அனுப்பிய கடிதத்தால் இன்னும் உன் துர்க்குணங்களை ராமன் கண்டுகொள்ளும்படி வைத்ததைத் தவிர வேறெதையும் நீ செய்துவிடவில்லை. அன்பு(!)என்று ராமனின் அன்பைக் கேவலப்படுத்திச் சொல்லுகிற நீ மகா அன்புள்ளவனா என்பதைச் சிறிது நினைத்துப் பார்த்துக்கொள். ராமன் உனக்குத் தந்த அன்புப் பரிசுகள் அன்புடனே கொடுத்ததாகவே இருக்கும். கொடுத்துவிட்டுப் பிறகு உன்னுடைய ஏமாற்றிப் பறிக்கிற ஈனகுணங்களைக் கண்டுகொண்டபின் சீ! இப்படிப் பட்ட மனிதனுக்கா கொடுத்தோம் என்று ராமன் வருத்தப்பட்டிருக்கலாம். உன் சகவாசத்தையும் வெறுத்திருக்கலாம். அவ்வளவே தவிர, ராமன் உனக்கு முதலில் பரிசு தந்தபோது அன்புடனேயே தந்தான் என்பது நிச்சயம். அன்பு இல்லாவிட்டால் பரிசாக ஒன்றைத் தரத் தோன்றியிராது. பரிசு தந்ததில் ராமனுக்கு நஷ்டம்; பெற்றுக்கொண்ட உனக்கோ லாபம். முதலில் சந்தோஷமாய் லாபம் அடைந்துவிட்டு, இப்போது மகா அன்போ என்பது மூடத்தனம்.

∴

வாத்தியார்:—கண் பார்ப்பதற்கென்றால் மூக்கு என்னத்திற்காக?

பையன்:—கண்ணாடி வைப்பதற்கு ஸார்.

∴

கர்ப்பிணி:—ரொம்பக் கஷ்டமாயிருக்கு; இடுப்பெல்லாம் நோகிறது.

புருஷன்:—நான் அப்போதே கர்ப்பத்தடைக் கருவியை உபயோகிக்கச் சொன்னேனே? கேட்டாயா? புத்தியில்லாமல் செய்துகொண்ட காரியத்துக்கு இப்போது அழுது என்ன செய்கிறது?

∴

விதவை:—சில்லரை வேலைகள் செய்யவும், கடைக்குப் போய்வரவும், என் உத்தரவுகளையெல்லாம் மறுக்காமல் செய்யவும், கூடிய மனிதர் ஒருவர் எனக்கு வேண்டும்.

ஓர் யௌவன புருஷன்:—அம்மா, தாங்கள் ஓர் புருஷனுக்குப் பார்க்கிறாப்போல் தோற்றுகிறது. அப்படியானால், நானே தங்களின் இஷ்டப்படி இணங்கி நடந்துகொண்டு அடிமைவேலை செய்ய வருகிறேன்.

∴

கல்யாணி:—நீ இப்போது வாத்தியாராகவும் வைத்தியராகவும் இருக்

“நேரில் நன்றாக இருப்பதைப் புஸ்தகத்தில் விகாரப்படுத்திக் காட்டும் திறமை எழுத்துக்காரர்களுக்கு உண்டா இல்லையா? * * துரும்பைத் தூணாகவும், அணுவை அண்டமாகவும் பெருக்கி எழுதுங்குணம் உண்மையான ஒரு அனுதாபியின் லக்ஷணமாக இருக்க முடியுமா? “கேசரி? (நகரதூதன்)

இன்றுயே. கலியாணமானதும் இத் தொழிலை விட்டு விடுவையோ?

வைத்தியப்பெண்:—ஏன்? என் கணவனுக்கும் குடும்பத்துக்கும் வைத்தியம் செய்வதிலும், வீட்டிலிருந்த படியே வைத்தியம் செய்து பொருள் தேடுவதிலும், என் பிள்ளைகளுக்கு உபாத்தியாயராகிப் பாடம் சொல்லிக் கொடுப்பதிலும் காலத்தைக் கழிப்பேன்.

ஃ

தண்டுணி:—சேஷி இரண்டாந் தாரமாய்க் கல்யாணமானுளல்லவா? அவள் புருஷன் ஓயாமல் அழைக்கிற பெரிய பிடுங்கல் மனுஷனும். ரொம்ப தொந்தரவு படுத்துகிறுனும். அதற்குள்ளே அவள் மூணு மாசமாய் முழுசாமலிருக்காளாம்.

பாக்கியம்:—உனக்கு இந்த சங்கதியெல்லாம் யாரடி சொன்னு?

தண்டுணி:—சேஷி நேற்று இங்கே வந்திருந்தாள். அப்போசொன்னு? ஒரு மணி நேரம் ஓயாமல் சொல்லிக் கண்ணைத் துடைத்துக்கொண்டாள். பாவம்!

பாக்கியம்:—என்ன ஹிம்ஸை யிருந்தாலும் சேஷி இதையெல்லாம் வெளியே சொல்லலாமா? அது ஒரு பெண்ணுக்கு அழகல்லவே.

தண்டுணி:—போடி போ! நீ மகா படித்தவள்! பெண்ணுக்குப் பெண்ணு சொல்லிக்கொண்டா என்னடி? இதிலே வெட்கமென்னு இருக்கு?

ஃ

சேஷி:—இனி சொல்றது என்னடி இருக்கு? நன்றாய் வாழ்ந்த குடும்பம் அவளுடைய மகன் குளத்தில் தவறி விழுந்து சாக,அவனோடு குடும்பமே அடியோடு கெட்டுப்போச்சுதடி. என்ன பாவம் பூர்வத்திலே பண்ணுளோ?

காமாக்ஷி:—ஆமாம், உனக்கும் ஒரே மகன் தான். உன் கதியும் இப்படியாகாதிருக்க உன் குமாரனைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளடியம்மா. நீயும் உன் புருஷனைப் பிடுங்கித் தின்று ரொம்பபாவம் பண்ணவள் தான்.

சேஷி:—உன் மூஞ்சியைப் பாரு! ஏண்டியப்படிச் சொல்லுறே! என் உன் ஊத்தைவாயாலே பிடுங்குறே. நீ நாசமாய்ப் போக.

ஃ

—"நல்லது, சிநேகிதா, நீ என்ன வியாபாரம் செய்கிறுய்?"

—"கடை வியாபாரம் செய்கிறேன்."

ஃ

மகள்:—அம்மா, ராத்திரியிலே என் தந்தை என்னவோ குடிக்கிருரே, அதென்ன?

தாய்:—வைத்தியர் கொடுத்த மருந்து மகளே.

மகள்:—அது அவருக்குக் கோபத்தை யுண்டாக்குவதுந் தவிர, என்னையும் உன்னையும் வாயில் வந்தபடியெல்லாம் திட்டி உதைக்கச் சொல்லுகிறதே.

தாய்:—அது அப்பேர்ப்பட்ட வியாதி, என்ன செய்யலாம்?

மகள்:—ஏன், காலையில் கடன்காரர்கள் நம் வீட்டுக்கு வந்து வாயில் வந்தபடி யெல்லாம் திட்டும்போது

பள்ளிக்கூட பாட புஸ்தகங்களைப் பரீக்ஷை தேர்ந்ததும் எறிந்து விடுகிறார்கள். அவற்றைப் பத்திரமாகச் சேர்த்துவைப்பதே புத்திசாலித்தனமாம்.

அந்த சமயம் என் தந்தை இந்த அடி உதைகளை அவர்களிடமும் காட்டலாமே. அப்போதுமட்டும் ஆட்டுக் குட்டிபோல் அடங்கி அவர்களுக்குப் பதில் சொல்லியனுப்பி என் அவ்வளவு சாதுவாயிருக்கிறார்?

ஃ

குமார்த்தி:—பூனை என்றால் என்ன?

தாய்:—இரவில் நாம் தூங்கும் போது நம் காலை வந்து சுரண்டுகிறதே அதுதான் பூனை

குமார்த்தி:—நான் தூங்கிய பிறகு உன் காலை வந்து சுரண்டுகிறதே, அதுவா பூனை? அப்படியானால் பூனை என் தந்தையா?

வெளி விலையை அறிவதில்லை.

கடையிலிருந்துபுருஷர்கள் வாங்கிவரும் சாமான்கள், காய்கறிகள் முதலியவற்றின் விலையை வீட்டிற்குள்ளேயே இருக்கும் பெண்கள் அறிவதில்லை. ஒரு அணாவுக்கு வாங்கியதை அரையணா என்று நினைக்கிறார்கள். அவ்விதம் எண்ணிப்பணம் போட்டு வாங்கி வந்ததின் அருமை தெரியாமல் பாழ்.செய்கிறார்கள். இவர்களே சம்பாதித்துக் கடைக்குச் சென்று வாங்கினால் அருமை தெரியும்.

தங்கமான குணம்!

ஒருவனையோ, ஒரு பெண்ணையோ தங்கமான குணம் என்று கூறினால், அது ஒரு சிறப்பான சிலாகிப்பும் பாராட்டுதலுமாகும். தங்கத்தின் குணமென்ன? அது ஆபத்துக்கு உதவக்கூடிய உபகாரச் செய்கையுள்ளது. தங்கம் ஒருவனுக்குப் பெரிய தைரியத்தைக் கொடுக்கக்கூடியது. தங்கம் லக்ஷ்மீதேவதைக்கு சமானம். தங்கம் அழகு தரும், துணைப்பலமாகவும் நிற்கும். தங்கபஸ்பம் தேகத்துக்கு வலிவு தரும். தங்கத்தைச் சுட்டுக் கருப்பாக்கினாலும், காய்ச்சினாலும், அடித்தாலும் என்றைக்கும் கெடாத ஒரே சத்திய நிலையில் தங்கமாகவே நிற்கும். என்றைக்கும் தனது நிலை மாறாது. புளிப்பேறிக் கெடுக்கிற கெட்ட செய்கை தங்கத்தினிடமில்லை. ஆதலின், ஒவ்வொருவரும் தங்கம் போலிருக்க முயலவேண்டும். மாறிக்கெட்டு மங்கி மதிப்பு இழந்து விடுகிற கிலிட்டுத் தங்கம்போல் இராதே.

"என் தகப்பனார் கையெழுத்தான கணக்குப் புஸ்தகம் கண்டவுடனே, என் சிறுவயது முதல் எனக்குக் காட்டிய அன்பை என் முன் படம்போல் நிறுத்தி, என்னால் அடக்கக்கூடாத துயரத்தோடு கண்ணீர் சொரிந்து வாய் விட்டழுதேன்."

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

புருஷனை ஆட்டிவைக்கிற பூங்கோதைகள்!



கேட்கிறீர்களா என் விகட துரைச் சிங்கங்களே! சேவலைவிடப் பெட்டைக்கோழி அதிகம் கூவுவதானால், அந்த அவலக்ஷணத்தை விகடன் என்னவென்று சொல்லட்டும்! தெருவெல்லாம் தனக்கே சொந்தமென்று நினைத்துக்கொண்டு யானை போவதைப்போலப் பூனையும் போவதானால் அது பொருந்துமா? மதிப்பு தருமா? புருஷன் உயர்ந்திருக்க, பெண் அவனுக்கு ஒரு படி தாழ்ந்திருக்க வேண்டுமென்பதல்லவோ உலக ஏற்பாடு! இவ்விதம் தாழ்ந்து பணிந்து அடக்கம் காண்பித்துத் தனது நன்னெறியாலும் உத்தம குணங்களாலும் உயர்ந்து பரிமளிப்பதல்லவோ பெண்மணிகளுக்குச் சிறப்பாகும்! குடித்தனமே ஒரு யாகசாலையாகவும், அதில் பெண்கள் நடந்துகொள்ளும் விதம் ஒரு யாகத்தைச் செய்வதுபோலுமல்லவோ இருக்கவேண்டும்! குடித்தன யாகத்தைப் பெண்மணிகள் சரிவர நிறைவேற்றினால், அதைக் காட்டிலும் சிறந்த யாகம் வேறில்லையென்று மகரிஷிகளும் ஒப்புக்கொண்ட சங்கதியல்லவோ! இல்லற யாகத்தை இளங்கோதைகள் இனிது நிறைவேற்றி அதினின்றும் ஞானக்கண் படைப்பதன்றோ மேன்மை! வாழ்க்கையின் தத்துவங்கள் என்னவென்பதையே பெண்கள் அறியாத நிலையில் புருஷ விசுவாசம் கெட்டுப்போய், கணவனிடத்தில் அடக்கம் தாழ்மையின்றி நடந்துகொள்வதானால் அந்த வீட்டிலே சந்தோஷம் மனோ நிம்மதி எப்படித்தானிருக்கும்! இப்படி அவலக்ஷணப்பட்டு முள்வழியை மிதித்துக்கொள்கிற பூங்கோதைகளின் புத்திப்போக்கை விகடன் கொஞ்சம் இங்கே காட்டுகிறேன்! நீங்களும் எட்டிப் பாருங்கள்!

ஃ

சில புருஷர்களுக்குத் தங்களின் உத்தியோகத் தொல்லையே பெரும்பாடாயிருப்பதில், வீட்டுக் கூட்டத்தைச் சமாளித்து வீட்டின்செலவுகளைக் கவனிக்க முடியாமல், வந்த சம்பளத்தை மனைவியிடம் கொடுத்துவிட்டு, வீட்டுச்சமுசாரக் கவலை தங்களுக்கு எட்டாதபடியும், ஏதோ

தாங்கள் வந்தவேளைக்குப் புசித்து விட்டு உறங்கவும், உத்தியோக நேரத்தில் வேலைக்குப் போகவுமாக இருந்து அம்மட்டில் ஒதுங்கிக்கொள்கிறார்கள்! இந்த வகையிலே வீட்டுக்காரியிடம் பிரதிமாதமும் ஒரு மொத்தத்தொகை வந்து கலகலவென்று கொட்டு வதிலே, வீட்டுக்கார அம்மாளுக்கு மூணு கொம்பு முளைத்துப்போகுது! தானே ராணியென்றும், தன் புருஷன் தான் இல்லாவிட்டால் புத்தி சாலித்தனமாக நடக்கமாட்டானென்றும் நினைத்துவிடுகிறாள்! வீட்டுப் பெண்களெல்லாம் குடும்பத்தை நடத்துகிற மானேஜர் (நிர்வாகி)களல்லவா? கையிலே துட்டு ஏற ஏற கணவன் என்ற மதிப்பே இல்லாமல் போய் அவனுக்குப் புத்தி சொல்லத் தொடங்கிவிடுகிறார்கள்! மிக்க வேண்டியவனொருவன் வீட்டிற்கு வந்தால், வீட்டுக்கார மனுஷர் அவரை உபசரித்து அவருக்குப் பலகாரம் காபி வையென்றால், அம்மாள் முணுமுணுக்குகிறாள்! காலை 9-மணி ஆச்சுதே, இன்னுமா சாப்பிடாம விருப்பாரு, அவர் சாப்பிட்டு வந்திருப்பாரு, நீங்கள் ஏன் சும்மா கத்துகிறீர்கள் என்கிறாள்! அதற்குள் வந்தவர் முகம் நாணிக் கோணி வெட்கப்பட்டுக் கொண்டு, "நான் இப்போதுதான் சாப்பிட்டு வந்தேன்" என்கிறார். உடனே வீட்டுராணி—'கேட்டீர்களா அவர் சொல்வதை! நானும் வேணுமென்று வைக்காமல் போனேனா, அவரே சாப்பிட்டுவந்திருக்கிறேனென்று சொல்லும் போது நான் எப்படிப் பலகாரம் காபி அவருக்கு வைக்கிறது! நான் ஏதோ செய்யாத கருமிக்காரிபோல நினைத்து, வீட்டுக்கு வருவார்போவாரிடத்திலெல்லாம் என்னை இழுத்து விட்டுப் பேசிக் கேவலப்படுத்துகிறீர்களே! இதிலெல்லாமா உங்களுக்குப் பெரிய மனுஷத்தனம் வந்து பொத்திக்கொண்டது" என்று ராமாயணம் ஆரம்பித்து விடுகிறாள்! வந்தவரோ முகம் சுருங்கிப்போகிறார்! வீட்டுக்கார ராஜாவோ ஒரு சின்ன சங்கதிக்கு இவ்வளவு பேச்சா என்று நெஞ்சுக்குள்ளே வருத்தப்பட்டுக் கொள்கிறார்!

ஃ

வரக்கூடாத பந்துக்கள் திடீரென்று வந்து விடுகிறார்கள்! வீட்டுக்காரியோ வெறும் வாய்ப்பேச்சுப்பேசி அம்மட்டிலே அனுப்பிவிட நினைக்கிறாள்! வந்திருக்கிறவர்களோ இரண்டு நாளைக்குத் தங்கிவிட்டுப்போக நினைக்கிறார்கள்! வீட்டுக்காரன் அதை விசாரித்துத் தெரிந்துகொண்டு மனைவியிருக்குமிடம் போய்க் கேட்டாலோ, அதற்கு அவள் புராணம் ஆரம்பித்து விடுகிறாள்! "நேற்றே நான் விறகு இல்லையென்று சொன்னேனே! வீட்டிலே ஒரு பண்டமும் இல்லையே! இவர்களையெல்லாம் கட்டிக்கொண்டு மாரடிக்கிறதற்கு யாராலே யிருக்கு? வந்தவர்களை வந்தபடி யனுப்பிவிடாமல் என் தலையில் கட்டினால் நான் என்ன செய்யட்டும்? என்னாலே இந்தப் பாடுபடமுடியாது" என்கிறாள்! இந்த மாத சம்பளம் கொடுத்துப் பதினைந்து நாள்கூட இன்னும் ஆகவில்லையே, அதற்குள்ளேயா செலவாய் விட்டது; வீட்டிலே பண்டங்கள் இல்லாவிட்டால் வாங்கிப் போடுகிறதுதானே என்கிறான் வீட்டுக்காரன்! உடனே வீட்டுக்கார ராணி தன் பிரஸங்கத்தை ஆரம்பித்து விடுகிறாள்! "நீங்கள் கொடுக்கிற பணம் எந்த மூலைக்கு வரும்? நான் அல்லவா எப்படியோ என் சமர்த்தினாலே குடித்தனத்தை நடத்திக்கொண்டு போகிறேன்! நீங்கள் தரும் பணம் வீட்டுச் செலவுக்கே போதாதிருக்க, இந்த விருந்து இழவுகளையெல்லாம் எப்படி மாரடித்துத் தொலைக்கிறது என்கி

ருள்! வீட்டுக்காரனுக்குக் கோபம் பொங்குகிறது. "ஏண்டி, வீட்டுக்குப் பிறர் வந்திருக்கையில் இழவு என்றும் மாரடிக்கிறதென்றும் சொல்லுகிறாய்; என் அவர்களின் முன்னே என்னைத் தலைகுனிய வைக்கிறாய் என்கிறான். அதற்கு அம்மாள் "உங்களுக்குக் கொஞ்சமேனும் புத்தியிருக்கா; இவ்வளவு பாடுபடுகிறாளே யென்று நீங்கள் நினைத்துப் பார்க்கக் காணோமே; வீட்டுக்கு வந்தவர்கள்மேலிருக்கிற சிரத்தையும் கவனிப்பும் என்மேல் இருக்கா; அந்த ஜரிகைக் கொட்டடிப் பட்டுச்சேலையைத்தானே கேட்டேன், வாங்கிக் கொடுத்தீர்களா? அதற்கெல்லாம் உங்கள் கைக்குப் பணம் இல்லாமலே போய்விடும்; இந்த வெட்டி வீண் விருந்துகள் நடத்தமட்டும் பணம் எங்கிருந்தாவதுவந்துவிடும்;ஏதோ நாலுகாசுமிச்சம்பிடித்து அதற்கு ஏதாவது ஒன்று வாங்குவோமென்று நினைத்தால் அதற்குள்ளே இப்படிக் கூட்டங்கூட்டமாய் வந்து குந்திக்கொண்டு ஓயாத செலவுகள் வைத்து விடுகிறார்களே! நாசமாய்ப் போக! என் பிராணனைப் பிடுங்கித் தின்ன இவர்கள் எங்கிருந்து வந்தார்களோ" என்று கதை படிக்கிறாள்! இவற்றையெல்லாம் வீட்டுக்கு விருந்தினராய் வந்தவர்கள் கேட்டுவிட்டு மெதுவாக எழுந்தும் போய் விடுகிறார்கள்! சிலரோ, வந்தது வந்தாச்சு, கேட்டது கேட்டாச்சு, தின்றது தின்றாச்சு என்று இருந்து விட்டுப் போவதே சரியென்று பலமாய் உட்கார்ந்து விடுகிறார்கள்! அதற்கு மேலே வீட்டுக்காரியும் சமையல் அறைக்குச்சென்று வேண்டியதைச் செய்ய ஆரம்பிக்கிறாள்! அவள் போட்டுக் கொடுத்த நீண்ட ஜாப்தாவுக்கு வீட்டுக்காரன் சாமான்கள் வாங்கக் கடைக்கு உடனே புறப்படுகிறான்! வீட்டுக்காரன் ஜாப்தாவை இன்னொருதரம் பார்த்துவிட்டு, "என்னடி, மிளகாய் கூடவா இல்லை என்று சொல்லிவிட்டுப் பானையைத் திறந்து பார்த்தாலோ பானையில் பாதி மிளகாய்அப்படியே உட்கார்ந்து சிரித்துக் கொண்டிருக்கிறது! காப்பித்தூள் டப்பியைப் பார்க்கப்போனால் அதிலும் முக்கால் டப்பி அப்படியேயிருக்கிறது! என்னடி, எல்லா சாமான்களும் அப்படியே இருக்க எதுவும் இல்லை இல்லை யென்று நீண்ட ஜாப்தா போட்டுக் கடைக்கு ஓடச் சொல்லுகிறாயே என்றால், "நாளைக்கு ஆய்விட்டால் என்ன செய்கிறது; இருக்கிறதோடு வாங்கி வந்து போட்டால் அதுவும் ஒரு பக்கத்திலே இருக்குது என்று சொன்னேன்" என்கிறாள்! இப்படியாக விருந்து நடந்தேறுவதில், வீட்டுக்காரன் பாடு போதும் போதும் என்றாய்விடுகிறது! வந்தவர்களுக்கு முன்னே இவனுடைய மானம் சிந்துகிறது!

ஃ

"அடியே! அடியே! வெளியே போகவேணும், வண்டிக்கு நாலணா கொடு" என்றால், வீட்டுக்காரிக்கு அந்த நாலணா தர ரொம்ப கஷ்டமாகிறது! "ஏன் நடந்துபோய் வந்துவிடுகிறதுதானே" என்று புத்தி சொல்லப் புறப்படுகிறாள். க்ஷவரத்துக்கு இரண்டணா கேட்டால், "போனவாரத்துக்கு முந்தி தானே செய்து கொண்டீர்கள்; இன்னும் தலையில் நன்றாக முளைக்கக்கூட இல்லையே! வெட்டிக்கு அவனிடம் ஏன் பணத்தைத் தொலைக்கவேணும்? அடுத்தவாரம் பண்ணிக் கொள்ளுகிறதுதானே! இந்த அழகு சிங்காரங்களுக்குக் குறைச்சலில்லை" என்கிறாள்! வீட்டுக்காரன் வெளியே போகும் போது "அடியே! ஒரு ரூபாய் கொடு" என்றாலோ, "என்னத்துக்கு; எதுக்கு, இப்படி நச்சு நச்சு என்று பணத்துக்குப் பிடுங்குகிறீர்

களே, பணம் என்ன வீடு முழுதும் இறைந்தா கிடக்கு'' என்கிறாள்! இதைக் கேட்ட வீட்டுக்காரன் மன துக்குக் கஷ்டமாய்ப் போகிறது! அந்த ஒரு ரூபாயை வாங்காமலே கோப மாய்ப் போய் விடுகிறான்! இவளும் ஒரு ரூபாய் மிச்சமாச்சு என்று நினைத் துக் கொள்கிறாள்! அவ்வளவே தவிர, வீட்டுக்காரன் என்ன அவசரத்துக் குக் கேட்டானோ என்பதை நினைத் துப் பார்க்கிறதேயில்லை! வீட்டுக் காரனுக்கும் மனம் கசந்து சுண்டிப் போகிறது! அந்த மாசத்துப் பண த்தை அவள் கையில் தராமல் தானே வைத்துக்கொண்டு தன் கைப்படச் செலவுகள் செய்ய ஆரம்பித்து விடு கிறான்! இதைப் பார்த்த வீட்டு நாரிக் குப் புதிய விழிப்பு உண்டாய் விடு கிறது! "நான் என்ன திருடிக்கொள் வேனா, என் கையிலே பணம் கொடுக் கக் கூடாதா'' என்கிறாள்! அதற்கு வீட்டுக்காரன் "நான் பாடுபட்டுத் தேடி வந்த பணத்தில் என் அவசரச் செலவுகளுக்கு உதவாமல் போனால், நான் பணம் தேடி வந்து என்ன லாபம்? நான் தேடிவந்த பணத்தை என் கையிலேயே வைத்துக்கொள் ளாமல், உன்னிடம் அப்படியே கொடுத்துவிட்டு, பிறகு எனக்கு வேண்டியிருக்கிற செலவுகளுக்கு உன்னைக் கெஞ்சிக் கேட்கவேண்டிய அவசியமில்லாமலே, நீயும் ஏதோ உன் சொந்தப் பணத்திலிருந்து எடுத் துத் தருவதுபோலக் கஷ்டப்படாம லிருக்கவுமே—என் பணத்தை என் கையிலேயே வைத்துக்கொண்டு நானே சகல செலவுகளும் செய் கிறேன்'' என்கிறான்! 'ஓ! ஆள் மீறி விட்டது, ஜாக்கிரதையாய் விட்டது; இனி நமது பருப்பு வேகாது'' என்று கண்டுகொண்டு அடங்கி விடுகிறாள்! எப்போதுமே பெண்களின் சுபாவம் கெஞ்சினால் மிஞ்சுகிறதும், மிஞ்சி னால் கெஞ்சுகிறதும் தான்!

ஃ

வீட்டுக்கு யாராவது புது மனு ஷர்கள், பந்துக்கள் வந்திருக்கும் போதுதான் வீட்டுக்காரனை அதி காரம் செய்து, வீட்டிலே தன் ராஜ் கியும் தன் வார்த்தையுமே மேற்பட்டு நிற்கிறதெனச் சில பெண்கள் காண் பித்துக் கொள்கிறார்கள்! ஏதாவது ஒரு சங்கதியில் வீட்டுக்காரன் பேச வந்தால், "என் இப்படி வாயை ஆவென்று திறந்து கத்துகிறீர்கள்; அப்பாடா! காதை யடைத்துக் கொண்டு போகுதே; ஏதேது, இந்த வீட்டிலே இந்த மனுஷரோடு வாழ முடியாதம்மா, ரொம்ப நச்சு பிடித்த மனுஷன்'' என்று தங்களின் பட்டி வாயைத்திறந்து கொள்கிறார்கள்! வீட் டுக்காரி தன் பெண்ணையோ பைய னையோ கோபத்தில் அடித்துவிடுகிற போது, அவர்கள் வீட்டுக்காரனிடம் வந்து கண்களைக் கசக்கிக்கொள்ள, அது தாளாமல் வீட்டுக்காரன் தன் அழகு கண்ணாட்டியைப் பேர் சொல்லி அழைக்கிறான்! அந்தச் சித்தராங்கித்தேவியம்மாள் கணவனை மதித்திருந்தாலல்லவோ உடனே வருவாள்! வராமலே வெளித் திண் ணையிலேயே குந்திக் கொள்கிறாள்! வீட்டுக்காரன் தான் பல தடவை அழைத்தும் அவள் வராததற்கு ஆத் திரப்பட்டுக்கொண்டு இன்னும் பல மாய் உரக்கக் கத்திக் கூப்பிடுகிறான். இந்த அதிகாரத்தைச் சகிக்காத

ஸ்வபாவம் என்பது மற்ற எதையும் அடக்கித்தான் மேலாக நிற்கும் ஒரு தன்மையாம். ஒருவன் எவ்வளவு கற்றிருந்தாலும் தனது சிற்றின்ப ஸ்வபா வத்தை யடக்க வசமற்றவனாய்ப் போகிறான். அதனால், அந்தரங்கத்தில் துன் மார்க்கனாய், வெளியில் மகா மேதாவியாய்க் காணப்படுகிறான்.

வீட்டு ராணியம்மாள் என் என் என் என் என்று ஆங்காரத்துடனே கேட்டபடியே கணவனிடம் திடு திடு திடு என்று குதித்துக்கொண்டு வருகிறாள்; இது, நாடகத்திலே திரைக்குள்ளிருந்து நடிகர்கள் வெளியில் வரும்போதே பாடிக்கொண்டு வருவதைப் போன்ற காட்சியாய் விடுகிறது! அதற்குமேலே பெரும் சண்டை மூளத்துக்கொள்கிறது!

ஃ

வீட்டுக்காரி ஒரு சாமான் வாங்க வேண்டுமென்றும் பெரிய மார்க்கட்டுக்குப் போய் வாங்கினால்தான் நயமாயிருக்குமென்றும் சொல்லுகிறாள். புருஷனோ அதற்குப் போக வர ஆகிற வண்டிச் செலவுகளையும், இன்னும் அங்கே வேறு பலவற்றையும் வாங்க நேர்ந்து அந்தச் செலவுகளையும் யோசித்தால் இங்கேயே வாங்கிக்கொள்வது நலமென்று தனக்குள் நினைக்கிறான்! இதற்குள் வீட்டுக்காரி மறுபடியும் வந்து எங்குபோய் வாங்குவது என்கிறாள்! புருஷனோ "நான் இன்ன இடத்தில் வாங்குவதென்றால், நீ அப்படியல்லவென்று அதற்குமேல் மறுத்துப்பேச வருவாயானதால், நான் எதற்கும் வாய் திறக்காமலே உன் இஷ்டப்படி நீயே முடிவுசெய்து கொள்ள விட்டுவிடுகிறேன்" என்கிறான்! அதற்கவள் "இதென்ன, எதிலும் பட்டுக்கொள்ளாமல் பதில் சொன்னால் என்ன செய்கிறது, இதென்ன இழவு" என்று வசைமாரி பொழிய ஆரம்பிக்கிறாள்!

ஃ

சம்பாதித்து வீட்டுக்குச் செலவிடுவதிலே அதில் ஒரு சந்தோஷம், சுகம் வீட்டுக்காரனுக்கு இருந்தால்தான் ஒரு நிம்மதியும் திருப்தியும் ஏற்படும். அவ்விதமின்றி, மனைவியாலும் வீட்டுச் சச்சரவாலும் எதிர்ப்பு உண்டாகித் துக்கப்பட நேருமாயின், அவன் தன் பணத்தைச் செலவிட்டு என்ன பயன்? எவ்வளவோ சகிப்புடன் சாமான்கள் வாங்கப் பத்து ரூபாய் நோட்டை எடுத்துக்கொண்டு, இதோ ஒரு நோட்டு எடுத்தாய் விட்டது என்று மனைவிக்குக் காண்பிக்கப்போனால் அந்த மகாராணி தன் மூஞ்சியை வேறு பக்கம் திருப்பிக் கொள்ளுகிறாள்! திருப்பிக்கொண்ட பக்கத்திலே போய் நோட்டைக் காட்டினால் அவள் இன்னொரு பக்கம் திருப்பிக்கொள்கிறாள்! அவன் நோட்டைக் காட்டியதற்கு "ஆமாம் செலவாய்விடுகிறதே, என்ன செய்வது" என்று ஒரு ஆறுதலான வார்த்தையை அவனுக்குச் சொல்லிவிட்டால் வாய் முத்தம் சிந்திப்போமோ? இப்படி முகம் திருப்பிக்கொள்வதில் வீட்டுக்காரனுக்கு எவ்வளவோ மனக்கஷ்டமாகிறது! செலவிட்டும் விசுவாசங் காணோமே என்று ஏங்குகிறான்!

ஃ

வீட்டுக்காரி அரிசியாய்விட்டதென்றால், புருஷன் இரண்டு நாளைக்கு முன்புதானே வாங்கியதென்று கேட்கப்போக, அவள் "நான் தின்றுவிட்டேனு, எல்லோரும் விழுங்கவில்லையா"? ஊரெல்லாம் உங்களைப்போல்தான்ஒரு காசு முதல் கணக்கு எழுதி சமுசாரம் நடத்துகிறார்களோ என்கிறாள்! இவ்வளவுக்கும் பானையில் அரிசியை வைத்துக்கொண்டே புருஷனோடு வம்பு அளக்கிற சங்கதி யிது! என் இந்த வாய்த்தனமோ? சில பெண்களுக்குத் தங்கள் புருஷனுடன் தினமும் ஏதாவதொரு சண்டை யிடாவிட்டால் திருப்திபடுவதில்லை. கணவன் செய்கிற ஒவ்வொரு சங்கதிகளுக்கும் ஒரு தப்பிதமெடுத்துப்பேசி அவனுக்குப் புத்தி சொல்லப் புறப்பட்டுக்கொள்கி

றூர்கள்! இத்தகைய பெண்களுடன் கூடி வாழ்வது வெகு பாடானபாடா யிருக்குமப்பா!

ஃ

ஒரு உத்தியோகஸ்தருக்குத் தன் மூத்த தங்கையைக் கொடுத்து, அவள் மரித்த பிறகு தன் இளைய தங்கையைக் கொடுத்த ஒரு தமயன், தன் மூத்த தங்கையின் குமாரனுக்கு விவாகத்திற்காக நல்ல இடம் பார்த்து விட்டு வந்து உத்தியோகஸ்தரிடம் சொல்ல, அவரது இரண்டாந்தாரமான இவனது இளைய தங்கை பொருமையுடன், அந்தப் பயலுக்கு இப்போது விவாகத்துக்கு என்ன அவசரம் வந்ததென்று தன் தமயனிடம் சீறுகிறுள்! அதற்குத் தமயன் "நீ உன் புருஷனுக்கு ஒரு வைப்பாட்டி போலத்தானே; இரண்டாந்தாரக்காரி வைப்பாட்டிக்குச் சமம்தான்; இந்தப் பவிசியிலே உனக்கு வாயென்னவந்தது; சீ, துள்ளாதே, குறுக்கே பேசவராதே" என்கிருன். தங்கைக்கு ஆத்திரம் பொங்கிக்கொண்டு கணவனிடம் போய், "அண்ணு என்னை வைப்பாட்டி என்றதைக் கேட்டுக்கொண்டு சும்மா இருக்கிறீர்களே! உங்களுக்குப் புத்தி, மானம் ரோஷம் இல்லையா?" என்று கண்களில் தண்ணீரை வருவித்துக்கொண்டு முணுமுணுக்கிருள்! அதற்கு வீட்டுக்காரர் "பாத்தியஸ்தனுன உன் அண்ணு உன்னைத் திட்டினுல் நான் என்ன செய்கிறது? நீயும் உன் அண்ணுவும் எப்படியாவது போங்கள்" என்கிருர். அண்ணனே தன் மூத்த தங்கையின் குமாரனுக்கு விவாகத்தைப் பேசி முடிவும் செய்து விடுகிருன்! வீட்டுக்காரி தன் புருஷனிடம் தான் காட்டுகிற அதிகாரம் தன் அண்ணனிடம் செல்லாதென்று அடங்கிவிடுகிருள்! எல்லாம் வீட்டுக்காரன் இருக்கிற இளிச்சவாய்த்தனத்தைக் கண்டு பெண்டுகள் குதிக்கிற சங்கதிதான்! வீட்டுக்காரன் முன் ஜாக்கிரதைப்பட்டவனுனல், மனைவி முதலில் என்னதான் குதி குதித்தாலும், பிறகு தன் அதிகாரம் செல்லாதென்று அடங்கிவிடவேண்டியவளே தான்! ஆனல், என்றைக்குமே வீட்டுக்கோ கணவனுக்கோ அடங்காதவர்களாகவும் சிலர் இருக்கிறூர்களப்பா! இப்படிப்பட்டவர்களெல்லாம் கணவன் கண் மூடிக்கொண்ட பிறகு பெட்டிப் பாம்புபோல் அடங்கிப்போகிற அதிசயத்தை விகடன் என்னென்று சொல்லட்டும்! வீட்டுக்காரனைப் படுத்துகிற பாட்டைப் பிறகு இவர்கள் மற்றவர்களிடம் அனுபவிக்கும்படியாக முடிந்துவிடுகிறது! எதுவும் வீணுய்ப் போவதில்லை!

ஃ


கீரை நயமாயிருக்கிறது, மூணு காசிலே முடியுமென்று வீட்டுக்காரன் உருளைக்கிழங்கோடு கீரையும் வாங்கிவந்தால் மனைவி சிடுசிடுக்கிறுள்! "இந்தக் கீரையை ஒவ்வொன்ருகக் கிள்ளி ஆக்குவதற்கு யாராலே இருக்கு? என் கையெல்லாம் நோகுதே" என்கிருள்! அதற்கு வீட்டுக்காரன், "உருளைக்கிழங்கு ஒரு வேளைக்கு மட்டுமே வரும்; கூடக் கீரையிருந்தால் இரவுக்கும் தொட்டுக்கொள்ள உதவுமே; இரண்டு பொழுதுக்கும் வருமே; அதுவுமல்லாமல், உண்ணும் போஜனத்துடனே எதாவது ஒரு கீரையும் அவசியம் இருக்கவேணுமென்று வைத்தியர் சொன்னதாலும் வாங்கி வந்தேன்; அதற்கு நீ இவ்வளவு பிடுங்கு பிடுங்குகிருயே" என்கிருன்! இனி வாழைக்காய் வாங்கிவந்தாலோ, அவ்வளவையும் பருப்புக் குழம்பில் போட்டுவிட்டு, "உங்களுக்கு இது பிடிக்காவிட்டாலும் வீட்டிலுள்ள எல்லாரும் பிரியமாய்ச் சாப்பிடுவார்கள்" என்கி

ருள்! அதற்குப் புருஷன் "ஒரு அணு வாழைக்காயைப் பருப்புக் குழம்பிலேயா போடணும், ஏதோ இரண்டொன்றைப் போட்டுவிட்டு, இரண்டு காய்களை எண்ணெயில் வறுத்திருந்தால், வீட்டுக்கு இவ்வளவு பாடுபட்டு உழைக்கிறவன் ஏதோ ருசியோடு உண்ண முடியுமல்லவா? உழைக்கிறவனுக்கு அவன் வாய்க்குத் தக்க ருசியாய்க் கொஞ்சமாவது செய்து வைக்கவேண்டாமா?" என்கிறான்! "அப்படி வறுக்க அவ்வளவு எண்ணெய்க்கு எங்கே போகிறது?" என்று வீட்டுக்காரி சொல்லித் தன் புருஷன் மூஞ்சியிலே இடிக்க வருகிறாள்!

ஃ

விகடன் சொன்ன இவ்வளவும், இதற்கு மேலேயுள்ளதுகளெல்லாம், வீட்டுக்காரன் சுகமாக ஓடியாடி உழைத்து நல்ல உடம்பாக இருக்கிறபோது நடக்கிற சங்கதிகளாகும்! இதை எப்படியாவது வீட்டுக்காரன் சமாளித்துவிடலாம்! ஆனாலோ! வீட்டுக்காரன் நோயாளியாய்ப் படுத்துக்கொள்கிறபோதோ—இந்தப் புத்தி புகட்டுகிற அதிகப்பிரசங்கிக்காரிகளான அம்மணிகளிடம் ஐயோ! இந்தப் புருஷர்கள் அகப்பட்டுக்கொண்டு திண்டாடிப் படுகிற அவஸ்தைகளும், வாங்குகிற திட்டுகளும், கேட்கவேண்டி வருகிற புத்திமதி(!)களும் ரொம்ப ரொம்ப பயங்கரமும் பரிதாபமும் கண்ணீருமப்பா! இதுதாண்டா அப்பா கல்யாண சுகம்! அதையெல்லாம் விவரித்து வீச விகடன் கை நடுங்குவதால் என் திருவாயை இவ்வளவுடன் மூடிக்கொள்கிறேன்! ராம்! ராம்! சுபம்! சூ!! சுவாஹா!!!

பட்டணங்களில்தான் நவீனம், நாட்டுப் புறத்தில் நல்வாழ்க்கை என்று கூறிக்கொண்டிருக்க முடியாது. நாட்டுப் புறத்திலும் நவீன நாகரீகம் பரவிப் பாழாக்கி வருகிறது. மயிரைக் கத்தரிக்கும் வாலிபர் பெருகி விட்டனர். கெடுதி பரவுகிறதே தவிர நன்மை பரவவில்லை.



தீபாவளியில் வாங்கிய ஜவுளி மூட்டைகளெல்லாம் இப்போது வண்ணாரப் பெரியார்களின் வீட்டிற்கு விருந்துக்கு வந்திருக்கின்றனவாம்!

இந்தியா சட்டசபைத் தேர்தலிலே தோல்வியுற்றவர்களுக்கெல்லாம் விகடன் கண்ணைத் துடைத்து ஆறுதல் சொன்னானாம்!

ரூபாய்க்கு எட்டுபடியாக இருந்த அரிசி ஐந்து படிக்கும் குறைந்து போகவே, மிராசுதாரர்கள் இப்போது மிகவும் சந்தோஷப் படுகிறார்களாம்! ஏழைகள் கலங்குகிறார்களாம்! விற்கிற இட்டிலி தோசைகள் ரொம்ப ரொம்ப சின்னதாகி விட்டதுகளாம்!

அதிகம் சொந்தம் காட்டிக் கொள்ளுகிற இடத்தில்தான் மூட்டை முடிச்சுகளைத் தலைமேல் ஏற்றி வேலை வாங்குவார்களாம்!

வீணர் பூண்டாலும் தங்கம் விலையிலே குறைச்சலில்லையாம்! மூணாங் கெட்டவளானாலும் மூக்காட்டிற்குக் குறைச்சலில்லையாம்! ஆணவம் பிடித்தவளுக்கு அடி உதை குறைச்சலில்லையாம்! கோணைப் பெண் என்றாலும் பிள்ளை குட்டிக்குக் குறைச்சலில்லையாம்!

கையிலிருக்கிற பணத்தை இன்னொருவனுக்குக் கடன் கொடுத்து விட்டுத் தன் அவசரத்துக்கு ஏங்கி நிற்க வேணுமாம்!

ரயில் டிக்கட்டுக்குப் பணம் போதாதென்று எவரிடமேனும் கடன் பெற்றுப்போனால், ஊர் போய்ச் சேர்ந்த பிறகு 'சீக்கிரத்தில் அனுப்புகிறேன்' என்று ஒரு கடிதம் எழுதி விட்டுப் பட்டை நாமம் போட வேணுமாம்!

மெய் வருத்தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார், அவமதிப்பும்-எண்ணார்-காதலே கண்ணாயினார்!

ஒரு பெண்ணை நேசித்து விட்டுப் பிறகு அவளை மறந்து போவதற்குத்தான் "மறதி" என்று பெயராம்!

சிறப்பொடு பூனை பரணியிலிருந்தால் புறப்பட மாட்டாதெலி!

கல்யாணத்தின்போது தலைகுனிந்து கொண்டிருக்கிற பெண்ணையும், வளைந்து நிற்கிற வில்லையும், வயசுக்கார வாலிபனையும், மருந்து போட்டுக் கெட்டித்த துப்பாக்கியையும்-அதுகள் என்ன செய்யப்போகிறதென்று அலக்ஷியமாயிருந்துவிடக் கூடாதாம்!

இரண்டு சாதத்தை எடுத்து ஒரு துணியிலே தேய்த்துக் காயவைத்துப் பார்க்கிறபோது அது எவ்வளவோ விரைப்பாயிருக்கிறதே, அப்படியிருக்க; ஒரு பானைசோறு சாப்பிடுகிற நான் எவ்வளவு முறைப்பா யிருக்க வேணுமென்று ஒருவர் விகடனிடம் சொன்னாராம்!


ஒரு காசு சம்பாதிக்கத் திறமையில்லாத பெண்கள் நூறு நூறாகச் சம்பாதிக்கிற புருஷர்களை எப்படித்தான் அலக்ஷியமாய் ஆட்டிவைக்கிறார்களோவென்று ஒரு வாலிபன் விகடனிடம் சொல்ல, அதற்கு விகடன் அந்த சங்கதியை நீயே கலியாணம் செய்து பார்த்துக்கொள் என்று சொன்னானாம்!

நூறாண்டு போன கிழவியின் கிட்டே மகனோ மகளோ பேரனோ பேர்த்தியோ எவரும் போகாராம்! தானே பேண்டு நாண்டு சாகணுமாம்!


உற்றாரென்றால் உடலோடு ஒட்டிக்கொண்டிருக்கவில்லையாம்!

குன்றத்தனை நிதிபடைத்த பிரபுவும் தாசியின் உடம்பு இடுப்பு கால்களைப் பிடிப்பானாம்!

தலைமைக் குமாஸ்தாவின் கோபம்.



தாசில்தார் ஆபீஸின் தலைமைக் குமாஸ்தா தர்மராயர் மிக்க கண்டிப்புள்ளவர். எப்பொழுது பார்த்தாலும் சிடுசிடு என்று தோன்றுவார். தமது வேலையையும் கருத்துடன் கவனிப்பார். அவர் தமது தம்பிக்கு ஒரு குமாஸ்தா வேலை சம்பாதித்துத் தர வெகுநாள் எதிர்பார்த்து நின்றார். ஒரு வேலை காலியாகவே அதற்குப் பல மனுக்கள் வந்தன. எல்லா மனுக்களையும் தள்ளிவிட்டுத் தனது தம்பியின் மனு வொன்றைமட்டும் எடுத்துக் கொண்டு தாசில்தாரிடம் சென்று நீட்டினார். தாசில்தார் அதைப் பார்த்து, காலியான இடத்துக்கு நேற்றே ஆள் நியமித்தாய்விட்டது; நேற்று நீர் ரஜா வாங்கிக்கொண்டிருந்ததால் உமக்கு இது தெரியாதுபோலிருக்கிறது என்றார். தர்மராயர் திகைத்துத் தமது அறைக்குச் சென்றார்.



ஃ

புதிய குமாஸ்தா குமரேசனை எந்த விதமும் வேலையிலிருந்து நீக்க வேண்டுமென்று தர்மராயர் தீர்மானித்தார். ஆனால், எந்தக் குற்றங்களும் சுமத்த முடியவில்லை. மேலும், குமரேசன் பி. ஏ. பட்டதாரியாக இருந்தான். தர்மராயர் ஆறாவது பாரத்துக்குமேல் வாசித்தவரல்லாவிடினும், உத்தியோகமான பின் புஸ்தகங்களையே தொடாதவரானாலும், வேலையில் அதிக அனுபோகஸ்தரா யிருந்தார். படிப்பில் தமக்கு இருக்கிற குறைவை வெளிக்குக் காட்டாத சமர்த்தர். ஒரு வியாசம் எழுதும் சக்தியும் அவருக்குக் கிடையாது. நீண்டகாலப் பழக்கத்தால் தமது வேலையை மட்டும் நன்றாகச் செய்யத் தெரிந்திருந்தார். குமரேசனோ பெரிய கல்விப்பிரியன். கவிதா சக்தியுள்ளவன். அவனை வெல்வதற்குத் தர்மராயரால் கூடவில்லை. இது இன்னும் அதிக கோபத்தையும் பொறாமையையும் உண்டாக்கவே

பெண்டாட்டி வரும்வரையில்தான் பிள்ளை அன்பா யிருப்பான். பெண்ணோ இறக்கும் வரையில் ஏகரீதியான பிரியத்துடனும் விளங்குவாள். பெண்கள்தான் கடைசி காலம்வரையில் பெற்றோரிடம் அன்பு மாறாதிருப்பார்கள் என்பதும் உண்மையே. ஆனாலும், பெற்றோர்களை "இன்ஸால்வெண்டு" மனுப்போட வைக்கிறவர்களும் பெண்களாகவே இருக்கிறார்கள்.

தர்மராயர் தமது சிடுசிடுப்பை அதிகப்படுத்திக்கொண்டு நின்ருர். ஒருநாள் விரல்களை மடக்கிக்கொண்டு குமரேசனைக் குத்தவும் சென்ருர்.

ஃ



ஒரு தினம் தாசில்தார் தமது கைப்பெட்டியைத் திறக்கையில் அதில் வைத்திருந்த காசுமாலையைக் காணவில்லை. உடனே போலீஸாருக்குத் தெரிவிக்க, அவர்கள் தாசில்தாரின் வீட்டிற்குச் சென்று அவர் மனைவி கமலாவை விசாரித்தனர். அங்கு சில விஷயங்கள் தெரியவே திரும்பிவிட்டனர். இதற்குள் தர்மராயர் ஒரு புது யோசனை செய்து இந்தத் திருட்டைக் குமரேசனேசெய்திருக்கவேண்டுமென்று பழிபோட்டு அவனைத் தொலைத்துவிடுகிறதென்று முடிவு கட்டினர். அவ்விதமே குமரேசனை வைது தாசில்தாரிடம் இழுத்துச் சென்று அவன்தான் எடுத்திருக்கலாம் என்ருர். இதற்குள் தாசில்தார் குமரேசனின் கழுத்தில் என்னவோ மின்னுவதைக் கண்டு அங்கு கையிடவும், காணுமற்போன காசுமாலை குமரேசனின் கழுத்தில் இருந்தது. தாசில்தார் வியப்புடன் குமரேசா! இது எப்படி உன் கழுத்துக்கு வந்தது என்ருர். அதேசமயம் போலீசார் அங்குவந்து நகை குமரேசனிடம் இருக்கிறது என்றனர். தாசில்தார் தலைமைக் குமாஸ்தாவை உள்ளே அனுப்பிவிட்டு, ரகசியமாய் விசாரணை நடத்தியபின் மௌனமாயிருந்துவிட்டார். குமரேசன் காசுமாலையைத் தாசில்தாரிடம் ஒப்புவித்துவிட்டான்.



ஃ


குமரேசன் கைதியாகாததற்குத் தர்மராயர் ஆச்சரியப்பட்டார். பிரத்தியக்ஷமாய்க் கையும் களவுமாகப் பிடிபட்டும் போலீஸார் வந்தும் ஏதுமில்லாமற் போய்விட்டதே யென்று பிரமித்தார். தாசில்தாரே போலீஸாரைக்

விவாக காலங்களில் புருஷன் தன் மனைவிக்கும், மனைவி தன் பார்த்தாவுக்கும் செய்துகொடுக்கும் ஆணையை அவர்கள் இல்வாழ்க்கை சமயங்களில் மறந்து நடக்கிறதில் எத்தனை குடும்பங்கள் எவ்வாறு தாறுமாறுபட்டுப் போயிருக்கிறதென்று நாம் கண்கூடாய்ப் பார்த்து வருகிறோம்.

கேட்டுக்கொண்டு குமரேசனைக் காப்பாற்றி யிருக்கவேண்டுமென்று எண்ணிக் கொண்டார். பாவிப்பயல் எந்த அதிகாரியையும் தன் அழகிலே மயக்கி வசம் செய்துவிடுகிறானே என்று குமரேசனைத் தூற்றினார்.

ஃ

ஒருதினம் தர்மராயர் ஆற்றிலிருந்து திரும்பி வருகையில் தாசில் தாரின் மனைவி கமலாவும் குமரேசனும் கைகோர்த்துக்கொண்டு உல்லாசமாய்ச் செல்வதைக் கண்டு திடுக்கிட்டு. "அட சண்டாளா, நீ அந்தப் பெண்ணை மயக்கிவிட்டாயா? எங்கே யழைத்துச் செல்லுகிறாய் திருடா" என்று குமரேசனின் கையைப் பிடித்துக்கொண்டு ஆரவாரித்தார் கூட்டமும் கூடியது. கமலாவோ சினத்துடன் 'எங்கள் இஷ்டப்படிப் போவதை நீ யார் தடுக்க?' என்று கேட்டாள். இதற்குள் அவ்வழியில் வந்த ஒரு மோட்டார் இக் கூட்டத்தைக் கண்டு நிற்கவும், அதில்



ஏறியிருந்த தாசில்லார் அங்கு நடந்த விஷயத்தை அறிந்து, குமரேசனையும் கமலாவையும் மோட்டாரில் அனுப்பிவிட்டு தர்மராயரைப் பார்த்து, "உமக்குக் குமரேசனின்மேல் என் இவ்வளவு துவேஷம்?" என்றார். தர்மராயர் கோபத்துடன், முன்பு அவன் காசுமாலை திருடியதற்கும் தண்டியாது விட்டீர்கள்; இப்போது தங்கள் மனைவியுடன் கைகோர்த்து வந்ததை என் கண்ணாலேயே கண்டு தங்களிடம் சொல்லியும், தாங்கள் கவனியாமல் அவ்விருவரையும் மோட்டாரில் அனுப்பினீர்களே, இது நியாயமா? என்றார்.

ஃ

"தர்மராயரே! நான் என்ன செய்யட்டும்? குமரேசனை வேண்டுமென்றா சிக்ஷிக்காதுவிட்டேன்? காசுமாலையில் ஒரு ஒடிந்த கம்பியைப் பழுது பார்க்க என் மனைவி என்னிடம் கொடுத்தாள். நான் அதைக் கைப்பெட்டியில் மூன்று தினங்களாக வைத்துக்கொண்டு பழுதுபார்க்க நேரமில்லாமற் போயிற்று. அதை என் மனைவி கண்டு பெட்டியிலிருந்தும் காசுமாலையை எடுத்துக் குமரேசன் கழுத்திலிட்டு நீ மாலையில் வரும்போது பழுது பார்த்து வா என்று சொல்லியிருந்தாளாம். எனக்கு இது தெரியாதானதால் நான் கச்சேரிக்கு வந்தபின் கைப்பெட்டியைத் திறந்து காசுமாலை காணாதிருக்கவே போலீஸாரை அழைத்தேன். அவர்கள் என் மனைவியை விசாரித்ததில் குமரேசனின் கழுத்தில் இருப்பதாக என் மனைவி கூறியதை அறிந்து

இருவருக்கும் ஒன்றைப்பற்றி விவாதம் நடக்கையில், இன்னொருவன் அங்குவந்து தானும் நடுவேபேச முயலுகிறான். அந்த சமயம், எங்கள் இருவருக்குள் எப்படியாவது சமாதானமாகிக்கொள்வோம். நீ நடுவில் வந்து பேச வேண்டியதில்லை, போய்விடு என்று கண்டித்துக்கூறின் அவனும் வாயடங்கிச் சென்றுவிடுவான். எப்பொழுதும் தன் சங்கதியில் இன்னொருவன் இடையே நுழையவிடக் கூடாது.

திரும்பினர். களவு ஒன்றும் நடவாததால் போலீஸார் போய்விட்டனர். இதில் நான் குமரேசன்மீது எப்படிக் குற்றம் சொல்வது?" என்றார் தாசில்தார்.

∴

அதைக்கேட்ட தர்மராயர் "உங்கள் மனைவியை அவனிடம் அவ்வளவுக்குப் பழகவிடுவது சரியல்ல; குமரேசன் பெண் மோகம் பிடித்தவன், தங்கள் குடும்பத்திற்கே அபக்கியாதி வரும்" என்றார்.

∴

அதற்குத் தாசில்தார், "இன்று காலையில் கமலா மோட்டாரில் கோவிலுக்குப் போக எண்ணினாள். நான் அரைமணியில் திரும்பிவந்து மோட்டாரைத் தருவதாகக் கூறிச் சென்றேன். அவள் அதிக நேரமாய் விட்டதால் கோவிலுக்குப் போகக் குமரேசனுடன் புறப்பட்டுவிட்டாள். ஆனதால், இங்கு அவளைக் கண்டதும், நான் இறங்கிக்கொண்டு அவளையும் குமரேசனையும் மோட்டாரில் கோயிலுக்கு அனுப்பினேன். குமரேசன் நீங்கள் சொல்லுகிறபடியே ஒரு போக்கிரியாகவே வைத்துக்கொண்டாலுங் கூட, என் மனைவியிடம் அவனை வராதபடி தடுப்பதற்கில்லை என் படுக்கையறையிலேயே இவ்விருவரையும் பலதடவை பார்த்தும் துரத்த முடியவில்லை. ஏனெனில், அவன் கமலாவினுடைய உடன்பிறந்த தம்பியாக இருக்கிறானே என்ன செய்வது?" என்றார். அதைக்கேட்ட தர்மராயர்—"குமரேசன் கமலாவினுடைய தம்பியா! தம்பியா! என்று வாயைப் பிளந்தபடி தடுமாறி நின்றார்.

மற்றொரு நாளில் செய்துகொள்.

ஒரு விசேஷ தினத்திற்கென்று பலவித பக்ஷணங்களைச் செய்வதில், அதைப் பலருக்கும் வாரிக்கொடுத்தாக வேண்டி யிருப்பதில், வீட்டிலுள்ளவர்கள் இன்னொரு வேளைக்கு உண்பதற்கும் மிஞ்சுகிறதில்லை. இவ்வளவு பாடுபட்டுச் செய்த வீட்டுப் பெண்ணுக்கே ஆசைதீரப் புசிக்கக் கிடைப்பதில்லை. வருவார் போவாருக்கு இட்டு உபசரிப்பதிலேயே தீர்ந்துபோய்விடுகிறது. ஆகவே, அத்தனை பக்ஷணங்களையும் அந்த விசேஷ நாளில் செய்யாமல் ஏதோ இரண்டொன்று செய்துவிட்டு, அப்போது வாங்கிய பண்டங்களைக்கொண்டு மற்றொரு நாளில் செய்து வீட்டுடன் தாராளமாய் உண்பது நல்ல சிக்கனமாகும். ஆசை தீர மறுநாளைக்கு உண்ணவும் முடியும்.

அறிவுக்கும் திறனுக்கும் எப்போதும் எங்கிருந்தாலும் மதிப்புண்டு.

சோப்புப் பெட்டி.

மாதம் 80-ரூபாய்கள் கண்டிப்பாக மீதம் பிடிக்காவிட்டால் சேதுராமய்யர் நிம்மதி கொள்ளமாட்டார். அவர் மிகவும் சிக்கனக்காரர். காசை எடுத்துச் செலவு செய்யக் கல கலவென்று கண்ணீர் உதிர்ப்பார். அவர் மனைவி ஜானகி அதனிலும் கெட்டிக்காரி. விலை மோரில் வெண்ணெய் எடுக்கத் தெரிந்தவள். தம்பிடி வாழைப்பூவிலும் வாழைத்தண்டிலும் கீரை வகைகளிலும் சமையலை அடக்கித் திருப்திபடுவார்கள்.

ஃ

சிக்கனம் எண்ணியபடியே முடிகிறதா? ஏழு குழந்தைகள் சிறியதும் பெரியதுமாகக் கலந்து அவர்கள் வீட்டில் கலகலவென்று சத்தமிட்டன. மூத்த பையன் கணபதிக்கும், இளைய பெண் சரஸ்வதிக்கும் கல்யாணமாக வேண்டும். பிள்ளைக்குப் பெறுகிற வரதக்ஷிணையைக்கொண்டு பெண்ணுக்குச் செலவிடச் சேதுராமையரின் தீர்மானம்.

ஃ

பிள்ளையைப் பார்க்கவந்த சம்பந்தி அம்மாள் காதிலும், பெண்ணைப் பார்க்க வந்த சம்பந்தியம்மாள் காதிலும் வைரத்தோடு ஜொலிப்பதைக் கண்டு ஜானகி தனக்கு அப்படி யில்லாததை நினைத்து மனம் தாளாமல் தன் கணவனை வற்புறுத்திக் கேட்கலானாள். சேதுராமையர் இதற்கு முன்பு ஜானகியின் பல வேண்டுதல்களுக்கு மறுத்திருந்தாலும், இப்போது 150-ரூபாய் சம்பளக்காரரின் மனைவிக்கு ஒரு வயிரத்தோடு அவசியம் வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்தார். அதிலும் சிக்கனம் காண்பித்து ஒரு ஜதைக் கம்மல் வாங்கிக் கொடுத்துவிட்டார். ஜானகியும் கம்மலை அணிந்து கண்ணாடியில் கண்டு மகிழ்ந்தாள். கடைசியில், அது இமிடேஷன் வைரமென்று ஜானகிக்குத் தெரியவே முணுமுணுத்தாள். அவளுக்கு சிக்கன முறையைப்பற்றி ஒரு அத்தியாயம் சேதுராமையர் போதித்தார்.

ஃ


"என்னுடைய கஷ்டமானது இப்படி உபன்னியசிக்கச் செய்கிறது. என்னுடைய வீட்டு விசாரங்களை யெல்லாம் உன்னிடம் சொல்லத் தூண்டுகிறது. உனக்கோ அது நீளமான பேச்சாகவும் பெரிய பிரஸங்கமாகவும் தோன்றுகிறது. நான் இரண்டு வார்த்தை பேசுவதற்குள் நீ நாலு தடவை உன் கைக் கெடியாரத்தைப் பார்க்கிறாய். இப்படிப்பட்ட உன்னுடன் சொல்லிக் கொள்வதைவிட எழுந்து போவதுதான் மேல். நான் போய் வருகிறேனப்பா. நீ ஹாயியாக இரு!"



ஜானகி தன்னிடம் சேர்த்துவைத்திருந்த தங்கக் கம்பிகளை பவுனின் விலையேறிய இப்போது விற்று நல்ல வைரத் தோடு ஒன்று வாங்கியணிந்து கொண்டாள். இமிடேஷன் கம்மலைப் பெட்டியில் போட்டாள். கலியாணங்களும் நடந்தேறின. தலை தீபாவளிக்கு மாப்பிள்ளை வந்திருக்கிறார். இரவு பண்டிகை நடந்தது. ஜானகி நடு இரவில் எழுந்து வீட்டு வேலைகள் செய்யலானாள். தீபாவளி எண்ணெய் தேய்த்துக்கொள்ள எண்ணிக் காதில் உள்ள தோடுகளைக் கழற்றினாள். பெட்டியிருக்கிற அறையில் மாப்பிள்ளை நித்திரை செய்ததால், தன் பெண் சரஸ்வதியை எழுப்பி அவளிடம் தந்து பத்திரமாய் வைத்திருக்கும்படி கூறி ஸ்நானம் செய்யச் சென்றாள்.


ஃ

எல்லோரும் அதிகாலையில் பட்டாசு மத்தாப்பு சுடுவது கண்ட சரஸ்வதியும் தன் மத்தாப்பு, பாம்புப் பாணம் வைத்துள்ள சோப்புப் பெட்டியை எடுத்து வந்து அதில் வைரத் தோடுகளைப் போட்டுவிட்டு மத்தாப்பு சுடலானாள். அவள் தம்பி பட்டாசுகளைச் சுட்டு, சுடாத பட்டாசுகளை ஒடித்து அதிலிருந்த மருந்தைக் கீழே கொட்டிச் சேர்த்துக்கொண்டிருக்கையில் சரஸ்வதியின் மத்தாப்பு அதிற்படவே திடீரென்று நெருப்புப்பற்றி புஸ் என்று கிளம்பி அருகிலிருந்த சோப்புப் பெட்டியும் எரிந்துபோய்விட்டது. சரஸ்வதி அலறினாள். ஜானகியும் ஸ்நானம் செய்து தலை துடைத்துக்கொண்டிருந்தவள் உடனே ஓடி



வந்தாள். தோடு எங்கே யென்று ஸரஸ்வதியைக் கேட்க, அவள் சோப்புப் பெட்டியில் வைத்தேன் என்று கதறினாள். பெடடியோ சாம்பலாய்க் கிடந்

உன்னிடத்தில் ஒருவர் பத்து ரூபாயை ஒரு காகிதத்தில் மடித்துக் கொடுத்து அதை வைத்திருக்குமாறு கூறினால், அவரின் முன்பாகவே, அந்தப் பொட்டணத்தில் 10-ரூபா இருக்கிறதா என்று பார்த்துக்கொள். பிறகு அதைக் கொடுக்கும்போதும் உன் நேரிலேயே 10-ரூபாய் சரியாக இருக்கிறதா என்று எண்ணிப் பார்த்துக்கொள்ளச் செய். ஏனென்றால், அவர் பொட்டணத்தைப் பிரிக்காமல் கொண்டுபோய் நடு வழியில் பிரிக்க, ஒரு ரூபாய் கீழே விழுந்துவிட, பிறகு எண்ணுகையில் ஒரு ரூபா குறைய, உன்மீது சந்தேகப்படும்படியும் வரும்.



தது. ஐயோ! என்ன செய்வேன்! என்று ஜானகி தன்னையும் மறந்துப் புலம்பவே, சேதுராமய்யர் என்ன என்னவென்று ஓடிவந்தார். ஜானகி ஒன்றும் சொல்லத் தோன்றாதவளாய் தேள் கொட்டிவிட்டதே யென்று கையைப் பிசைந்துகொண்டு உட்கார்ந்தாள். உடனே சேதுராமையர் தேளைத் தேட ஆரம்பித்தார். சரஸ்வதியின் கன்னத்தில் ஜானகி ஒரு கிள்ளு கிள்ளி, பாழும் சோப்புப் பெட்டியிலா போடவேண்டும் என்று பல்லைக் கடித்தாள்.

ஃ

மாப்பிள்ளை அங்கு வந்து எனக்குத் தேள் மந்திரம் தெரியும் விஷத்தை ஏறாமல் குணப்படுத்தி விடுகிறேன் என்று சொல்லி, ஜானகியை ஒரு அறையில் உட்காரவைத்து மந்திரம் ஜபித்தார். அங்கு கூடியிருந்த கூட்டத்தை வெளியில் போகச் செய்தார். யாவரும் போனவுடன் ஒரு சிறு கடிதமும், சோப்புப் பெட்டியில் வைத்த வைரத் தோடுகளையும் ஜானகியிடம் ரகசியமாய்க் கொடுத்து, தேள் விஷம் இறங்கி விட்டதா என்றார். ஜானகி தான் இழந்த வைரத்தோடுகளை மறுபடி கண்டதும் ஆநந்தத்தோடும் பெற்றுக்கொண்டு கடிதத்தைப் படித்தாள். "மாமி, நான் பட்டாசு சத்தம் கேட்டு வெளியில் வந்தபோது சரஸ்வதியின் சோப்புப் பெட்டியில் வைரத்தோடுகள் இருக்கக் கண்டு மெதுவாக எடுத்து வந்துவிட்டேன். இது சரஸ்வதிக்குத் தெரியாது. ஒரு சமயம் காணாமற் போகலாமென்றே நான் எடுத்தது நல்லதாயிற்று. அதற்குப் பிறகே சோப்புப் பெட்டியும் எரிந்து போயிற்று" என்று எழுதியிருக்கவே ஜானகி சந்தோஷத்தில் பூரித்தாள். வைரத்தோடு காதில் ஏறிற்று. மாப்பிள்ளை, "விஷம் இறங்கிற்றா?" என்று உரக்கக் கத்தினார். ஜானகி புன்னகையுடன் விஷம் இறங்கி விட்டதென்றாள். சேதுராமையர் தமது மருமகனின் மந்திர சாமர்த்தியத்துக்கு மெச்சிப் புகழ்ந்தார். தீபாவளி பண்டிகையை வெகு ஆநந்தத்தோடும் ஜானகி நடத்தினாள். ஸரஸ்வதியும் ரகசியமாக யாவற்றையும் அறிந்து மகிழ்ந்தாள்.



இராஜம்மாள்.

சென்றமாதம்

சென்னையில் ரவீந்திரநாதர்:—

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே" என்றவாறு சென்னைக்கு ஸ்ரீ ரவீந்திரநாத தாக்கூர் விஜயம் செய்தார். அவர் தமது வாழ்க்கைச் சுருக்கத்தைப்பற்றிக் கூறியதன் சாரமாவன:—"1861-ம் ஆண்டில் நான் பிறந்தேன். அக்காலத்தில் பிரபலமாயிருந்த ராஜாராம் மோகனராயின் பிரம்மஸமாஜத்தில் என் தந்தை சேர. இதனால் எங்களை ஜனங்கள் பஹிஸ்கரித்தனர். என் அபிவிர்த்திக்கான மார்க்கங்களை நானே தேடிக்கொண்டேன். தாய்ப்பாஷையில் கவிதை வரைந்தேன். உள்ளத்தே எழுந்த உணர்ச்சிக்கு அடிமையாகித் தோன்றிய தோற்றங்களை அப்படியே வரையலானேன். வைஷ்ணவ நூல்களும் உபநிஷத்துக்களுமே ஆதியில் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட கிரந்தங்கள். மத விஷயங்களில் நான் எந்தக் கட்டுப்பாட்டிற்கும் உடன்பட்டவனல்ல. கவிகளின் மதமே என் மதம். ஆத்மானந்த அனுபவமே பேரின்பமென நான் கருதுகின்றேன். இயற்கையே நான் வழிபடும் கோயில்" என்றார். இயற்கையையே கடவுளாகக் கொண்டு வணங்கும் பக்குவத்தன்மை ரவீந்திரநாதர்போன்ற மகாத்மாக்களுக்குக் கைவசமாகலாம். அவ்விதம் போற்றித் தியானிக்கவும் அன்னோர்க்குத் திறனுண்டென்றும் நம்பலாம். ஆனால், எவ்விதப் பயிற்சியும் பக்குவமுமே அற்றோர் முன்னோரது சம்பிரதாயங்களை ஒதுக்கி, ஆலயங்களுக்குக்கூடச் செல்லாமல், தாங்கள் இயற்கையையே வணங்குவதாக, அவ்விதம் ஒரு நிமிஷ நேரமுங்கூட வணங்காமலே—பெருமை பேசிக்கொள்ளுதல் பொருந்துமோ? அது நீந்தத் தெரியாதவர்கள் நதியில் இறங்கியதற் கொப்பாகுமன்றோ?

ஃ

மகாத்மா விலகுதல் :—

"ஓடு மீனோட ஒரு மீன் வருமளவும் வாடி யிருக்குமாம் கொக்கு" என்பதுபோல, மகாத்மாஜீ இப்பொழுது காங்கிரஸினின்றும் விலகிக் கொண்டாலும், மறுபடியும் காங்கிரஸை எட்டிப் பிடிக்கவும், காங்கிரஸுக்கு அபார சக்தியைப் பெருக்கவும் கூடியதான ஒரு காலத்தை வெகு கூர்மையுடனும் எதிர்பார்த்துக்கொண்டே யிருப்பாரென்பது நிச்சயம். அந்தக்காலத்தில் அவர் தாமாகவே காங்கிரஸில் வந்து சேர்ந்துகொள்வார்என்பது உறுதி. "நான் காங்கிரஸிலிருந்து விலகிவிட்டாலும் என் மனம் எப்போதும் உங்களிடமே இருக்கும்" என்று மகாத்மாஜீ சொல்வதும் சத்திய வாசகமே. மகாத்மாஜீ காங்கிரஸைப் புது உருவிலாக்கி எவ்வளவோ பாடுகள் பட்டாரெனினும், தெய்வ ஸங்கல்பம் அதற்கு எதிரிடையாகத் தோல்விகளே ஏற்பட்டன. எதுவும் சித்திக்க அதற்கான காலம் வரவேண்டி யிருக்கிறது. மகாத்மாவின் புனிதமான புது நிபந்தனைகளைக் காங்கிரஸிலுள்ளோர் ஏற்றுக்கொள்ள மறுப்பதாலும் மகாத்மாஜீ மனம் கசந்து விலக நேர்ந்துள்ளது. அப் புது நிபந்தனைகளிலே சத்திய உள்ளம் பொருந்த வேண்டுமென்பது ஒரு

முக்கிய கட்டளை. அதற்குத் தகுந்த பக்குவத்தைத் தேசத்தார் தற்போது பெற்றிருக்கவில்லையாதலால், மகாத்மாவின் புது நிபந்தனைகளை ஏற்காமல் மறுக்க நேர்ந்துளது. தமது தூய கொள்கைகளை ஏற்காதவர்களுடன் சேர்ந்து நிற்க உண்மையான மனசாக்ஷி இடங்கொடுப்பது கஷ்டம். அதனாலும் மகாத்மாஜீ விலகும்படியாகிறது. ஒருக்கால் மகாத்மாஜீ இவ்வாறு விலகுவதினால், அவரது துணையின் அருமையும், அவர் விதித்த புது நிபந்தனைகளின் பெருமையும் இப்போதைவிட அதிகமாக ஜனங்களுக்கு விளங்கி, இன்று அவரது கொள்கைகளை மறுப்பவர்களுங் கூட அவற்றை ஏற்றுக்கொள்ளும் படியான சம்பவங்களும் பிறகு நேர்வதாயிருக்கலாம். ஆதலின், அந்த வகையில் பயனுண்டாவதற்காக மகாத்மாஜீ தற்போது விலகுவதே நன்மையாகவும் கூடும். எவ்விதமோ மகாத்மாவின் கொள்கைகளே பிறகு நிறைவேறிவிடும்படியுமிருக்கும். அது ஒருநாளும் வீண்போகாது. மேலும், மகாத்மாஜீயே தான் காங்கிரசுக்கு ஆணிவேர் என்று எங்கும் போற்றப்படுகிறது. தாம் இல்லாமலே காங்கிரஸ் சமாளித்துக்கொள்ளும் என்று மகாத்மாஜி உலகத்துக்குக் காட்டவும் திருவுள்ளம் கொண்டிருக்கிறார் போலும் காண்கிறது. அதனாலும் தாம் விலகிக்கொண்டு காங்கிரஸ் திறமையுடன் நடப்பதைத் தாமே தூரஇருந்து பார்த்துத் திருப்தியடையவும் மகாத்மாஜீ விரும்புகின்றார் போலும். மகாத்மாஜீ ஆரம்பித்த ஒவ்வொரு முயற்சியும் பலிதமற்றுப் போனமையால், வேறு புது வழிகளைத் தேடவும் நினைத்து விலகுவதாகவும் இருக்கலாம். மகாத்மாஜீ பின்வருமாறு கூறுகிறார்:—"நான் ஒருக்கால் (நூதன வழி) எதையாவது கண்டுபிடிக்கலாம். கோலம்பஸ் சொந்த ஹோதாவில்தான் வெளியில் புறப்பட்டார். அவர் அமெரிக்காவைக் கண்டுபிடித்தபின் அதனுடைய எல்லா செல்வங்களையும் சக்கரவர்த்தியின் பாதங்களில் கொண்டுவந்து ஸமர்ப்பித்தார். அதைப்போல,இந்தக் கொலம்பஸ் (நான்) ஏதாவது (நூதன வழி) கண்டுபிடித்தால் உங்களுடைய பாதத்தில் எல்லாவற்றையும் நான் கொண்டுவந்து ஸமர்ப்பித்துவிடுகிறேன்'' என்கிறார். மகாத்மாஜீ காங்கிரஸிலிருந்தும் விலகுவதில் ஏதோ ஒரு பரம ரகசியம் இருக்கிறதென்றே ஊகிக்கும்படியாகிறது. அந்த ரகசியம் வெளிவருகிற பக்குவ காலத்தை நாம் எதிர்பார்த்திருக்கக் கடவோம். ஆயினும், காந்திஜீ இல்லாத காங்கிரஸ் பலரும் சகித்துக் கொள்ளக்கூடிய விஷயமில்லை. மகாத்மா புதிதாகத் தொடங்கியிருக்கும் கிராமக் கைத்தொழில் அபிவிர்த்திக்கு ஒரு பம்பாய் கோடீஸ்வரர் 20-லக்ஷம் ரூபாய் தந்திருப்பதாக வதந்தி. இரண்டு வருஷகாலம் கிராமங்களில் வேலை செய்து கைத்தொழில்களைப் புதுப்பிக்கவேண்டுமென்று மகாத்மாஜீ வேலைசெய்து வருகிறார். ஒரு மாதத்திற்குள் வேலைத்திட்டம் தயாராகி விடுமாம்.

ஃ

குரங்கும் சர்ப்பமும்:—

"குரங்குப்பிடியே பிடி" என்பார்கள். குரங்குப் பிடிபோல் பிடிக்க வேண்டுமென்பார்கள். தூத்துக்குடி பக்கத்தைச் சேர்ந்தவர்கள் புனித நீராடப் பாபநாசத்துக்குச் சென்றிருந்தபோது, அங்கே ஓரிடத்தில் தூங்குகையில் ஒரு நாக ஸர்ப்பம் அங்கு வந்து படமெடுத்தாடியதாம். அவ்விடத்தில் ஒரு குரங்காட்டியுடனிருந்த ஒரு குரங்கு திடீரெனப் பாம்பின் கழுத்தைப் பிடித்துக் கொள்ள, பாம்பும் தன் வாலால் குரங்கைப் பன்முறை சுழற்றி யடித்தும்,

நாக்கை வெளியில் நீட்டிக் கடிக்கவும் முயன்றதாம். பாம்பு நாக்கை வெளியில் நீட்டும்போதெல்லாம் குரங்கு விளையாட்டுடன் அதன் கழுத்தை இறுக்கிப் பிடித்து ஹிம்ஸித்ததாம். கடைசியில் குரங்கின் பிடியில் அகப்பட்ட பாம்பு சிறிது நேரத்தில் மாண்டதாம். அங்கு நல்ல நித்திரையிலிருந்த யாத்ரீகர்கள் அனைவரும் குரங்கின் வீரச் செயலால் பேராபத்திற்குத் தப்ப நேர்ந்தது. ஒவ்வொரு பிராணியிடத்திலும் ஒரு அற்புத சக்தி யிருக்கின்றது.

ஃ

ஒரு நூலாசிரியரின் கொலை:—

"ஆத்திரம் மிகப் பெரிதானாலும் புத்தி மிகப் பெரிது" என்பர். ஆத்திரப்பட்டு ஒரு காரியத்தைச் செய்து பிறகு அதை மதாபிமானத்தில் சேர்த்துப் பேசுவது சிலர் போக்கு. மகராஜ் நாதுராம் என்பவர் இஸ்லாம் மதத்தைப்பற்றித் தமது நூலில் தவறாக எழுதியிருந்ததாய் அப்துல் குலாம் என்பவர் ஆத்திரப்பட்டு, அந்த நூலைப்பற்றி விசாரணை நடக்கும் ஜுடிஷியல் கமிஷனரது கோர்ட்டிலேயே அவரைக் குத்திக் கொன்றுவிட்டு அவ்விதம் கடவுள் தம்மை ஏவியதாகப் பேசினர். கராச்சி கோர்ட்டார் இவருக்கு மரண தண்டனை விதித்து, "மத தூஷணை செய்கிறவர்களைத் தண்டிக்கும் விசேஷ அதிகாரம் கவர்ன்மெண்டாருக்கே உரியது; எந்தத் தனிப்பட்ட நபரும் இந்த அதிகாரம் தமக்கு இருப்பதாக நினைத்துக்கொண்டு காரியம் செய்யக் கூடாது" என்று புத்தி புகட்டினர். எதிரி மரணத்தை விரும்பி இக்குற்றம் செய்ததால், எதிரி மரணத்தை யடைவது தகும் என்று நீதிபதிகள் கூறினர். மதம் என்பது மனிதனை அடக்கிப் பணியச் செய்து பக்குவப்படுத்தத் தோன்றியதேயன்றி, ஆத்திர சிந்தையை வளர்க்கத்தோன்றியதல்ல. மதவிஸ்வாசிகள் தம் மதத்தின் உள் தத்துவத்தைப் பூரணமாய் அறிந்துநடந்தால் ஆத்திர கோப தாபங்களை விட்டு விடுவர்.

ஃ

புத்தரது தங்க விக்கிரகம்:—

"செல்வம் உண்டாதும் காலம் செய்கை உண்டு, வல்லமையுண்டு." அவ்வாறாகச் செல்வம்நிறைந்திருந்த முற்காலத்தில் 22-ராத்தல் நிறையுள்ள தங்கத்தில் செய்த புத்தரது விக்கிரகமொன்று கொழும்பில் காட்டப்பட்டது. இது நாலரை லக்ஷம் ருபாய் விலையுள்ளதாம். அது 700-வருஷங்களுக்குமுன் இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டதாம்: அந்த விக்கிரகம் தங்க உருவெடுத்தும் ஒரு கோயிலில் வீற்றிருக்க இடமில்லாமல் வெறுமனே ஒரு காட்சிப் பொருளாயிருப்பதும் அதன் துர்ப்பாக்கியம் தான்!

ஃ

48-வது காங்கிரஸ்:—

"ஆனை படுத்தாலும் ஆள் மட்டம்" என்பதுபோல, காங்கிரஸுக்கு எவ்வளவு கஷ்டங்கள் சோதனைகள் ஏற்பட்ட போதிலுங்கூட, தனது நிகரற்ற பெருமையிலேயே விளங்கி பம்பாய் நகரத்தில் 28—10—34-ல் மிக்க வைபவமாகக் கூடிற்று. காங்கிரஸ் நடைபெறும் இடத்திற்கு "அப்துல் கபார்கான் நகர்" எனப் பெயரிட்டிருந்தனர். வெகு சொற்பகாலத்தில் மஹா அற்புதகரமான பந்தல் நிர்மாணமாகி ஒரு புது நகரமாக ஜ்வலித்தது. 80-ஆயிரம் ஜனங்கள் காங்கிரஸுக்கு வந்திருந்தனர். ஸ்ரீமான் நரிமன் வரவேற்புக்

கமிட்டித் தலைவராய் நின்று அனை வரையும் வரவேற்றுப் பிரசங்கம் செய்தார். அதன்பின்பு அக்கிராஸன ரான ஸ்ரீமான் ராஜேந்திரபாபு தமது உபன்யாசத்தின் பிரதான பாகங்களை எடுத்துரைத்தார். சத்தி யம், அஹிம்ஸை, கதராடை ஆகிய இவற்றின் மூலமாகவே நம்முடைய லட்சியத்தை மடையக்கூடுமென்றும், அஹிம்ஸா தருமத்தின் சக்தி விசே ஷத்தைப்பற்றியும் விளக்கினார். மகாத்மாஜீ விலகுவதன் நோக்கம் காங்கிரஸ் தன்னையேதான் தாங்கிக் கொள்ளும்படி வலிவூட்டுவதற் காகவே என்றார். அவரது பிரஸங் கம் மிகச் சுருக்கமாயும் அர்த்தபுஷ்டி யுடனும் விளங்கிற்று. மகாத்மாஜீக்கே இக் காங்கிரஸில் அதிக செல்வாக்கு இருந்துவந்தது. மகாத்மாஜீ எந்தெந் தப் புதிய திருத்தங்களைக் கோரி னரோ அவற்றைக் காங்கிரஸ் ஏற் றுக்கொண்டு விட்டது. காங்கிரஸின் அமைப்பையே மகாத்மா புதுவிதமாக மாற்றி, அதற்குப் புதிய சக்தியைப் புகட்டியிருக்கிறார். இனி, காங்கிரஸ் மகாசபைக்கு 2000-பிரதிநிதிகளே யிருக்கவேண்டுமென்றும், அகில இந் தியக் கமிட்டிக்கு 165-பேர் என்றும், பிரதிநிதிகளே இனி காங்கிரஸ் அக் கிராஸனரைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்றும் புதுவித அமைப் பை ஏற்படுத்தி யுள்ளார். காங்கிரஸ் மூன்று நாட்களும் கூடி வெகு திறமையாக நடைபெற்றது. பிரதி வருஷமும் காங்கிரஸ் கூடி அடுத்த வருஷத்தில் இன்னின்ன வேலை களைச் செய்வதென்று திட்டம் போடு வது வழக்கமாயிருந்தது. இம்முறை பம்பாய் காங்கிரஸில் காங்கிரஸின் அமைப்பைத் திருத்தும் விஷயத்தி லேயே விசேஷ கவனம் செலுத்தப் பட்டு அதை நிறைவேற்றியதே காங் கிரஸ் சாதித்த முக்கிய வேலையாக இருந்தது. காங்கிரஸுக்கு உயிர் இருக்கிறதென்பதையும். மகாத்மா ஜீயே இந்தியாவின் ஒப்பற்ற தலைவர் என்பதையும் பம்பாய் காங்கிரஸ் நன்கு நிரூபித்து விட்டது. காங்கிர ஸுடன் சென்ற 15—வருடகால மாகச் சேர்ந்து நின்று அதைப் புது உருவில் அமைத்த மகாத்மாஜீ காங் கிரஸ் மூன்றாம் நாள் கூடி முடிந்த துடன் தாம் விலகிக்கொண்டு விட்டு, தமது ராஜிநாமாவை எழுத்து மூல மாக ராஜேந்திர பாபுவுக்கு அனுப்பி னார். அதைக் கண்ட அவர் கண்ணீர் பெருக்கினார். தற்போதைய புது அமைப்பில் இனி காங்கிரஸ் சிறிய ஸ்தாபனமாகத் தோன்றுமென்றா லும், வேலைகளைச் சீக்கிரமாக நிறை வேற்றி நன்றாக உழைக்கும் காங்கிர ஸாக இருந்துவரும். காங்கிரஸ் நிர் வாகத்தின் எல்லாச் செலவுகளும் போக, 30-ஆயிரம் ரூபாய் மிச்சப் பட்டது. காங்கிரஸுக்கு வெற்றி யுண்டாகுக. மகாத்மாஜீ வாழ்க.

ஃ

ஸ்ரீமான். ஜே. ஆர். ரங்கராஜு அவர்களின் வெற்றி:—


ஜனாப் அப்துல் ரஸாக் சாகிபு என்பவர் சைதாப்பேட்டை முனிசி பல் சபையின் தலைவராக முன்பு இருந்தவர். பிறகு அந்த முனிசிபல் சபையின் தேர்தலில் 5 ம் வார்டுக்கு அபேக்ஷகராக நின்றார். அவருக்கு எதிர்ப் பக்கமாகப் பிரபல தமிழ் நாவலாசிரியரான ஸ்ரீமான் ஜெ. ஆர். ரங்கராஜு காரும், அவரது ஸகோத ரர் ஸ்ரீமான் ராவ்பகதூர் செல்வரங்க ராஜு காரும் நின்று பிரசாரம் செய் தனர். இதில் ஸ்ரீமான் ரங்கராஜு தேர்தலுக்கு இரண்டு நாள் முன்பாக (13-7-33) "இதைவிட ஏமாற்றுத லானது வேறு இருக்கிறதா?" என்று ஒரு பிரசுரத்தை வெளியிட்டாராம். அதற்குப் பின்பு மேற்படி 5-ம்

வார்டுக்கு அப்துல் ரசாக் சாகிபு தெரிந்தெடுக்கப்பட்டார். அதன்பின் ஸ்ரீ அப்துல்ரஸாக் சாகிபு ஸ்ரீமான் ரங்கராஜு வெளியிட்ட பிரசுரம் அவதூறு என்று வழக்கு தொடர்ந்தார். சைதாப்பேட்டை ஸப்டிவிஷனல்மாஜிஸ்திரேட் அதை விசாரித்து ஸ்ரீமான் ரங்கராஜுக்கு ரூபா 200-அபராதம் விதித்தார். செங்கற்பட்டு செஷன்ஸ் ஜட்ஜ் இதை ஊர்ஜிதம் செய்தார். இதை ஆக்ஷேபித்து ரங்கராஜுகாரு ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொள்ள, ஹைகோர்ட்டார் கீழ் கோர்ட்டுத் தீர்ப்பை ரத்து செய்து, அபராதத்தைத் திருப்பிக் கொடுக்கும்படி உத்தரவிட்டனர். தீர்ப்பின் சாராம்சம் பின் வருமாறு:- (சைதாப்பேட்டை) முனிசிபல் நிர்வாகத்தைப்பற்றிக் கவர்ன்மெண்டே பலமாகக் கூறியிருக்கிறது. கவர்ன்மெண்ட் உத்திரவில் கண்ட வார்த்தைகள் அவதூறானவை என்று வாதிக்கப்படவில்லை. இவ்வழக்கின் நிலைமையில் இவ்விதம் கூறுவது நியாயமானதே. ஆகையால்ரங்கராஜு நியாயமாகக் கூறுவதற்கு அதிகமாகச் சென்று விட்டாரா என்பதே கவனிக்கப்படவேண்டும். மேற்படி பிரசுரத்தின் கடைசியில்—இதற்கெல்லாம் காரணம் அப்துல் ரஸாக்—என்று கூறியிருப்பது தான் கவனிக்கப்படவேண்டும். அப்துல் ரஸாக் முனிசிபல் தலைவராக இருந்த காலத்தில் நடந்த சில மோசடிகளுக்கு அவரும் சிறிது ஜவாப்தாரியானவர் தான். பிரசுரத்தை மொத்தமாகப் படிக்கையில், அப்துல் ரஸாக் தலைவராக இருந்திருக்கையில் மோசடிகள் நடந்திருக்கிறதென்றும், அவை தடுக்கப்படாமல் விடப்பட்டிருக்கிறதென்றும், ஆகையால் அவருக்கே ஓட் செய்து அவரை மறுபடியும் அங்கத்தினராகத் தேர்ந்தெடுப்பது அபாயத்தைக் காட்டும் என்பதாகவே இப்பிரசுரம் இருக்கிறதென்ற முடிவுக்கு வரக்கூடும். கடைசி வாக்கியம் சாதாரண அபிப்பிராயமே யொழிய அவதூறானதல்ல. ஆகையால், மனுதார் ரங்கராஜுமீது விதிக்கப்பட்ட தண்டனை பிசகு. ஆகையால், அது ரத்து செய்யப்படுகிறது. அபராதத் தொகை திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்.

பெண்கள் குறைப்பட்டுக் கொள்ளும் போக்கு.

துவைப்பதற்கு சோப் வேண்டுமென்று காலணா தரும்படி மனைவி கேட்கிருள். கணவன் அந்தக் காலணாவைத் தர, அதைப் பெற்றுக் கொண்டு, 'இந்தக் காலணா போதுமா' என்கிருள். 'நீ கேட்டதைக் கொடுத்தேன். அரையணா, முக்காலணா வேண்டுமானல் கேள், கொடுக்கிறேன்' என்கிருன் கணவன். காலணா கேட்டுவிட்டுப் பிறகு அரையணா முக்காலணாவாகத் தரவில்லை யென்பது ஒரு சாமர்த்தியப் பேச்சாகும். வேண்டுமென்றே கணவன்மீது குற்றங்கூறிக் குறைப்பட்டுக்கொள்வதுமாகும். இது சில பெண்களின் போக்கு.

எழுதும் மேஜையில் ஈக்களின் தொந்தரை அதிகமானல், எழுதுவோருக்கு ஈக்களை ஓட்டுவதில் புத்தி செல்ல, எழுதுவதற்கான புத்தி தடுமாறிப் போய், அப்போது தோன்றிய புது யோசனையும் மறைந்து மிக்க வாதனை விளைக்கிறது.



மனோன்மணீயம் வசன அமைப்பு:—

[இது ராயபஹதூர் ஸ்ரீமான் P. சுந்தரம்பிள்ளை எம். ஏ; அவர்களது செய்யுள் நாடகத்தின் வசன அமைப்பு சென்னைப் பச்சையப்பன் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் ஸ்ரீமான் திரு. ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ; எல். டி; அவர்கள் இயற்றியது. காலிகோ பயிண்டு, கிளேஸ் காகிதப்பதிப்பு டிம்மி 1x8 அளவில் 160-பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 2-4-0. ஆசிரியரிடம், சுந்தர நிலையம், பச்சையப்பா ஹாஸ்டல் ரோட், சேத்துப்பட்டு, சென்னை என்ற விலாஸத்தில் கிடைக்கும்.]

ஸ்ரீமான் சுந்தரம்பிள்ளை யவர்களின் சுந்தரமான, சுதந்திரயூகத்துடன் நிகரற்று விளங்குமாறு வரைந்த "மனோன்மணீய"த்தை ஒன்பது முறை வாசித்து மகிழ்பூத்து மயங்கியுள்ள நாம், இந்த வசன அமைப்பினைக் கண்டதும் அத்யந்த ஆநந்தத்தை யடைந்தோம். செய்யுள் மனோன்மணீயத்துக்கு வசன மனோன்மணீயம் ஒன்று வேண்டியதே யென்று முடிவு கட்டினோம். மிக்க வாஞ்சையுடன் 10-மணி நேரத்தில் வாசித்து முடித்தோம். ஒவ்வொரு எழுத்தையும் வரியையும் சிந்தையிலூன்றிக் கவனித்துப் படித்தோம். அவ்விதம் சிரத்தைகொண்டு வாசிக்குமாறு இயற்கையிலேயே அமைந்துள்ள மனோன்மணியச்சுவை ஒவ்வொருவரையும் தூண்டுகின்றது. தம்மையே மறந்து பரவசங்கொள்ள வைக்கும் ஆற்றலை "மனோன்மணீய"த்திடம் எத்தனையோ முறை கண்டதுண்டு அதற்கு நிகர் எதுவுமில்லை. செய்யுள் நாடக மனோன்மணீயப் பொக்கிஷப் பெட்டிக்கு இந்த வசன "மணீயம்" வெகு பொருத்தமான சாவியாக விளங்குகின்றது. இந்த வசன நாடகத்தை வாசித்தபின்னர் செய்யுள் நாடகத்தைப் படிப்பின் முன்னையிலும் வெகு தெளிவாய் விளங்கி இன்பம் நல்குமென்பது உறுதி. இவ்விதம் ஒரு வசன அமைப்பை இயற்றவேண்டுமென்ற சிந்தனை நமது அன்பர் ஸ்ரீமான் சண்முக சுந்தரர் அவர்கட்குத் தோற்றியது தமிழகம் புரிந்த நற்றவப்பயனேயாம். மாந்தரின் மனத்துள் சிற்சில காலங்களில் அருமையாய்த் தோன்றும் சிந்தனைகள் வெகு அற்புதமான காரியங்களை முடிக்கவல்ல துணைக் கருவியாய் விடுகின்றன. அவ்வித அற்புதங்களுள் இந்த "மனோன்மணீய வசன அமைப்பு"ம் ஒன்றாமெனக. மிக்க கௌரவமான உயரியநடையில், இன்பம்ஊறிச் சுரக்கும்வண்ணம் சுருங்கச்சொல்லி விளங்கவைத்தல் என்ற நயத்தோடும் இது ஆக்கப்பெற்றுள்ளது. செய்யுள் மனோன்மணீயத்தின் உயர்வையும் அழகையும் கவிதையின் இன்பங்களையும் அதற்கே சொந்தமாக்கிவிட்டு, ஸ்ரீமான் முதலியார் கதா பாகத்தை மட்டும் தம் மனத்திற்கொண்டு, தாமே சுதந்திரயூகத்துடன் ஆங்காங்கு செய்யுள் மனோன்மணீயத்தின் அமிர்தச் சொற்களையும் கலந்துகொண்டு, வெகு பக்குவமாய், படிக்கப் படிக்கப் பரவசம் துள்ளுமாறு இயற்றியுள்ளார். செய்யுள் மனோன்மணீயத்துள் விளங்காதன

சில இந்த வசன அமைப்பில் தெளிவாய் விளக்கப்பட்டுள்ள பான்மை கதையின் ருசிகரத்தை அதிகரிப்பிக்கின்றது. காதலர் இருவரும் தாம் காதலுற்றவர் எவரென ஓவியத்தலைவர் மூலம் தங்களின் சந்திப்புக்கு முன்னரே அறிந்து இறும்பூதுற்றன ரென்ற அமைப்பு சாலவும் இனியது. வாணியின் காதல் உறுதி எவரையும் மகிழவைக்கும். குடிகெடுக்கும் குடிலனது கெடுபுத்தியின் முடிவு வஞ்சகர் எவரையும் நடுங்கிடச் செய்யும். இந்த வசன அமைப்பு, செய்யுள் மனோன்மணீயத்திற்குச் சிறந்த விளம்பரமாவதுடன், செய்யுள் நாடகத்தை எவரும் பெற்றுப் படிக்க ஒரு தூண்டுதலுமாகும். இந்த வசன அமைப்பை நாம் ஆர்வத்துடனும் வரவேற்கின்றோம். செய்யுள் மனோன்மணீயத்தின் ஆசிரியரும் ஒரு எம். ஏ! இந்த வசன அமைப்பின் ஆசிரியரும் ஒரு எம். ஏ!! இருவரும் சுந்தரப் பெயரினரே!!! தமிழ்ச் செல்வர்கள் இதனைப் பெற்று மகிழ்வாராக.

ஃ

ஸ்ரீராமசரிதை:—

[படங்களுடன் கூடியது. எட்டு வயதுள்ள பாலிகையான ஸ்ரீமதி கே. எஸ். சங்கரி அம்மாள் அவர்கள் இயற்றியது ஸ்ரீமான் ரமண தாசர் கா. சு. சேஷகிரி, 138, ப்ராடீஸ் ரோட், மைலாப்பூர், சென்னை, என்ற விலாசத்தில் கிடைக்கும். டபிள் கிரவுன் 1—16-ல் 80 பக்கங்கள். கிளேஸ் பதிப்பு. விலை அணா 6.]

எட்டே வயதுள்ள சிறுமி ஸ்ரீ ராமாயணத்தை வரைந்த அதிசயம் மிக ஆச்சரியகரமானது சிறுமியின் படமும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. இனிய நடையில் ஸ்ரீராம சரிதையை எந்தப் பாகமும் விட்டு விடாதபடி ஸம்பூரணப்படுத்தப்பட்டுள்ளது. மிகவும் சுருக்கமாய் சார சங்கிரகமாய் நன்கு அமைந்துள்ளது. இச்சிறுமி பாடசாலையிற் படிக்கவில்லையாம். வீட்டிலேயே பயின்ற குழந்தையாம். தினத்துக்கு 200-பக்கங்கள் வாசித்துப் பொருள் அறிந்துகொள்ளுமாம். பெண்மக்களின் கல்வி அபிவிருத்தியையே பெரிதும் விரும்பியுள்ள நமக்கு இச்சிறுமியின் கலாநிபுணத்துவம் மிக்க ஆநந்தம் தருவதாகின்றது. சிறுவர் சிறுமியர்க்கு இந்நூல் இனிய விருந்தாகும். இந்த சுந்தரச் செல்வி பிற்காலத்தில் பிரபல நூலாசிரியையாக ஜ்வலிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

["நச்சுப் பொய்கை" முதலிய நூல்களின் விமரிசனம் மறுமுறை வரும்.]

வாய்க்கு ருசியாகச் சமைக்கக்கூடாதா?

எவ்வளவோ செலவிட்டு வாங்கிவந்த காய்கறிகளைத் தாராளமாக எண்ணெய் இட்டு ருசியாகச் சமைக்காமல், அதிலே செட்டுத்தனம் காண்பித்துக்கொண்டு, பட்டும் படாததுமாக எண்ணெய் விட்டு வறுத்து, உண்பதற்கு ஒரு ருசியாயில்லாமற் செய்துவிடுகிறார்கள். இதில் அவ்வளவு செலவிட்டு வாங்கியது வீணாகிறது. ஒரு காலணா, அரையணா எண்ணெய் அதிகம் விட்டுச் செய்திருந்தால் திவ்யமாயிருக்கும். அதற்குப் பின்வாங்கிப் பதார்த்தங்களைக் கெடுப்பது சிக்கனமாகுமா? தரித்திரச் செட்டுக்கு என்றும் தரித்திரக் கை தான்.

பாபு இராஜேந்திர பிரஸாத்

—1934-ம் வருஷத்திய 48-வது காங்கிரஸ் தலைவா—



வட பீஹாரில் ஒரு காயஸ்த மரபில் பாபு ராஜேந்திர பிரஸாத் கடைசிக் குழந்தையாக 1884-ம்௵ டிசம்பர்௴ 3-ம் தேதியன்று ஜனனமானார். அவரது தந்தையான முன்ஷி மஹாதேவ ஸாஹே 1907-ம் வருஷத்தில் காலஞ்செல்ல, மூத்த சகோதரரின் ஆதரவில் வளர்ந்து விருத்தியடைந்தார். கல்கத்தாவில் பி ஏ. பரீக்ஷையில் முதன்மையாகத் தேறினார். 1907-ம்௵ எம். ஏ. பரீக்ஷையில் தேறினார். 1910-ம்௵ பி. எல். பரீக்ஷையிலும் தேறி, 1911-ம்௵ கல்கத்தாவின் ஹைகோர்ட் வக்கிலாகி நல்ல ஸம்பாத்தியம் செய்துவந்தார்.

ஃ

1902-ம்௵ "பீஹாரி கிளப்" என்று ஒரு சங்கத்தை ஸ்தாபித்தார். இது மாணவர்கட்கு மிக்க உதவியாயிருந்தது. பின்பு வங்காளப் பிரிவினை இயக்கத்திலும் ஈடுபட்டார். 1906-ம் வருஷத்தில் இவரது தூண்டுதலால் பாட்னாவில் மாணவர் மகாநாடு நடந்தேறிற்று. ஒரு பிரிவி கௌன்ஸில் வழக்கு சம்பந்தமாய் 1928-ம்௵ இங்கிலாந்து சென்று ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிற்கும் போய் வந்தார். 1910-ல் ஸ்ரீமான் கோக்கலே இவரை இந்திய ஊழியச் சங்கத்தில் சேரும்படி அழைத்தார். தமையனார் ஒப்பாததால் இராஜேந்திர பாபு அதில் சேர முடியாமல் வாடினார். அதைப்பற்றித் தமது தமையனாருக்கு எழுதிக்கொண்ட கடிதத்தில், ஸ்ரீ கோகலேயின் சங்கத்தில் சேர்ந்து சாமானிய வாழ்க்கையை நடத்தவே தாம் ஆர்வம் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். "தனம் அதிகரிப்பதால் தேவைகள்தான் அதிகரிக்கின்றன. சந்துஷ்டி வெளி விஷயங்களால் ஏற்படுவதில்லை. கோடீசுவரனைவிட ஒரு ஏழை சந்துஷ்டியுடன் வாழ்கிறான். ஆகையால், ஏழ்மையைத் தாழ்வாக நினைக்கக் கூடாது. உலகப் பெரியோர்களும் ஏழைகளே. பலவிதக் கஷ்டங்களையும் அவர்கள் அனுபவித்திருக்கின்றனர். அவர்களைத் தாழ்மைப்படுத்தித் துன்புறுத்தியவர்களின் பெயர்கள்கூட மறைந்துவிட்டன. உலகப் பெரியோர்களின் பெயர்களை ஜனங்கள் மனதில் வைத்துப் போற்றுகின்றனர். தேசசேவை செய்யவேண்டுமென்பதே என் பேரவாவாகும். ஸ்ரீயான் கோகலேக்குச் சமானமானவர் சமஸ்தானாதிபதிகளிலாவது, போதுமக்களிலா

மதுரையில் ஒரு பெண்ணின் சவத்தைப் பார்ஸல் செய்தனுப்பிய வழக்கில் பார்ஸல் பாரத்தில் சாக்ஷிக் கையெழுத்திட்ட ஒருவர் பின்வருமாறு சாக்ஷியம் கூறினார்:—"என்னடா கருப்பனா! இந்தப் பெட்டி நாறுகிறதே. இதில் கருவாடு கிருவாடு இருக்குமா" என்று ஸ்டேஷன் மாஸ்டர் கேட்டார். கருவாடை அரக்கோணத்திற்குப் பார்சல் பண்ணமாட்டார்கள். வேறு எதாவது இருக்குமென்று போர்ட்டர் சொன்னார். ஸ்டேஷன் மாஸ்டர் 'தோலாக இருக்குமாடா" என்று சொன்னார். "காட்டெருமை அல்லது மான்தோலாக இருக்கும்" என்று நான் சொன்னேன்."

வது யாராவது உண்டா? அவரும் கடைசியில் ஒரு ஏழையல்லவா?" என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டார்.

ஃ

1910-ல் இருந்ததைப்போலவே 1934-லும் சிறிது ஆடம்பரமற்ற வாழ்க்கையை அனுஷ்டித்து வருகிறார். மதுமாம்ஸங்களை விலக்கியவராவர். 1917-ல் சர்வ கலாசாலை அங்கத்தினரானார். பல வருஷகாலம் அவர் காங்கிரஸ் காரியதரிசியாகவும், காரியக்கமிட்டி மெம்பராகவும் இருந்து, 1932-ம் வருஷத்தில் பூரி காங்கிரஸ் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். ஆனால், பூரி காங்கிரஸ் சர்க்காரால் தடுக்கப்பட்டது. சட்ட மறுப்புக்காக மூன்று தடவை சிறை சென்று வந்திருக்கிறார். முதல் இருமுறை 6-மாதங்கள் வீதமும், மூன்றுமுறை 15-மாதங்களும் சிறையில் இருந்துள்ளார். இவ் வருஷம் ஜனவரி௴ 15-ம் தேதி பீகாரில் ஏற்பட்ட பூகம்பத்திற்கு அதன் கஷ்ட நிவாரணமாக 28-லக்ஷம் ரூபாய் சேர்த்துவிட்டார். இது இராஜப்பிரதிநிதியார் சேர்த்த தொகையில் பாதியளவாகிறது. பெரிய தேசபக்தர்களின் திருக்கூட்டத்தில் ராஜேந்திரபாபுவும் ஒருவராவார். மகாத்மாஜியுடன் விளங்கிய காங்கிரஸ் மகா சபையின் கடைசி தலைவருமாவார். இவர் இம்முறை காங்கிரஸ் மகா சபையின் அக்கிராசனத்தை வெகு திறமையுடனும் நிர்வகித்து வெற்றிகரமாக முடித்த பான்மை போற்றற்பாலது.

நம் நாட்டு நெற்பயிரின் போக்கு.

உலகத்தில் பூர்வமான நாகரிகம் படைத்த தேசங்கள் சைனாவும், இந்தியாவுமென்பது உலகப்பிரசித்தம். உலோகங்களையும், இரத்தின வகைகளையும், தாதுப்பொருள்களையும், தாவர வர்க்கங்களையும், தகுந்த வகையில் ஆராய்ந்து வாழ்க்கையில் உபயோகப்படுத்திக்கொண்ட சமூகங்கள், சீனர்களும், இந்தியர்களுமேயாவர். சீனர்களால் வேடிக்கைக்காக உபயோகப்படுத்தின வாண மருந்துதான் இப்பொழுது மேனாட்டினர் கையில் சிக்கிக்கொண்டு அவர்களால் உலகம் ஆளப்படும்படி செய்திருக்கின்றது. அதுபோலவே, நெற்பயிரிடுந் தொழிலிலும் இந்தியாவும் சீனாவும் முதன்மை பட்டவையாகும். சென்னை சட்டசபையில் அரிசி இறக்குமதியைக் குறித்த ஒரு கேள்விக்கு இவ்வருஷம் ஜனவரி௴ முதல் அக்டோபர்௴ 25—க்குள் 1,85.982 டன் (அதாவது 1859820 மூட்டை) அரிசி இறக்குமதியாகியிருக்கிறதென்று சொல்லப்பட்டது. இதற்கு நமது நாட்டின் தரித்திர நிலையே காரணமென்று சொல்லவேண்டும். நமது நாட்டினர் அனைவரும் நெற்பயிரிடுந் தொழிலை மேற்கொண்டவர்களாயும் நெல்லரிசி ஆகாரத்தை யுண்பவர்களாயும் இருந்தும், இத்தொழிலில் இவ்வளவு தாழ்மையடைந்திருப்பது நமது வறுமை நிலையைத்தான் குறிப்பிடுகின்றது. ஜப்பான் தேசத்தினர் எல்லாத் தொழில்களிலும் அரசாங்கத்தின் உதவியைப் பெறுவதால் அவர்கள் எல்லாவகைத் தொழிலிலும் மேன்மையடைந்திருப்பதோடு விவசாயத்திலும் மேம்பட்டிருக்கின்றனர். ஜப்பானியர் நெற்பயிரைச் சோதனை வகையில் பயிர் செய்யத் தொடங்கி 4000 வகை நெற்களை சேகரஞ் செய்து ஒவ்வொரு தினுசின் குணகுணங்களையும் சோதனைசெய்து, எந்த நெல் எந்தக் காலத்தில் எத்தன்மையான நிலத்தில் விளைகின்றதென்பதையும், காய்ச்சல் காணில் தண்ணீர் குறைவைத் தாங்கக்கூடிய நெல் தினுசுகள் எது என்பதையும், நிலவளங்களைப் பொருத்து இடமறிந்து பயிர் செய்யக்கூடிய நெற்களையும் தேர்ந்தெடுத்து சில வருஷ அனுபவத்தில் நெற்பயிர் சாகுபடியில் அனேக வகையில் விருத்தியடைந்திருக்கின்றனர். அவர்கள் சோதனையில் எல்லா வகையான நெற்களும் 660 வகையான வம்சங்களுக்குள் அடங்கி விடுகின்றதென்றும் குறிப்பிட்டிருக்கின்றனர். உலகில் வருஷம் ஒன்றுக்கு 18 கோடியே 25 லக்ஷம் டன் நெல் விளைகிறதென்றும், அதில் மூன்றில் ஒரு பாகம் இந்தியாவிலும், ஒரு பாகம் சைனாவிலும், மற்றப்பாகம் ஆஸ்திரேலியா, ஆபிரிக்கா, அமெரிக்கா முதலிய கண்டங்களிலுமாக விளைகிறதென்றும் 18-ம் நூற்றூண்டின் இறுதியில் மதிக்கப்பட்டது. ஆனால், இப்பொழுதோ அமெரிக்காவும் ஜப்பானும பயிர்த் தொழிலில் அதிக முன்னேற்றமடைந்து விட்டது. உலகின் நெல் விளைவில் 100-க்கு பதிமூன்று பாகம் மனிதர் உபயோகத்திற்கு வராமலே சேதமடைந்து போகின்றதாம். தற்பொழுதுள்ள உலகின் ஜனத்தொகை 200 கோடியில் பாதி ஜனங்கள் நெல்லரிசியை ஆகாரமாகக் கொள்கின்றனர். இந்த நெல்லின் உயர்வை மதித்தே உழவு தொழிலின் பெருமை மதிக்கப்பட்டிருக்கின்றது. உழவு தொழிலாலேதான் ராணுவம், கடற்படை, ஆகாயப்படை, கைத்தொழில், வர்த்தகம் சிங்காதனம், செங்கோல், மணிமுடி என்ற பெயர்கள் ஜனங்களின் ஞாபகத்தில் இருந்துகொண்டிருக்கிறன. இத்தொழில் அவ்வளவு சிறந்ததென்பதை குறிக்க வந்த 'வள்ளுவர்' மற்றத் தொழில்கள் யாவும் இத்தொழிலால் இடப்பட்ட பிச்சையை ஏற்று உண்டு, ஜீவித்திருப்பவைகளென்று சொல்லிப் போனர்.

"பலகுடை நீழலுந் தன் குடைக் கீழ் காண்பர்
அலகுடை நீழ லவர்."
"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்."

என்னும் வாக்கியம் இதை விளக்குகின்றது. இவ்வளவு சிறந்த இத்தொழில் நமது இந்தியாவிற்குப் பூர்வகாலந் தொடங்கியதாயிருந்தும், இப்பொழுது வெகு தாழ்ந்த நிலைமையை யடைந்து விட்டது. இதற்கு முக்கியமான மூன்று காரணங்கள் சொல்லப்படுகின்றன.

(1) டாம்பீக வாழ்க்கையினாலும், எழ்மைத்தனத்தினாலும் எற்படும் சோம்பலென்றும், (2) அரசாங்கத்தின் உதவிக் குறைவும், அதிக வரியு மென்றும், (3) உழவு தொழிலுக்கான எரு வெளிநாடுகளுக்கு எற்றுமதி செய்யப்படுவதென்றும் சொல்லப்படுகிறது. இந்தியாவிலிருந்து வருஷ வாரியில் மீன் எரு, எலும்பு, எலும்புத்தூள், எள்ளு ஆளிவிதை இவைகளின் புண்ணாக்கு, வேர்கடலை முத்துக்கொட்டை இவைகளின் புண்ணாக்கு ஆகிய எரு வகைகள் வருஷம் ஒன்றுக்கு 1,80,000-டன் எரு வெளிநாட்டிற்கு எற்றுமதி செய்யப்பட்டுப் போகிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுவுமல்லாமல், கிராமவாசிகள் எரு சேர்ப்பதும், நிலங்களுக்கு எரு இடுவதும்மிகவும் அறியாத்தனமான செய்கையா யிருக்கின்றது. கிராமவாசிகள் ஆட்டெரு மாட்டெருக்களையும், எரி துரும்பு சாம்பலையும் எருவாக உபயோகிக்கின்றனர். நூதன ஆராய்ச்சிக்காரர்கள் அவர்களுடைய ஆராய்ச்சியின் அனுபவத்தில் ஆடுமாடுகளின் சாணியிலுள்ள சத்துதான் மிகவும் உயர்வானதென்றும், மற்ற எருக்களின் வகை அவ்வளவு உயர்வான தல்லவென்றுங் குறிப்பிட்டிருக்கின்றனர். இதன் உயர்வை அறியாத கிராம வாசிகள் வயல்களிலுள்ள சாணிகளைப் பொறுக்கி வந்து வரட்டி தட்டி எரி துரும்பாக உபயோகித்துச் சாம்பலாக்கி விடுகின்றனர். குடியானவர்கள் அவர்களுடைய மாட்டுச் சாணிகளை அடுப்புக்கு வரட்டி தட்டிக்கொள்வதோடு மேடான பாகங்களில் கொட்டிக் காயவிட்டு விடுகின்றனர். பிறகு, அதோடு குப்பைகளையுஞ் சேர்த்துக் கொளுத்திவிட்டு சாணி எருவையுஞ் சேர்த்து சாம்பலாக்கி விடுகின்றனர். எரிந்துபோன சாம்பல் எருவில் மிகுந்து நிற்பது பயிர்களுக்குரிய உப்புச் சத்து ஒன்றேயாகும். இந்தச் சாம்பலை, வயல்களில் கொட்டிய பின் தண்ணீரை அதில் நிறையக் கட்டி நிறுத்துகின்றனர். சாம்பலிலுள்ள உப்புச்சத்து தண்ணீரில் கலந்து கறைந்து நிற்கும்போது நிலத்தை உழுவதற்காக அத்தண்ணீரை வடிக்கட்டி விடுகின்றனர். நிலத்தில் எருவின்உபயோகம் இல்லாமலே போய்விடுகிறது. இப்பொழுது அரசாங்கத்தாருடைய பண்ணைச் சாகுபடி மூலமாக ஜனங்களுக்குச் சாகுபடி முறை கற்றுக் கொடுக்கப் பட்டு வந்தாலும், நிலச் சொந்தக்காரர்கள் மோட்டார் வாகனத்தையும், பட்டண வாசத்தையும் விரும்பிப் பட்டணங்களில் குடியேறி விடுவதால் உழவு தொழிலுக்கு வேண்டிய பணஉதவி யில்லாமல் போய்விடுகிறது. இதனால் கிராமங்களின் நெற்பயிர் சாகுபடி அதிகம் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இந்தியாவிலுள்ள மற்ற மாகாணங்களைவிட, சென்னை இராஜதானி நெற் சாகுபடியில் அதிக மேம்பட்டதாயிருந்தும், இங்குங்கூட இப்பொழுது லக்ஷக் கணக்கான டன் அரிசி இறக்குமதியாவது நமது நாட்டின் அறியாமையையும், பிற்போக்கையுங் குறிப்பிடுவதாக யிருக்கின்றது.

மாயமாய்ப்போன மங்கை.

பால விவாகம்

சாரதாச் சட்டம்.

(559-வது பக்கத் தொடர்ச்சி.)

(*Mrs. Neelakanta Sastri Rajammal.*)

நீலா:—மனஸ்தாபம் ஒன்றுமில்லை. எதுவும் நியாயமானதைச் சொன்னேன். ஒரு சுபதினத்தில் நீங்களிருவரும் அக்னி சாக்ஷியாக விவாகம் பலரறியச் செய்து கொள்ளுங்கள்; அப்பொழுது நானும் அவளும் இந்த வீட்டில் சமமாக இருக்கலாம்.

உடனே பத்மநாபன் வாஸ்தவமே. ஏன் அமிர்தம் அப்படியே செய்வது உசிதமல்லவா?

அமிர்தவல்லி:—அய்யோ! இதென்ன கெட்ட மூட வழக்கம்? மனமொப்பிவிட்டால் பிறகு மணமெதற்கு? என்னுடைய உறுதி அது. அந்தக் கலியாணம் காசு செலவழிக்கும் டம்ப வழக்கமே தவிர, நம் இந்துக்களில் அதைப்போன்ற கெட்ட வழக்கம் ஒன்றுமே கிடையாது. எப்படியானாலென்ன? நீலாம்பாள் என்னை ஏற்றுக்கொள்ளமாட்டாள். எனக்குக் கலியாணமும் வேண்டாம். நான் எப்பொழுதும் போலவே யிருப்பேன். நீங்கள் வீணே சங்கடப்படவேண்டாம் என்று வருத்தமாகச் சொல்ல, பத்மநாபன் சஞ்சல புத்தியுடையவனாதலால், நீலா உன் அதிகப் பிரஸங்கிப் பேச்சுகளால் இனி அதட்டி என் மனதைப் புண்படுத்தாதே; உன்னை நான் இவ்வளவு தூரம் நயந்து கேட்டதுகூடப் பிசகுதான்; என் இஷ்டப்படி நானிருப்பேனே தவிர இனி உன்னைக் கேட்டு ஒன்றும் நடத்த முடியாது. உன் கௌரவத்தை நீயே காப்பாற்றிக் கொள்ளவும் என்று கடிந்துரைத்தான். உடனே நீலாவின் தலையில் பெரிய இடி விழுந்திருந்தாலுங்கூடப் பொறுத்திருப்பாள்; பாவம், என்றும் கேட்டறியாததும் பார்த்தறியாததுமான இச்சம்பவம் மிகுதியும் கலவரத்தை உண்டாக்கியது. உடனே அவள் தன்னைத்தானே நிந்தித்துக்கொண்டு புத்தி யில்லாமல் நான் ஏன் பிதற்றி இவ்வளவு கேவலப் படுத்திக்கொண்டேனோ தெரியவில்லை என்று

எண்ணிக்கொண்டு மவுனமாகத் தன்னிருப்பிடம் சென்று விட்டாள். அமிர்தவல்லியின் ஆனந்தத்துக்கோ ரெல்லை யுண்டோ? அவள் உள்ளம் பூரிப்படைந்து தன்னையும் தன்னைச் சுற்றியும் தான் கணவனாகப் பாவித்த பத்மநாபனையும் ஒரு முறை நன்றாகக் கவனித்துக்கொண்டாள். அவள் முகத்தில் சந்தோஷம் குடிகொண்டிருந்தது. அவளுக்காகச் சகல சாமான்களும் பத்மநாபனால் கவனித்து அளிக்கப்பட்டது. அவள் ஒரு பெரிய சீமாட்டிபோல வீற்றிருந்தாள். அவளைக் கண்ட பத்மநாபனுக்கு அளவிறந்த ஆனந்தம் உண்டாயிற்று. அன்றைய மறுநாள் அவர்களுடைய சினேகிதர்கள் எல்லாருக் கும் மிகுந்த சிறப்பாகச் சிற்றுண்டிகளளித்துக் கொண்டாடப் பட்டது. புதிய மணமகளான மிஸ்ஸஸ் அமிர்தவல்லி எல்லோ ராலும் கௌரவிக்கப்பட்டாள். நீலாம்பாள் தன் அறையில் அவளுக்கேற்பட்ட வேலைகளைச் செய்துகொண்டு பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தாள். அன்று முதல் பத்மநாபன் மிகுந்த குதூகல புருஷனாகத் தலைகால் தெரியாமல் ஆடலானான். விருந்துகளும், வேடிக்கைகளும், ஆடல்களும், பாடல்களுமாக அவ்வீடு சதா சந்தடியாகவே யிருந்தது. அமிர்தவல்லியின் அட்டகாஸம் அவ்வீட்டில் நிலைகொண்டது. அவள் எது சொன்னாலும் எது செய்தாலும் அது பத்மநாபனுக்கு வேத வாக்காகவே யிருக்கும். இவ்வளவு நடக்கைகளும் நீலாவுக்கு மிகுந்த அச்சத்தை உண்டாக்கின. இருந்தாலும் வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் உள்ளேயே அடக்கி வைத்துக்கொண்டு தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். உலகத்தில் தற்காலம் நாகரிகம் என்பது இப்படித்தான். தற்கால நாக ரீகத்துக்காதாரமான கல்வி என்பதற்கு மதிப்பில்லாமலாய் விடுகிறது. அமிர்தவல்லி படித்த பெண்ணாயிருந்தும் அவ ளுடைய அடிச் செய்கைகள் வரம்புமீறி ஓட ஆரம்பித்தது. உலகத்தில் படிப்பினால் பெண்கள் கெட்டுப் போகிறார்களென்ற சொல் பிறப்பது அநீதம். படித்த பெண் புத்தி விருத்தியாகி நடையுடை பாவனைகளில் அடக்கமும் அன்பும் விவேகமும் ஏற்பட்டு நன்மதிப்பைப் பெற்று நாட்டிற்கெல்லாம் நன்மை புரியும் நங்கையாய்ப் பிரகாசிப்பதைவிட்டு அநாகரிகமான செயல்களால் நாகரிகங் கொண்டாடிக் கெட்ட வழிகளிலேயே

பிரவிருத்தித்த அமிர்தவல்லியின் கல்வி கால கோடி விஷத்துக்கொப்பானதாயிருந்தது. தெய்வ சக்தி வாய்ந்த கல்வி அமிர்தத்துக்கொப்பல்லவா. பிறவியிலேயே மிகுந்த கெட்ட குணமுள்ள பெண்ணானதால் அமிர்தவல்லி அனேகம் கடுமைகள் நீலா படும்படி செய்து வெகுளியான பத்மநாபனை ஆட்டி வைத்துக் கொண்டிருந்தாள். நல்ல பெண்கள் படித்த பட்டதாரிகள் நிறைகுடமாக நீறுபூத்த நெருப்பேபோல் பிரகாசித்துக்கொண்டும் பிறர் நன்மையிலேயே தன் வாழ்நாட்களைக் கழித்துக்கொண்டும் உள்ள ரத்னங்கள் எவ்வளவோ சொல்லி முடியுமா? விவேகிகளான பெண்கள் இருக்கும் வீடு ஸ்வர்க்கத்துக்கொப்பல்லவா, அவிவேகிகளின் வீடு நரகத்துக்கொப்பாகும். அவர்களால் உலகுக்குப் பிரயோசன மென்பதில்லாவிடினும் அவர்களா லேற்படும் தீங்கைவிட அவரிடத்தில் பிறக்கும் ஆண் பெண்களே முக்கால் வாசி யாயினுங் கொடியராயிருப்பர். இவர்களுடைய விருத்தி சிறிய பொறி பெரிய தீயாவது போல உலகில் ஆ! பெண்ணு என்ற அபவாத மேற்படுத்தி விடுகிறது. ஆவதும் பெண்களால் அழிவதும் பெண்களால். பெண்களை நம்பலாகாதென்ற சொல் பிறந்த பிறகும் உலகத்தில் நல்ல பெண்களும் பெண்கள் தான்; கெட்ட பெண்களும் பெண்கள் தான்.

"பெண்ணொருத்தி பேசில் பெரும்பூமி தானதிரும்
பெண்ணிருவர் பேசில் விழும் வான் மீன்கள்—பெண் மூவர்
பேசிலலை சுவரும் பேதையே பெண்பலர்தாம்
பேசி லுலகென் னுமோ—பின்.

என்றபடி பெண்களுக்கேற்ற இவ்விதமான இழி சொற்களை அறிந்து திருந்தி நடந்தால் அப்பெண்டிரை வானகமும் வையகமும் போற்றும், சேறும் பிள்ளைப் பூச்சியும் போலுமிருந்த திருவள்ளுவர், தம் மனைவியார் பொன்னுலகு புகுந்தபோது துயர் பொறாது,

அடிசிற் கினியாளே அன்புடையாளே
படிசொற் கடவாத பாவாய்—அடிவருடிப்
பின் தூங்கிமுன் எழும்பேதையே போதியோ
என் றூங்கு மென் கணிரா.

என்று எவ்வளவு உருக்கமாகப் பாடியிருக்கிறார். ஆகையால் ஒவ்வொரு பெண்ணும் யாருக்கோ இச்சொற்களென்றிராமல் தனக்குத்

தானென்றெண்ணி இவ்வுலகத்திற்கஞ்சியும் மனச்சாக்ஷிக்குச் சரியாகவும் கடவுளுக்குப் பாத்திரமாகவும் கற்பென்னும் விலை மதிக்க முடியாத நல்லாபரணம் பூண்டு தன் குடித்தனத்துக்கோர் குல விளக்காக விளங்கவேண்டும். அவ்வித கற்பரசியாகிய நீலா அவ் வீட்டிற்கோர் குல தீபமாக விளங்கியும் காலக் கொடுமையால் தன் விதி எவ்வித மெல்லாமிருக்குமோ என்று எண்ணி ஏங்குவாள். அவர்களின் அன்பு காதலாய் மாறிக் களித்திருப்பதைக் காண நீலாவின் மனம் எவ்வளவோ துயரம் அடைந்து பெருமூச்சு விட்டது. என்ன பிரயோசனம்? கற்புள்ள பெண்கள், அதுவும் கணவன் பேரில் முழு நம்பிக்கை வைத்தவள் தன்னைக் கணவன் கொன்றாலும் ஸம்மதமே தவிரப் பிறமாதருடன் இருப்பதைக் கண்டால், தன் புருஷன் மானம் வெளிப்பட்டு நாலுபேர் வாயில் அச்சொல் நடமாடி அதைத் தான் கேட்டுக்கொண்டிருப்பதைவிடப் பிராணனையே விட்டுவிடச் சம்மதிப்பளன்றோ? அது போல, நீலா தன் உயிரையும் வெறுத்தாள். அக்கணமே அவளழகிய குழந்தையின் சிரித்த முகம் அதை மாற்றிவிடும். தன் புருஷன் தன்னை மிகவும் வஞ்சித்து விட்டாரென்ற துக்கம் நெஞ்சை யடைக்கக் கண்ணீர் ஆறாய்ப்பெருக ஸ்தம்பித்து ஒன்றிலுமே பற்றற்றுத் துக்கத்துடனிருப்பாள். எதுவும் அவள் கண்களுக்கு வெறுப்பாக இருந்ததே யொழிய ஒன்றுமே விருப்பில்லாமலிருந்தது. எதற்கும் அவள் வாய் திறவாப் பதுமை போலிருந்தாள். அவளுடைய பொறுமை என்ற பூஷணம் பிரகாசித்து ஜ்வலித்த ஜ்வாலை அமிர்தவல்லியையும் பத்மநாபனையும் தகித்தது. பத்மநாபனோ இருவரிடமும் சமமான அன்புள்ளவனாகவே யிருந்தான். ஆனாலவ்வன்பு எரியும் தீயில் எண்ணெயை விட்டது போலுமிருந்தது நீலாவுக்கு. மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது போல நீலா ஒன்றும் சொல்லாமலிருந்தாலுங்கூடச் சில சமயங்களில் பத்மநாபன் அவளைக் கடிந்தது அவள் ஹிருதயத்தில் வேல்கொண்டு பாய்ச்சினாற்போலு மிருந்தது. இனி, பகவானைத் துதிப்பதைத் தவிர மனிதரை நம்புவதில் மோசமே யென்றுணர்ந்தாள். பிறகு தேறிக் கற்புள்ள மங்கை கணவன் எவ்வளவு கட்டுத்திட்டம் செய்து கடுமைப்படுத்தினாலும் அவளுக்கு அவரைத் தவிர வேறு தெய்வம் ஒன்றுமில்லை. அத்தெய்வம் தன் பொறுமையைச் சோதிக்கவே தன்னை இப்பாடு படுத்துகிறது என்று பொறுமை என்ற பூஷணத்தால் தன்னைப் போர்த்துக் கொண்டாள்.

(தொடரும்)

" அமிர்த குணபோதினி "

பவஹுலத்திய கார்த்திகை மாத பஞ்சாங்கம்.

யோகம்	இங்.	தமிழ்	வார	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள், முதலியவை.
சி	16	1	வெ	தச 23-17, பூட் 35-4, கரிநாள், விஷ்ணுபதி புண்யர்க்கம்.
சி-பி	17	2	சனி	ஏகா 19-8, உட் 32-22, திதிதுவயம், கைசிக-உத்தான-போதன-ஸர்வ ஏகாதசி
அ-சி	18	3	ஞா	துவா 15-32, ரே 30-52, பிரதோஷம், க்ஷீராப்தி பூஜா.
சி	19	4	திங்	திர 12-33, அசு 29-43, துளசீ விவாஹம்.
சி	20	5	செவ்	சசி 10-25, பர 29-29, கபிலபூஜா, தாத்ரீபூஜா, பரணி தீபம்.
அ-சி	21	6	புத	○ 9-31, கிரு 30-30, கிருத்திகா விரதம், கிருத்திக—விஷ்ணு—ஸர்வாலய—தீபம்.
உ-ம	22	7	வியா	பிர 9-46, ரோ 32-43, சாபாயனம் 57-1, கார்த்திக பகுளம்.
சி	23	8	வெ	துவி 11-31, மிரு 36-30.
சி	24	9	சனி	திரி 14-51, ஆரு 41-45.
சி	25	10	ஞா	சது 19-39, புந 48-14, அதிதி, கரிநாள்.
சி	26	11	திங்	பஞ் 25-33, பூச 55-38, பஞ்சமிதிதி.
சி	27	12	செவ்	ஷஷ் 32-14, ஆயி 60-0.
சி	28	13	புத	ஸப் 38-54, ஆயி 3-25.
அ-சி	29	14	வியா	அஷ் 44-57, மக 10-58, கிருஷ்ணாஷ்டமி
சி	30	15	வெ	நவ 49-46, பூர 17-40.
உ-ம	1	16	சனி	தச 52-52, உத் 22-58.
அ-சி	2	17	ஞா	ஏகா 54-4, ஹஸ் 26-28, கரிநாள், ஸர்வ ஏகாதசி.
பி-அ	3	18	திங்	துவா 53-20, சித் 28-5.
சி-ம	4	19	செவ்	திர 50-46, ஸ்வா 27-47. பிரதோஷம்.
சி-அ	5	20	புத	சசி 46-38, விசா 25-49, சிவராத்திரி.
சி-பி	6	21	வியா	● 41-17, அநு 22-32.
ம-அ	7	22	வெ	பிர 35 3, கேட் 18-13.
சி	8	23	சனி	துவி 28-21, மூல 13-20.
சி-அ	9	24	ஞா	திரி 21-25, பூரா 8-13, திதிதுவயம், விரிஞ்சிபுர கடைஞாயிறு.
ம-அ-சி	10	25	திங்	சது 14-34, உரா 3-10, உப 55-14, திருக்கழுக்குன்றம் 1008 சங்கு அபிஷேகம்.
சி-ம	11	26	செவ்	பஞ் 8-8, அவி 54-14.
சி-அ	12	27	புத	ஷஷ் 2-20, உப 54-53, சத 50-44, மித்ர ஸப்தமி.
சி	13	28	வியா	அஷ் 52-55, பூட் 48-0.
சி-அ	14	29	வெ	நவ 49-28 உட் 46-8, பிரளய கல்பாதி.

(Vertical labels: தமிழ் column, rows 2–6: "[illegible] 5—29"; இங். column, rows 6–9: "டிசம்பர்".)

	15௳-உதயத்திற்கு ராசி		கேது
சனி ராகு			
	சுக் ரவி	4 குரு	குஜ

Printed & Published by the Proprietor E. M. Gopalakrishna Kone, at the Amirtha Gunabodhini Press, 158-A, Broadway, Madras.